தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

# தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com

MLM SOFTWARE Company
• Binary MLM Plan
• Single Leg MLM Plan
• Autopool MLM Plan
• Unilevel MLM Plan
• Matrix MLM Plan
• Stairstep MLM Plan
• Party MLM Plan
• Board MLM Plan
• Generation MLM Plan
PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

CHENNAI | Volume- 3 | Issue:247 | 23-03-2026 | திங்கட்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

23.03.2026 பங்குனி 9
திங்கட்கிழமை

சூரிய உதயம் 6.17

**திதி:**
இன்று அதிகாலை 12.15 வரை சதுர்த்தி பின்பு இரவு 9.54 வரை பஞ்சமி பின்பு சஷ்டி .

**நட்சத்திரம்:**
இன்று அதிகாலை 1.26 வரை பரணி பின்பு இரவு 11.54 வரை கார்த்திகை பின்பு ரோகிணி

**யோகம் :**
இன்று மாலை 3.03 வரை விஷ்கம்பம் பின்பு ப்ரீதி

**கரணம்**
இன்று அதிகாலை 12.15 வரை பத்திரை பின்பு காலை 11.05 வரை பவம் பின்பு இரவு 9.54 வரை பாலவம் பின்பு கௌலவம்

**அமிர்தாதி யோகம் :**
இன்று காலை 6.16 வரை சித்த யோகம் பின்பு இரவு 11.49 வரை யோகம் சரியில்லை பின்பு அமிர்த யோகம்.

**சந்திராஷ்டமம் :**
இன்று அதிகாலை 1.26 வரை அஸ்தம் பின்பு இரவு 11.49 வரை சித்திரை பின்பு சுவாதி.

**நல்ல நேரம்**
காலை 6.30 – 7.30.
மாலை 4.30 – 5.30

**இராகு காலம்**
காலை 7.30 – 9.00.

**எமகண்டம்**
காலை 10.30 – 12.00

**குளிகை**
பிற்பகல் 1.30 – 3.00.

இன்று ரம்ஜான் பண்டிகை

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
**இராமமூர்த்தி**
செல்: 8189908040

# மேற்காசிய மோதல், பதற்றம்: பிரதமர் மோடி தலைமையில் உயர்மட்ட ஆலோசனை கூட்டம்



**புதுடெல்லி, மார்ச் 23:**

ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக கடந்த பிப்ரவரி 28-ந்தேதி கடுமையாக தாக்கின. தொடர்ந்து நடந்த தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர்.

ஈரானின் பாதுகாப்பு மந்திரி அமீர் நசீர்ஜடே மற்றும் புரட்சிகர காவல்படை தளபதி முகமது பாக்பூர் உள்ளிட்ட பல முக்கிய அதிகாரிகள், தலைவர்கள், தளபதிகள் கொல்லப்பட்டனர். ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி, அவருடைய மனைவி, மகள், மருமகன் உள்ளிட்ட குடும்பத்தினரும் கொல்லப்பட்டு உள்ளனர். இதனை ஈரான் நாடும் உறுதி செய்துள்ளது. இதனால் மேற்காசிய பகுதியில் கடும் பதற்ற நிலை காணப்படுகிறது.

இதனை தொடர்ந்து ஈரான் நடத்தி வரும் பதிலடி தாக்குதல்களால் இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் அவற்றின் படை தளங்கள் அமைந்த வளைகுடா நாடுகள் பாதிக்கப்பட்டு உள்ளன. இதனால், வான், கடல் வழி போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. பல்வேறு நாடுகளிலும் எரிபொருள் பற்றாக்குறை, விலைவாசி உயர்வு உள்ளிட்ட சிக்கல்கள் எழுந்துள்ளன.

மேற்காசிய மோதல், பதற்றம் நிறைந்த சூழலில், டெல்லியில் பிரதமர் மோடி, மத்திய மந்திரிகள் அமித்ஷா, ராஜ்நாத் சிங், ஜே.பி. நட்டா, சிவராஜ் சிங் சவுகான் உள்ளிட்டோர் தலைமையில் உயர்மட்ட ஆலோசனை கூட்டம் நடந்து வருகிறது. பெட்ரோல், கச்சா எண்ணெய், எரிவாயு, மின்சாரம் மற்றும் உரம் உள்ளிட்ட துறைகளில் நிலைமையை பற்றி ஆய்வு செய்வதற்காக இந்த கூட்டம் நடைபெறுகிறது என கூறப்படுகிறது.

இதில், நாடு முழுவதும் தடையற்ற விநியோகம், பொருட்கள் கையிருப்பு மற்றும் திறம்பட விநியோகித்தல் ஆகியவற்றை உறுதி செய்வதில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்ற வகையில் ஆலோசனை நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ‘எதிரிகளை தவிர மற்ற அனைவருக்கும் ஹார்முஸ் நீரிணை திறப்பு’

## ஈரான் அறிவிப்பு



**தெஹ்ரான், மார்ச் 23:**

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்த தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். இதற்கு பதிலடியாக அரபு நாடுகளில் உள்ள அமெரிக்காவின் ராணுவ நிலைகள் மீது ஈரான் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது.

சுமார் 3 வாரங்களுக்கு மேல் நீடித்து வரும் இந்த போரில், ஈரான் முற்றிலும் சீரழிந்து விட்டதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார். குறிப்பாக ஈரானின் கடற்படை, விமானப்படை அனைத்தும் நிர்மூலமாக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. ஆனாலும் ஈரான் தொடர்ந்து ஏவுகணை தாக்குதல்களை நடத்தி வருகிறது.

குறிப்பாக இஸ்ரேலின் அரணாக விளங்கும் ’அயர்ன் டோம்’ பாதுகாப்பு அம்சத்தை தாண்டி, ஈரானின் ஏவுகணைகள் மற்றும் கொத்துக்குண்டுகள் அந்த நாட்டை பதம் பார்த்து வருகின்றன. இதில் ஜெருசலேம், டெல் அவிவ் நகரங்கள் பெரும் சேதத்தை சந்தித்து வருகின்றன.

இதற்கிடையில் ஹார்முஸ் நீரிணையை ஈரான் மூடியதால், அந்த வழியாக எண்ணெய் சரக்கு கப்பல்களின் போக்குவரத்து தடைபட்டுள்ளது. இதனால் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தது. இந்தியா உள்பட பல்வேறு நாடுகளில் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டு, பொருளாதாரத்தில் கடும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

இந்த சூழலில், அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், “ஈரான் எந்தவித அச்சுறுத்தலையும் ஏற்படுத்தாமல் ஹார்முஸ் நீரிணையை 48 மணி நேரத்திற்குள் முழுமையாக திறக்க வேண்டும். இல்லையெனில், ஈரானின் பல மின் நிலையங்களை அமெரிக்கா தாக்கி முற்றிலும் அழித்துவிடும். மிகப்பெரிய மின் நிலையத்திலிருந்து தாக்குதல் தொடங்கப்படும்" என்று எச்சரிக்கை விடுத்தார்.

இந்த நிலையில், தங்கள் எதிரிகளை தவிர மற்ற அனைவருக்கும் ஹார்முஸ் நீரிணை திறக்கப்பட்டுள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது. இது குறித்து சர்வதேச கடல்சார் அமைப்புக்கான (IMO) ஈரான் தூதர் அலி மவுசவி கூறுகையில், “ராஜதந்திர வழிகளுக்கு ஈரான் எப்போதும் முன்னுரிமை அளிக்கிறது. இருப்பினும், ஆக்கிரமிப்பை முழுமையாக நிறுத்துவதும், பரஸ்பர நம்பிக்கையும் அதைவிட முக்கியமானவை.

ஹார்முஸ் நீரிணையில் நிலவும் தற்போதைய சூழ்நிலைக்கு, ஈரானுக்கு எதிரான இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் தாக்குதல்களே மூலக் காரணம் ஆகும். ஈரானின் எதிரிகளுடன் தொடர்புடைய கப்பல்களைத் தவிர, மற்ற அனைத்து கப்பல்களுக்கும் ஹார்முஸ் நீரிணை திறந்தே உள்ளது. ஈரானுடன் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பதன் மூலம் இந்த குறுகிய நீர்வழிப்பாதை வழியாக பயணம் செய்வது சாத்தியமாகும்” என்று தெரிவித்தார்.

# 8,931 நாட்கள்: இந்திய அரசாங்கத்தில் நீண்ட காலம் பதவி

**புதுடெல்லி, மார்ச் 23:**

இந்திய அரசாங்கத்தில் நீண்ட காலம் பதவி வகித்த தலைவராக பிரதமர் நரேந்திர மோடி புதிய சாதனை படைத்துள்ளார். குஜராத் முதல்வராகவும், பின்னர் பிரதமராகவும் மொத்தம் 8,931 நாட்கள் (தற்போது வரை) பதவி வகித்து வருகிறார். இதன் மூலம் நீண்ட காலம் ஆட்சியில் இருந்த தலைவராக அவர் சாதனை படைத்துள்ளார். இதற்கு முன்பு சிக்கிம் முதல்வராக பவன் குமார் சாம்லிங் 8,930 நாட்கள் பதவி வகித்து சாதனை படைத்திருந்தார். அந்த சாதனையை பிரதமர் மோடி தற்போது முறியடித்துள்ளார்.

முன்னதாக, இந்த மாத தொடக்கத்தில் பிரதமர் மோடியின் யூடியூப் சேனல் பின்தொடர்பாளர்கள் எண்ணிக்கை 30 மில்லியனை எட்டியது. அதேபோல், இன்ஸ்டாகிராமில் 100 மில்லியன் பேர் அவரை பின்தொடர்கின்றனர். பதவியில் உள்ள உலக தலைவர்களில் இவ்வளவு அதிகமான பின்தொடர்பாளர்களை கொண்ட முதல் தலைவர் என்ற பெருமையும் மோடிக்கு கிடைத்துள்ளது.

## பிரதமர் மோடி சாதனை



## விடுமுறையே இல்லாமல் 24 ஆண்டுகள் பிரதமர் மோடிக்கு அமித்ஷா புகழாரம்

பிரதமர் மோடி தலைமையில் மத்தியில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி நடந்து வருகிறது. இதில், சுதந்திரத்திற்கு பின்னர், பா.ஜ.க.வை மக்களவை தேர்தலில் தொடர்ந்து 3 முறை வெற்றி பெற செய்த சாதனையை அவர் படைத்துள்ளார்.

இந்நிலையில், அவர் குஜராத் முதல்-மந்திரி மற்றும் பிரதமர் என மொத்தம் 8,931 நாட்கள் தலைமை பதவியை வகித்து, சிக்கிம் முன்னாள் முதல்-மந்திரி பவன் குமார் சாம்லிங்கின் (8,930) சாதனையை முறியடித்து உள்ளார். இதற்கு மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா புகழாரம் தெரிவித்து உள்ளார்.

அவர் வெளியிட்ட செய்தியில், பல தசாப்தங்களாக மேற்கொண்டு வரும் சேவையால், பிரதமர் மோடி சகாப்தம் ஒன்றை வடிவமைத்து உள்ளார். ஏழைகளுக்கான உரிமைகளை பெற்று தந்ததில் ஆகட்டும், வளர்ச்சியில் புதிய சாதனை அல்லது உலக தளங்களில் தேசத்தின் பெருமையை மிளிர செய்தது என மோடியின் சகாப்தம் இந்தியாவை குறிப்பிடத்தக்க அங்கீகாரம் பெறும் வகையில் உருமாற்றியுள்ளது.

விடுமுறையே இல்லாமல் 24 ஆண்டுகள் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் பணியாற்றி உள்ளார். அதனாலேயே, 3 முறை குஜராத் முதல்-மந்திரியாகவும், 3 முறை இந்தியாவின் பிரதமர் ஆவதற்கும் மக்களிடம் இருந்து முன்னெப்போதும் இல்லாத வகையிலான அன்பை அவர் பெற்றுள்ளார் என்பது தெளிவாக தெரிய வருகிறது. ஒவ்வொரு நாளும் அவர் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை, பாசம் மற்றும் ஆதரவு வளர்ந்து வருகிறது என கூறியுள்ளார்.

## அரசு தலைமை பதவியில் நீண்ட காலம் சேவையாற்றும் பிரதமர் மோடிக்கு ஜே.பி. நட்டா புகழாரம்

பிரதமர் மோடி மக்களவை தேர்தலில் தொடர்ந்து 3 முறை வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார். மத்தியில் அவருடைய தலைமையில் மத்தியில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி நடந்து வருகிறது. அதனுடன், குஜராத் முதல்-மந்திரி மற்றும் பிரதமர் என மொத்தம் 8,931 நாட்கள் தலைமை பதவியை வகித்து, சிக்கிம் முன்னாள் முதல்-மந்திரி பவன் குமார் சாம்லிங்கின் (8,930) சாதனையை முறியடித்து உள்ளார். 24 ஆண்டுகள் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் ஈடுபாட்டுடன் பணியாற்றி வரும் அவருக்கு பல்வேறு தலைவர்களும் புகழாரம் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், பா.ஜ.க.வின் முன்னாள் தலைவரான ஜே.பி. நட்டா அவரை புகழ்ந்து பேசியுள்ளார். இதுபற்றி அவர் வெளியிட்ட செய்தியில், முன்னாள் முதல்-மந்திரி சாம்லிங்கின் சாதனையை பிரதமர் மோடி முறியடித்து இருக்கிறார். அரசு தலைமை பதவியில் நீண்ட காலம் சேவையாற்றி வருகிறார்.

ஈடு இணையற்ற உள்ளார்ந்த செயல்பாட்டிற்கான சேவை மற்றும் அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கிறது என கூறியுள்ளார்.

# மார்ச் 26 வரை அதிகபட்ச வெப்பநிலை 5 டிகிரி உயர வாய்ப்பு

**சென்னை, மார்ச் 23:**

தமிழகத்தில் நாளை முதல் மார்ச் 26-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட ஓரிரு இடங்களில் 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மன்னார் வளைகுடா முதல் தெற்கு மத்திய மகாராஷ்டிரா வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக நாளையும் (மார்ச் 23), நாளை மறுதினமும் கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். 25, 26 தேதிகளில் தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 27, 28 தேதிகளில் கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் நாளை முதல் மார்ச் 26-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட ஓரிரு இடங்களில் 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 95 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 79 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.


# இஸ்ரேல் அணுசக்தி நிலையத்துக்கு ஈரான் தாக்குதல்: 100 பேர் காயம்

**டெஹ்ரான், மார்ச் 23:**

இஸ்ரேலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அந்நாட்டில் உள்ள அணுசக்தி நியைங்கள் மீது ஈரான் தாக்குத்ல் நடத்தியது. இதில் 100க்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்துள்ளனர்.

ஈரான் மீதான இஸ்ரேல் மற்றும் அமெரிக்கப் படைகளின் தாக்குதல் 3வது வாரத்தை தாண்டி உள்ளது. போர் முடிவுக்கு வரும் அறிகுறியே காணப்படவில்லை. இதனால், பதற்றம் அதிகரித்து வருகிறது.

பதிலுக்கு பதில் தாக்குதல்;
இஸ்ரேல் அணுசக்தி நிலையம் மீது ஏவுகணை வீசியது ஈரான்



பதிலுக்கு பதில் தாக்குதல்;
இஸ்ரேல் அணுசக்தி நிலையம் மீது ஏவுகணை வீசியது ஈரான்

ஈரானின் நடான்ஸ் அணுசக்தி நிலையம் மீது இஸ்ரேல் விமானப்படை மூலம் தாக்குதல் நடத்தியது. இதற்கு பழிவாங்கும் வகையில், இஸ்ரேலின் அணுசக்தி நிலையங்களை குறிவைத்து ஈரான் ஏவுகணைகளை வீசியது. டைமோனா மற்றும் அராத் பகுதிகளில உள்ள அணுசக்தி நிலையங்களை நோக்கி ஏவுகணைகள் வீசப்பட்டன. டைமோனா பகுதியில் உள்ள அணு ஆராய்ச்சி மையத்தை நோக்கி ஏவுகணைகள் வந்தன. அதில் ஒன்று அந்த பகுதியில் உள்ள கட்டடத்தில் விழுந்தது. மற்றொன்று தரையில் விழுந்தது. இந்த ஏவுகணைகளை, இஸ்ரேலில் உள்ள ஏவுகணை எதிர்ப்பு அமைப்பால் தடுக்க முடியவில்லை என்பது தெரியவந்துள்ளது. இதில், அராத் பகுதியில் 84 பேரும், டைமோனா பகுதியில் 33 பேர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
➤ Public Notice ➤ Loss of Share
➤ Legal Notice ➤ Merger
➤ Tender Notice ➤ Acquisition
➤ Society Notice ➤ AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர் 9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

Follow our WhatsApp Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel

## திருக்குறள் குறள்-567

**கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்**



கடுமையான சொல்லும்
முறைகடந்த தண்டனையும்
அரசனுடைய வெற்றிக்கு
காரணமான வலிமையைத்
தேய்க்கும் அரம் ஆகும்.

## சிந்திக்க ஒரு நொடி



தேவையானது
தேவையற்றது என்று
ஒன்றும் இல்லை
காலம் அறிந்து
தேடுதல்
தேவையானது.காலம்
கடந்து தேடுவது
தேவையற்றது

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## திருமோகூர் ஆப்த்தன் சிறப்பு வழிபாடு




சனிக்கிழமை ஆஸ்தானம் திருமோகூர் ஆப்த்தன் சிறப்பு வழிபாடு அர்ச்சனை நடைபெற்றது (உலகசேமத்திற்காக)

## திவ்ய அலங்கார சேவை



திருக்குறுங்குடி ஸ்ரீநம்பி சன்னதி மஹா ஸம்ப்ரோக்ஷணம் அங்குரார்ப்பணம் திவ்ய அலங்கார சேவை.

## ஹனுமந்த வாகனம்



திருப்பதி ஸ்ரீகோதண்டராமர் பிரமோற்சவம் 6ம் திருநாள் காலை ஹனுமந்த வாகனம் புறப்பாடு.

# தாய்லாந்தில் ஈகைத் திருநாள் கொண்டாட்டம்!



**பேங்காக், மார்ச் 23:**

புனித ரமலான் மாதம் முழுவதும் நோன்பிருந்து அதன் முடிவில் ஈதுல் ஃபித்ர் பெருநாளை, ஈகைத் திருநாளை சிறப்புடன் கொண்டாடுவது உலக முஸ்லிம்களின் வழக்கம்! அவ்வாறே தாய்லாந்து தலைநகர் பேங்காக்கில் அமைந்துள்ள 'பேங்காக் பள்ளி'யில் தாய்லாந்து தமிழ் முஸ்லிம் சங்கம் சார்பாக ஈத் பண்டிகை வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது!

நிகழ்வில் சொற்பொழிவு, சிறப்புத் தொழுகை, மக்கள் நலம் மற்றும் உலக அமைதி உள்ளிட்ட வேண்டல்கள் கொண்ட பிரார்த்தனை ஆகியன நடைபெற்றன!

நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்தித் தந்த பள்ளியின் தலைமை இமாம் சபீர் அஹமது மிஸ்பாஹி அவர்களை (படத்தில் இடமிருந்து வலம் மூன்றாவதாக இருப்பவர்) நீடூர் அ.முஹம்மது நிஜாமுத்தீன், முஹம்மது நூஹு மற்றும் ஜமால் முஹம்மது ஆகியோர் சந்தித்தபோது எடுத்த படம்.

மதியம் லுஹர் தொழுகைக்குப் பின்னால் அனைவருக்கும் விருந்து பரிமாறப்பட்டது! ஆண்களும் பெண்களும் சுமார் 1000 பேர்கள் இரு நிகழ்வுகளிலும் கலந்து கொண்டார்கள்.

# பூந்துறையில் ஒருசேர மூன்று கோவில்களின் கும்பாபிஷேகங்கள்

**ஈரோடு, மார்ச் 23:**

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி வட்டம் பூந்துறைகாடை குலமக்களின் குலதெய்வமான ஸ்ரீஅங்காளம்மன், ஸ்ரீ ஸ்ரீஅலமேலு மங்கை -ஸ்ரீலட்சுமி சமேத ஸ்ரீதாமோதர பெருமாள் மற்றும் ஸ்ரீபாகம்பிரியாள் உடனமர் ஸ்ரீபுஷ்பவனேஸ்வரர் ஆகிய ஆலயங்களைச் சீரமைத்து பிரமாண்டமாக புதுப்பொலிவுடன் 25.03.2026 புதன்கிழமை அன்று ஒரே நாளில் அதிகாலை முறையே 5.00 - 5.30, 6.00- 6.30 மற்றும் 9.00- 9.30 மணி அளவில் மகாகும்பாபிஷேகங்கள் நடைபெற உள்ளன.



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், பூந்துறை கிராமம்
தமிழ்நாடு அரசு இந்துசமய அறநிலையத்துறைக்கு உட்பட்ட
அருள்தரும் பாகம்பிரியாள் உடனமர்
அருள்மிகு புஷ்பவனேஸ்வர சுவாமி
ஸ்ரீ அலமேலு மங்கை லக்ஷ்மி சமேத
ஸ்ரீ தாமோதரப் பெருமாள்
அருள்தரும் அங்காளம்மன்
ஆகிய திருக்கோவில்களின்
ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன
மஹா கும்பாபிஷேகம், மஹா சம்ப்ரோக்ஷணம்
எனும் திருக்குட நன்னீராட்டு
பெருவிழா அழைப்பிதழ்
பங்குனி 11-ஆம் நாள் 25.03.2026 புதன்கிழமை
நேரம் : காலை 5.45 மணிக்குமேல் 10.00 மணிக்குள்


லட்சக்கணக்கான மக்கள் பூந்துறையில் கூடும் மகாகும்பமேளா போன்ற ஜனத்திரளைக் காணலாம். மேற்படி கும்பாபிஷேகங்களை முன்னிட்டு பூந்துறை சுற்றுவட்டாரத்தில் பல பகுதிகளில் இருந்து தாய்மார்கள், மகளிர் என ஆயிரக்கணக்கானோர் தங்கள் தங்கள் ஊரிலிருந்து எட்டு நாட்கள் முன்பு போட்டு வைத்திருந்த முளைப்பாரியை பூந்துறை கொண்டு வந்து மேளதாளம் முழங்க ஈஸ்வரன் கோவிலில் ஒரு பகுதி முளைப்பாரிகளை வைத்து விட்டு அங்காளம்மன் மற்றும் பெருமாள் கோவில்களுக்கு மாபெரும் ஊர்வலமாக கொண்டு சென்று முளைப்பாரிகளை வைத்து வழிபாடு செய்தனர். பின்னர் 12.00 மணியளவில் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

மதியம் 1.00 மணி அளவில் சுமார் 60 பஸ்களில் ஆண்கள் பெண்கள் என இருபால் அன்பர்களும் பவானி கூடுதுறை காவேரி ஆறு சென்று தீர்த்தம் கொண்டு வர புறப்பட்டு சென்றனர்.

மாலை 4.00 மணி அளவில் பூந்துறை கிராமம் கொளாங்காட்டுவலசு அருகே இருந்து பாத யாத்திரையாக மூன்று கோவில்களுக்கும் செல்கிறார்கள். அலங்கரிக்கப்பட்ட யானை, குதிரை, மாடு, ஒட்டகம், இளைஞர்களின் பெருஞ்சலங்கை ஆட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், சிலம்பாட்டம் என கட்டுக்கோப்பாக, பண்பாக, அழகாக முன்செல்ல, தீர்த்தங்கள் தொடர்ந்து வர கோவிலைச் சென்றடைகிறது.

குடிநீர், டீ, காபி, சாப்பாடு என அனைத்துவகையான ஏற்பாடுகளையும் கோவில் கமிட்டியினர் சிறப்பாக செய்து வருகின்றனர். வருகிற 25.03.2026 புதன்கிழமை காலையில் நடைபெறும் மூன்று திருக்கோவில்களின் கும்பாபிஷேகங்களைக் காண வாருங்கள். அன்போடும், மகிழ்வோடும், நலமோடும், வளமோடும் வாழலாம் வாருங்கள் என்று அன்போடு அழைக்கிறோம்

நன்றி! வணக்கம்!
வாழ்க வளமுடன்



சென்னையில் இன்றும் நாளையும் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், அதிகபட்ச வெப்பநிலை 34-35° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 25-26° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மருதாடு கோவிலில் பரிகார பூஜை..!



**வந்தவாசி, மார்ச் 23:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த மருதாடு ஸ்ரீஇந்திரப் பிரசாதவல்லி உடனுறை ஸ்ரீபுரந்தரீஸ்வரர் திருக்கோயிலில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை தோறும் நாகதோஷம், விலகவும், திருமண தடை விலகவும், குழந்தை இல்லாத தடை விலகவும், ராகு கேது பரிகார பூஜை நடைபெற்று வருகிறது.

நேற்று நடைபெற்ற சிறப்பு பூஜையில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## அண்ணாமலையார் ஆலயத்தில் நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம்



திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் ஆலயத்திற்கு பக்தர்கள் சுமார் 5 மணி நேரத்திற்கு மேலாக நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தார்கள். நான்கு நாட்கள் விடுமுறை என்பதால் லட்சக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## பெருமாள் பிரம்மோற்சவம்



மதுரை ஸ்ரீஸ்ரீநிவாஸப் பெருமாள் பிரம்மோற்சவம் முதலாம் திருநாள் - ஹம்ஸ வாகனம்.

## LPG ஏற்றி வந்த PYXIS PIONEER சரக்குக் கப்பல்




மத்திய கிழக்கு போர் சூழலில் வளைகுடா நாடுகளுடன் முக்கிய வர்த்தக பாதையான ஹார்முஸ் ஜலசந்தி ஈரான் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்தியக் கொடி ஏந்திய இரண்டு பெரிய எல்பிஜி டேங்கர் கப்பல்களுக்கு ஹார்முஸ் ஜலசந்தி வழியாகச் செல்ல ஈரான் அதிகாரிகள் சிறப்பு அனுமதி வழங்கியிருந்தனர். இந்நிலையில், அமெரிக்காவில் இருந்து கூடுதல் LPG இறக்குமதி செய்ய இந்தியா தொடங்கியுள்ளது. அமெரிக்காவின் டெக்சாஸ் நகரிலிருந்து LPG ஏற்றி வந்த PYXIS PIONEER சரக்குக் கப்பல், மங்களூர் துறைமுகத்தை வந்தடைந்தது.

## பெருமாள்,ஆண்டாள் பிரதிஷ்டை சிறப்பு வழிபாடு

**கள்ளக்குறிச்சி மார்ச் 23:**

ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் புதியதாக பெருமாள் மற்றும் ஆண்டாள் உற்சவ மூர்த்திகள் பிரதிஷ்டை செய்து சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால்,துளசி மாலைகளால் அலங்காரங்கள், தங்க ஆபரணங்களால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், தீபாராதனையும் நடைபெற்றது.

ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு பெருமாளையும், ஆண்டாளையும் வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**



## ஸ்ரீராமநவமி உத்ஸவம்



ஸ்ரீராமநவமி உத்ஸவம் நாள்-4 ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் (ஸ்ரீஸ்ரீராமர்) பெரிய மாடவீதி புறப்பாடு தவன பங்களா விலிருந்து @.Triplicane partha sarathi perumal Kovil Chennai

# தேர்தல் கொண்டாட்டம் 2026



## இவர்கள் கூறுவதென்ன?

### 5 தொகுதிகளை ஏற்க முதல்வர் கேட்டுக்கொண்டார் - சண்முகம் பேட்டி



தொகுதி பங்கீடு தொடர்பாக திமுக, தனது கூட்டணி கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இந்த நிலையில், மார்க்சிஸ்ட் கம்ப்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலர் சண்முகத்துடன் தொகுதி பங்கீடு தொடர்பாக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த பேச்சுவார்த்தைக்கு பின்னர் சண்முகம் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது; "நாங்கள் 6 தொகுதிகள் கேட்டோம். "புதிய கட்சிகள் வந்துள்ளன. மற்ற கட்சிகள் போன்று மார்க்சிஸ்டும் தொகுதிகளை குறைத்துக்கொள்ள வேண்டும்.. எனவே 5 தொகுதிகளை ஏற்றுக்கொள்ளுங்கள் என முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டார். தொகுதிகள் ஒதுக்கீடு செய்வதில் சிரமம் இருப்பதாக முதல்வர் கூறினார்.

முதல்வர் கூறி இருப்பதால், அதனை பரிசீலிக்க வேண்டியது எங்கள் கடமை. முதல்வரின் கோரிக்கை தொடர்பாக எங்கள் நிர்வாகக் குழு கூடி முடிவு எடுக்கும். அனைத்தும் வெளிப்படையாக நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. இதில் ரகசியம் ஏதுமில்லை. முதலில் எத்தனை தொகுதிகள் என்பது முடிவுசெய்யப்படும். அதன் பின்னர் எந்த தொகுதியில் போட்டியிடுவது என்பது குறித்த பட்டியல் வெளியிடப்படும். சென்னையிலும் போட்டியிட ஒரு தொகுதியை திமுகவிடம் கேட்டுள்ளோம். கொள்கைப் பூர்வமாக தீர்மானத்தின் அடிப்படையில் திமுக அணியில் நாங்கள் நீடிக்கிறோம். எத்தனை தொகுதிகள் கொடுக்கிறார்கள்? என்பதை பொறுத்து இந்த அணியில் நீடிக்கலாமா வேண்டாமா? என்று முடிவு செய்யும் கட்சி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கிடையாது. "

இவ்வாறு அவர் கூறினார்.

### சட்டசபை தேர்தல்: முன்னாள் அமைச்சர் பொன்முடி போட்டியில்லை?

**சென்னை, மார்ச் 23:**

தமிழக சட்டசபைக்கு ஏப்ரல் 23-ந்தேதி தேர்தல் நடைபெறுகிறது. தேர்தலை எதிர்கொள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் தயாராகிவிட்டன. தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் வருகிற 30-ந்தேதி தொடங்கவுள்ள நிலையில் பிரதான கட்சிகளான தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. தங்களது கூட்டணிகளை இறுதி செய்யும் பணியில் தீவிரமாக உள்ளன. இதில் தி.மு.க., ஒருபுறம் கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீடு, மறுபுறம் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட விருப்ப மனு அளித்திருந்தவர்களிடம் நேர்காணல் என பரபரப்பாக இயங்குகிறது. வேட்பாளர்களை தேர்வு செய்யும் பணியிலும் திமுக மும்மரமாக ஈடுபட்டு வருகிறது. சில தொகுதிகளில் புது முகங்களுக்கு வாய்ப்பு கொடுக்க இருப்பதாக கூறப்படுகிறது. இந்த நிலையில், நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் திமுக முன்னாள் அமைச்சர் பொன்முடி போட்டியிடவில்லை என தகவல் வெளியாகியுள்ளது. விழுப்புரம் மாவட்ட தொகுதிகளுக்கான வேட்பாளர் நேர்காணல் இன்று நடக்கும் நிலையில், பொன்முடி ஏற்கனவே விருப்ப மனு அளிக்கவில்லை. இதனால் அவர் இந்த தேர்தலில் போட்டியிட்ட மாட்டார் என தகல் வெளியாகியுள்ளது. 1989 முதல் 8 சட்டமன்றத் தேர்தலில் பொன்முடி தொடர்ச்சியாக போட்டியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. சர்ச்சைக்குரிய கருத்துகளை கூறியதால் அமைச்சர் பதவியில் இருந்து பொன்முடி நீக்கப்பட்டார். தற்போது அவர் எம்.எல்.ஏ.வாக இருந்து வருகிறார். திருக்கோவிலூர் தொகுதியில் போட்டியிட பொன்முடியின் மகனும், முன்னாள் எம்.பி.யுமான கவுதம சிகாமணி விருப்ப மனு அளித்துள்ளார்.

### 'புதுச்சேரியில் கூட்டணி தர்மத்துக்காக 2 தொகுதிகளை ஏற்றோம்' - அ.தி.மு.க.

புதுச்சேரியில் 15-வது சட்டமன்ற தேர்தல் வரும் ஏப்ரல் 9-ந்தேதி நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள என்.ஆர்.காங்கிரஸ்-பா.ஜ.க. இடையே நேற்று தொகுதி பங்கீடு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டது.

இதன்படி என்.ஆர்.காங்கிரஸ் கட்சி 16 இடங்களிலும், பா.ஜ.க. உள்ளிட்ட பிற கட்சிகளுக்கு 14 இடங்களிலும் போட்டியிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் பா.ஜ.க. கூட்டணியில் உள்ள அ.தி.மு.க.வுக்கு 2 இடங்களும், புதிதாக தொடங்கப்பட்ட லட்சிய ஜனநாயக கட்சிக்கு 2 இடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இது குறித்து புதுச்சேரி அ.தி.மு.க. செயலாளர் அன்பழகன் செய்தியாளர்களிடம் கூறியதாவது;- "புதுச்சேரியில் உப்பளம், உருளையன்பேட்டை ஆகிய 2 தொகுதிகளில் அ.தி.மு.க. போட்டியிடுகிறது. கூட்டணி தர்மத்துக்காக அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அனுமதியுடன் 2 தொகுதிகளை ஏற்றோம். கடந்த தேர்தலில் போட்டியிட்ட 5 தொகுதிகளிலும் வெற்றி வாய்ப்பை இழந்தோம். இந்த முறை 2 தொகுதிகளிலும் வெல்வோம். புதுச்சேரியில் மீண்டும் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும்." இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## வாக்காளர் அடையாள அட்டையில் எழுத்துப்பிழை இருந்தாலும் பொருட்படுத்த தேவையில்லை: தேர்தல் கமிஷன்

தேர்தல் கமிஷன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

வாக்காளர்கள் தங்களின் உரிமையை மிகவும் பயனுள்ள முறையில் பயன்படுத்த வேண்டும். அதில் ஆள்மாறாட்டம் செய்யப்படுவதை தடுப்பதற்காக, வாக்குப்பதிவின்போது வாக்காளர்கள் தங்களுடைய அடையாளத்தை மெய்ப்பிக்க வேண்டும். இதற்கு ஒரு வழி, வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை காட்டுவதுதான்.

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை காட்ட முடியாமல் போய்விட்டால், அவர்கள் வாக்களிக்க அனுமதி மறுக்கப்படக்கூடும். எனவே அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்க முடிவு செய்யப்பட்டு, பட்டியலில் பதிவு செய்யப்பட்ட 100 சதவீத வாக்காளர்களுக்கும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.



அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ள அனைத்து வாக்காளர்களும் ஓட்டு போட வரும்போது வாக்குச்சாவடியில் தங்கள் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்கான வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க வேண் டும் என உத்தரவிடப்பட்டு உள்ளது.

ஆனாலும் அடையாள அட்டையை அளிக்க இயலாத வாக்காளர்கள், அவர்களின் அடையாளத்தை காட்டுவதற்காக ஆதார் உள்பட 12 அடையாள அட்டைகளை தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையால் வாக்காளரின் அடையாளம் மெய்ப்பிக்கப்படுகிறபோது, அதிலுள்ள அச்சுப்பிழைகள் அல்லது எழுத்துப் பிழைகள் போன்றவற்றை பொருட்படுத்த தேவையில்லை.

மற்றொரு சட்டமன்ற தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரியால் வழங்கப்பட்டுள்ள வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை ஓட்டுப் போடுவதற்காக வாக்குச்சாவடியில் கொடுக்கலாம்.

ஆனால் அந்த வாக்காளர் வாக்களிப்பதற்காக வந்துள்ள வாக்குச்சாவடிக்கான வாக்காளர் பட்டியலில் அவரது பெயர் இடம் பெற்றிருக்க வேண்டும்.

அப்போது அவரது வாக்காளர் அடையாள அட்டை ஏற்கப்பட்டு வாக்களிக்க அனுமதி அளிக்கப்படும். புகைப்படம் பொருந்தாததால் வாக்காளரின் அடையாளத்தை மெய்ப்பிக்க இயலாமல் போனால், 12 மாற்று புகைப்பட ஆவணங்களில் ஏதாவது ஒன்றை அளிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### சட்டமன்ற தொகுதிகளுக்கு வாக்கு இயந்திரங்களை அனுப்பும் முதற்கட்ட ஒதுக்கீடு நிறைவு

புதுச்சேரி, அசாம் மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் வரும் ஏப்ரல் 9-ந்தேதி நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலுக்கான ஆயத்தப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும், விவிபாட் இயந்திரங்களின் முதற்கட்ட குலுக்கல் முறை ஒதுக்கீடு நிறைவு பெற்றுள்ளது.

இது தொடர்பாக இந்திய தலைமை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "கடந்த 15-ந்தேதி 5 மாநில தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டன. அதன்படி வரும் ஏப்ரல் 9-ந்தேதி புதுச்சேரி, அசாம், கேரளாவில் சட்டமன்ற தேர்தலும், மேலும் 6 மாநிலங்களில் இடைத்தேர்தல்களும் நடைபெற உள்ளன.

தேர்தல் விதிமுறைகளின்படி வாக்குப்பதிவு இயந்திரங்கள் 2 கட்டங்களாக ஒதுக்கப்படுகின்றன. தற்போது மாவட்ட கிடங்குகளில் இருந்து சட்டமன்ற தொகுதிகளுக்கு வாக்கு இயந்திரங்களை அனுப்பும் முதற்கட்ட ஒதுக்கீடு நிறைவடைந்துள்ளது.

இந்த ஒதுக்கீடு அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகளால், அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் வெளிப்படையாக நடத்தப்பட்டது. குலுக்கல் முறையில் ஒதுக்கப்பட்ட இந்த இயந்திரங்களின் பட்டியல், அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரங்கள் தற்போது அந்தந்த சட்டமன்ற தொகுதிகளில் உள்ள பாதுகாப்பு அறைகளில் வைக்கப்படும். வேட்பு மனுக்கள் இறுதி செய்யப்பட்ட பிறகு 2-ம் கட்ட குலுக்கல் நடத்தப்பட்டு, ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் எந்த இயந்திரம் செல்லும் என்பது தீர்மானிக்கப்படும்.

அந்த வாக்கு இயந்திர பட்டியலும், போட்டியிடும் வேட்பாளர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும். தேர்தல் நடைமுறையில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புதுச்சேரி: தவெகவில் தஞ்சம் அடையும் அரசியல் பிரமுகர்கள்



தமிழகம், புதுச்சேரியில் த.வெ.க. தனித்து போட்டியிடுகிறது என அந்த கட்சியின் தலைவர் விஜய் அறிவித்துள்ளார்.

புதுச்சேரி முதல்-அமைச்சர் ரங்கசாமி தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து விலகி த.வெ.க.வுடன் கூட்டணி அமைப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் தேசிய ஜனநாயக கூட்டணியில் தொடர்ந்து நீடிக்கிறார்.

எனவே புதுவையில் 30 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவிக்க வேண்டிய கட்டாயம் த.வெ.க.வுக்கு ஏற்பட்டுள்ளது. பா.ஜனதா, என்.ஆர்.காங்கிரஸ், காங்கிரஸ், தி.மு.க. போன்ற கட்சிகளில் சீட் இடம் கிடைக்காதவர்கள் மாற்று கட்சிகளுக்கு செல்ல வாய்ப்பு உள்ளது.

பிற கட்சிகளில் இருந்து ஓரம் கட்டப்படுபவர்களை மற்ற கட்சியில் உள்ளவர்கள் அழைப்பு விடுத்து அவர்களுக்கு தேர்தலில் போட்டியிட இடமும் வழங்குகின்றனர்.

த.வெ.க.வின் பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் புதுவையை சேர்ந்தவர் என்பதால் செல்போன் மூலம் ஒவ்வொருவருக்கும் அழைப்பு விடுப்பதாக தெரிகிறது.

ஏற்கனவே பா.ஜனதா கட்சியில் இருந்து வெளியேறிய முன்னாள் எம்.எல்.ஏ. சாமிநாதன், அ.தி.மு.க.வில் இருந்து வெளியேறிய முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் பெரியசாமி, அசனா, காங்கிரசில் முன்னாள் எம்.எல்.ஏ. தனவேலு ஆகியோர் த.வெ.க.வில் தஞ்சம் அடைந்துள்ளனர். இன்னும் பலர் த.வெ.க.வில் சேர வாய்ப்புள்ளதாக தெரிகிறது.

### 'திமுக கூட்டணியில் இருந்து விலகுகிறோம்.!' தமிழக வாழ்வுரிமைக் கட்சி அறிவிப்பு

தி.மு.க. கூட்டணியில் தமிழக வாழ்வுரிமைக் கட்சியை இன்னும் பேச்சு வார்த்தைக்கு அழைக்கவில்லை என்று கூறப்படுகிறது. இதனால், விரக்தி அடைந்த அக்கட்சியின் தலைவர் தி.வேல்முருகன், கட்சியின் உயர்மட்ட தலைவர்களை அழைத்து ஆலோசனை நடத்தினார். ஆலோசனையில், "ஒருநாள் பொறுத்திருந்து பார்ப்போம். தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தைக்கு அழைக்கவில்லை என்றால், தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறுவோம்" என்று நிர்வாகிகள் கூறியுள்ளனர்.

தி.மு.க. தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை குழுவுக்கு விடுக்கப்பட்ட இந்த ஒருநாள் கெடு காலத்தில், தமிழக வாழ்வுரிமை கட்சியை அழைக்காவிட்டால், இன்று (ஞாயிற்றுக்கிழமை) கூட்டணியை விட்டு வெளியேறும் அறிவிப்பை அக்கட்சியின் தலைவர் தி.வேல்முருகன் வெளியிட இருப்பதாக தகவல் வெளியாகி இருந்தது.

இந்நிலையில் சட்டமன்ற தேர்தல் நிலைப்பாடு தொடர்பாக இன்று (ஞாயிற்றுக்கிழமை) தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது;



2019, 2021, 2024 மற்றும் உள்ளாட்சி தேர்தலில் திமுக கூட்டணியில் பயணித்தோம். இம்முறை திமுகவிடம் தவாக 2 தொகுதிகளை கேட்டது. ஒரு தொகுதி தருவதாக கூறினார்கள். கூடுதல் இடம் தருமாறு கேட்டோம். அத்துடன், தங்களது 10 கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரினோம். சட்டமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தோம். சட்டமன்றத்தில் ஒற்றை ஆளாய் போராடினேன்.

ஆனால், நாங்கள் வைத்த எந்த கோரிக்கைகளையும் திமுக நிறைவேற்றவில்லை. திமுக எங்களை புறக்கணித்துவிட்டது. திமுக கூட்டணியில் இருந்து என்னை வெளியேற்ற அதிகாரிகள் அறிவுரை கூறியுள்ளனர். அதிகாரிகளின் பேச்சை கேட்டு தவாகவை திமுக புறக்கணித்துள்ளது. தமிழகத்தில் அதிகாரிகளின் ஆட்சிதான் நடக்கிறது.

கூட்டணி கட்சி தலைவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இன்று முதல் தமிழக வாழ்வுரிமைக் கட்சி, திமுக தலைமையிலான கூட்டணியில் இருந்து விலகுகிறது. அதிமுக - பாஜக கூட்டணியில் சேர மாட்டோம். இடங்களுக்காக கூட்டணியில் இருந்து விலகவில்லை. எங்களது 10 கோரிக்கைகளே முக்கியம். நான் வைத்துள்ள 10 கோரிக்கைகளைஏற்றுக்கொள்ளும் கட்சிகளுடன் பேசி வருகிறோம். ஆதரவு இயக்கங்களுடன் கலந்தாலோசித்து கூட்டணி குறித்து முடிவு எடுக்கப்படும்."

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### புதுச்சேரியில் கூட்டணி இழுபறி: முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் ப.சிதம்பரம் சந்திப்பு

புதுவை மாநிலத்தில் ஏப்ரல் 9-ந்தேதி தேர்தல் நடக்கிறது. வேட்புமனு தாக்கலுக்கு நாளை (திங்கட்கிழமை) கடைசி நாள் ஆகும். கடந்த முறைபோல, வருகிற சட்டசபை தேர்தலிலும் நீண்ட இழுபறிக்கு பின்னர் தேசிய ஜனநாயக கூட்டணியில் என்.ஆர். காங்கிரஸ், பா.ஜனதா கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றன.

புதுவை மாநிலத்தில் காங்கிரஸ், தி.மு.க. கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றன. ஆனால் கூட்டணிக்கு யார் தலைமை வகிப்பது, கூடுதல் தொகுதிகளில் யார் போட்டியிடுவது என்பதில் இரு கட்சியினருக்கும் கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. இதனால் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை உடன்பாடு எட்டப்படாமல் இன்னமும் சவ்வு மிட்டாய் போல் இழுத்து வருகிறது.



தி.மு.க.வினர் ஒருபுறம் கூட்டணி கட்சிகளான இந்திய கம்யூனிஸ்டு, விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட கட்சிகளை அழைத்து தனியாக பேச்சு வார்த்தை நடத்தினர். கூட்டணியில் காங்கிரஸ், தி.மு.க. இடையே பல கட்ட பேச்சுவார்த்தை நடத்தியும் தொகுதி பங்கீடு தொடர்பாக சுமுக உடன்பாடு எட்டப்பட வில்லை. இதனால் காங்கிரஸ்-தி.மு.க. இடையே மீண்டும் தொகுதி பங்கீட்டில் இழுபறி நீடிக்கிறது.

நாளை (திங்கட்கிழமை) வேட்பு மனுதாக்கல் செய்ய கடைசி நாள் என்பதால் இன்று (ஞாயிற்றுக்கிழமைக்குள்) தொகுதி பங்கீட்டை இறுதி செய்ய வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதில் உடன்பாடு ஏற்படாத பட்சத்தில் காங்கிரஸ்-தி.மு.க. தனித்தனியாக போட்டியிட வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

புதுச்சேரியில் இந்தியா கூட்டணியில் இழுபறி நீடிக்கும் நிலையில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினை காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். இந்த சந்திப்பின்போது தொகுதி பங்கீடு தொடர்பாக சுமூக முடிவு எட்டப்படும் என கூறப்படுகிறது. இந்த ஆலோசனையில் புதுச்சேரி திமுக தேர்தல் பொறுப்பாளர் ஜெகத்ரட்சகனும் பங்கேற்றுள்ளார்.

முன்னதாக புதுச்சேரிக்கான திமுக பொறுப்பாளர் ஜெகத்ரட்சகன் உடன் மு.க.ஸ்டாலின் தொகுதி பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். தமிழ்நாட்டில் திமுக-காங்கிரஸ் தொகுதி பங்கீட்டில் ஏற்பட்ட இழுபறியின்போது முதல்-அமைச்சரை ப.சிதம்பரம் சந்தித்ததையடுத்து தொகுதி பங்கீடு இறுதியானது குறிப்பிடத்தக்கது.

# வங்கிகள், ஏ.டி.எம். பரிவர்த்தனைகளுக்கு புதிய கட்டணங்கள்

**சென்னை, மார்ச் 23:**

நாடு முழுவதும் வங்கிகள், ஏ.டி.எம். பரிவர்த்தனைகளுக்கான புதிய கட்டணங்கள், விதிகள் ஏப்.1 முதல் அமலாகின்றன. எஸ்.பி.ஐ. வங்கி ஏ.டி.எம்.களில் ரூ.10,000க்கு மேல் பணம் எடுத்தால் ஏப்.1 முதல் ஒடிபி உள்ளீடு கட்டாயம். கணக்கு வைத்திருக்கும் வங்கி ஏ.டி.எம்.களில் 5 முறை இலவச பரிவர்த்தனை மேற்கொள்ளலாம். பிற வங்கி ஏடி.எம்.களில் மெட்ரோ அல்லாத நகரங்களில் 5 முறை கட்டணமின்றி பணம் எடுக்கலாம். கணக்கு இல்லாத வங்கி ஏ.டி.எம்.களில் மெட்ரோ நகரங்களில் முறை கட்டணமின்றி பணம் எடுக்கலாம். இலவச பரிவர்த்தனை முடிந்துவிட்டால் ஏ.டி.எம். மற்றும் யு.பி.ஐ. பரிவர்த்தனைக்கு கட்டணம் வசூலிக்கப்படும்.

# ரூ. 5.66 லட்சம் மதிப்புள்ள நகைகள் திருட்டு: பெண் ஊழியர் கைவரிசை

**மும்பை, மார்ச் 23:**

மராட்டிய மாநிலத்தில் உள்ள தானே மாவட்டத்தில் உள்ள கல்வா பகுதியில் ஒரு சிறிய கூட்டுறவு கடன் சங்கம் செயல்பட்டு வந்தது. அங்கு 22 வயது இளம்பெண் ஒருவர் கணக்கு எழுத்தராக பணியாற்றி வந்தார். அந்த பெண் தொடக்கத்தில் வங்கியின் பண பரிவர்த்தனைகள் மற்றும் வாடிக்கையாளர்களின் ஆவணங்களை சரிபார்க்கும் வேலை செய்து வந்துள்ளார்.

இந்த வங்கியில் வாடிக்கையாளர்கள் தங்கள் அவசர தேவைகளுக்காக தங்க நகைகளை அடமானம் வைத்து கடன் வாங்குவது வழக்கம். இந்த நகைகள் அனைத்தும் வங்கியின் பாதுகாப்பு லாக்கரில் வைக்கப்பட்டிருக்கும். அந்த பெண் ஊழியர், படி படியாக காசாளர் பொறுப்பிலிருந்து நகைகளை கையாளும் பதவிக்கு வந்தார்.

இந்த நிலையில் யாருக்கும் தெரியாமல் நகைகளை எடுக்க திட்டமிட்டார். அதன்படி கடந்த ஜூன் மற்றும் அக்டோபர் 2025-க்கு இடைப்பட்ட காலத்தில், மூன்று வாடிக்கையாளர்கள் அடமானம் வைத்திருந்த தங்க நகைகளை அவர் ரகசியமாகத் திருடினார். இதன் மொத்த மதிப்பு சுமார் ரூ.5.66 லட்சம். அவர் தனது வேலையை தொடர்ந்துகொண்டே இருந்ததால், ஆரம்பத்தில் யாருக்கும் சந்தேகம் வரவில்லை. பின்னர் அவர் அந்த வேலையிலிருந்து விலகினார்.

சமீபத்தில், அந்த மூன்று வாடிக்கையாளர்களும் தாங்கள் வாங்கிய கடனை வட்டியுடன் திருப்பிசெலுத்திவிட்டு, தங்கள் நகைகளை திரும்ப பெற வங்கிக்கு வந்தனர். அப்போது வங்கி மேலாளர் லாக்கரை திறந்து பார்த்தபோது, குறிப்பிட்ட அந்த மூன்றுபேரின் நகைகளும் காணாமல் போயிருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தார். வங்கி நிர்வாகம் நடத்திய விசாரணையில், அந்த பெண் ஊழியர் பணியாற்றிய காலத்தில்தான் இந்த நகைகள் மாயமாகியுள்ளது தெரிய வந்தது. இதையடுத்து, கல்வா போலீஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. போலீசார் அந்த பெண் மீது வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருப்பதி பிரம்மோற்சவம் 5-வது நாள்.. கோலாகலமாக நடைபெற்ற கருட சேவை

**திருப்பதி, மார்ச் 23:**

திருப்பதி கோதண்டராம சுவாமி கோவிலில் வருடாந்திர பிரம்மோற்சவ விழா விமரிசையாக நடைபெற்று வருகிறது. தினமும் காலை மற்றும் மாலை வாகன சேவைகள் மற்றும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.



இந்நிலையில், விழாவின் விழாவின் 5-வது நாளான நேற்று (21.3.2026) காலை 8 மணியளவில் பல்லக்கு வாகன வீதிஉலா நடந்தது. அதில் உற்சவர் கோதண்டராமர் ‘மோகினி’ அலங்காரத்தில் எழுந்தருளி கோவிலின் நான்கு மாடவீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். அதைத்தொடர்ந்து காலை 9.30 மணியளவில் கருட பாதுகை ஊர்வலம், உற்சவர்களான சீதா, லட்சுமணர், கோதண்டராமருக்கு அபிஷேகமும், பல வண்ணமலர்களால் அலங்காரமும் செய்யப்பட்டது.

இதையடுத்து இரவு 7 மணியில் இருந்து 11 மணி வரை கருட சேவை கோலாகலமாக நடந்தது. அலங்கரிக்கப்பட்ட கருட வாகனத்தில் கோதண்டராம சுவாமி எழுந்தருளி மாட வீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். அப்போது மாட வீதிகளின் இருபுறமும் திரண்டிருந்த பக்தர்கள் கற்பூரம் ஏற்றி பகவானை வழிபட்டனர்.

வாகன சேவையில், திருமலை பெரிய ஜீயர் சுவாமி, சின்ன ஜீயர் சுவாமி, திருமலை திருப்பதி தேவஸ்தான இணை நிர்வாக அதிகாரி வீரபிரம்மம், கோவில் துணை நிர்வாக அதிகாரி, நாகரத்னா, கண்காணிப்பாளர் முனிசங்கர், கோவில் ஆய்வாளர் சுரேஷ் மற்றும் அர்ச்சகர்கள், திரளான பக்தர்கள் பங்கேற்றனர்.

# திருவாலங்காடு வடாரண்யேஸ்வர் கோவிலில் பங்குனி உத்திர பிரம்மோற்சவம் கொடியேற்றம்

**திருவள்ளூர், மார்ச் 23:**

திருத்தணி முருகன் கோவிலின் உபகோவிலான திருவாலங்காடு வடாரண்யேஸ்வர் கோவில் நடராஜப் பெருமாள் திருநடனம் புரிந்த 5 சபைகளில் முதல் சபை ரத்தின சபையாக திகழ்கிறது. இந்த கோவிலில் ஆண்டுதோறும் பங்குனி உத்திர பிரம்மோற்சவம் விமரிசையக நடைபெறுவது வழக்கம்.



அந்த வகையில் இந்த ஆண்டிற்கான பங்குனி உத்திர பிரம்மோற்சவ விழா இன்று காலை 8 மணிக்கு கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இந்நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர்.

தொடர்ந்து 10 நாட்கள் தினமும் தினமும் காலையிலும், இரவிலும் வாகன வீதியுலா நிகழ்ச்சி நடைபெறுகிறது. சிம்ம வாகனம், சூரிய பிரபை, அன்ன வாகனம், பூத வாகனம், பல்லக்கு, நாக வாகனம், புலி, யானை என தினமும் வெவ்வேறு வாகனங்களில் உற்சவர் வடாரண்யேஸ்வரர், வண்டார்குழலி அம்மன் எழுந்தருளி திருவாலங்காடின் முக்கிய வீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்கள்.

பிரம்மோற்சவ விழாவின் 7ம் நாளான மார்ச் 28-ஆம் தேதி காலையில் தேரோட்டம் நடைபெற உள்ளது.

# சத்தியமங்கலத்தில் பண்ணாரி மாரியம்மன் சப்பரம் வீதி உலா

**சத்தியமங்கலம், மார்ச் 23:**

சத்தியமங்கலம் அருகே பிரசித்தி பெற்ற பண்ணாரி மாரியம்மன் கோவிலில் குண்டம் திருவிழா கடந்த 16-ம் தேதி பூச்சாட்டுதலுடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. வரும் 31ஆம் தேதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணிக்கு பக்தர்கள் குண்டத்தில் இறங்கி தீ மிதிக்கும் சிறப்பு நிகழ்ச்சி நடைபெறும்.

குண்டம் விழாவிற்கான பூச்சாட்டுதலைத் அம்மன் சப்பர ஊர்வலம் தொடங்கியது. பண்ணாரி மாரியம்மன் மற்றும் சருகு மாரியம்மன் ஆகிய உற்சவ அம்மன்கள், அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் எழுந்தருளி திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்கள்.

சிக்கரசம்பாளையத்தில் தொடங்கிய இந்த சப்பர வீதி உலா, இக்கரை நெகமம், கொத்தமங்கலம், வெள்ளியம்பாளையம் புதூர், அக்கரைதத்தப்பள்ளி, தாண்டாபாளையம்.கெஞ்சனூர், திருவள்ளுவர் நகர் ஆகிய பகுதிகளில் நடைபெற்றது.

திருவள்ளுவர் நகரில் வீதி உலா நிறைவடைந்ததும் நேற்று இரவு சத்தியமங்கலம் வடக்குப்பேட்டையில் உள்ள தண்டு மாரியம்மன் கோவிலை சப்பரம் வந்தடைந்து. இரவில் கோவிலில் அம்மனின் சப்பரம் இறக்கி வைக்கப்பட்டது.

இன்று (22.3.2026) ஞாயிற்றுக்கிழமை தண்டு மாரியம்மன் கோவிலில் இருந்து காலை 6 மணிக்கு சப்பர வீதிஉலா தொடங்கியது.

தாரை தப்பட்ட முழங்க வடக்குப்பேட்டை, சந்தனக்கிடங்கு வீதி, திருநீலகண்டர்வீதி, கடைவீதி, அக்ரஹாரம் ஆகிய பகுதிகளில் அம்மன் வீதி உலா வந்து பக்தர்களுக்ளு அருள்பாலித்தார். இன்று இரவு வேணுகோபால சுவாமி திருக்கோவிலில் சப்பரம் இறக்கி வைக்கப்பட்டு, நாளை திங்கட்கிழமை முழுவதும் சத்தியமங்கலத்தின் பல்வேறு பகுதிகளில் சப்பர வீதி உலா நடைபெறும்.






## நலம் தரும் மருத்துவம்

# நோய் தடுக்கும் உணவு!

*வாதம் சம்பந்தமான நோய்களை அவரைக்காய் போக்கும். நீரிழிவு நோயை கட்டுப்படுத்த பிஞ்சு அவரைக்காயை சமைத்து உண்ணலாம். ரத்த கொதிப்பைக் குறைக்கும் திறன் இதற்கு உண்டு.

*சுண்டைக்காயை உணவில் சேர்த்து சாப்பிட்டு வர மார்புச்சளி, கபத்தை போக்குவதோடு, வயிற்றுப் பூச்சிகளையும் கொல்லும்.

*சிறுபசலைக் கீரையை சமைத்து சாப்பிட்டுவர மலத்தை இளக்கி, வெளியேற்றும். உடல் சூடு தணியும்.

*வாயுத் தொல்லையில் அவதிப்படுபவர்கள் ஏலக்காயை தண்ணீரில் போட்டு, கொதிக்க வைத்து, தண்ணீரை வடிகட்டி குடிக்க, வாயுத்தொல்லை நின்றுவிடும். மன இறுக்கம், படபடப்பு குறையும்.

*ஓமம், மிளகு, உப்பு இவற்றை பொடித்து வைத்துக்கொண்டு காலை வேளைகளில் சாப்பிட்டு வர, செரிமானக் கோளாறுகள் நீங்கும்.

*ஊறவைத்த அத்திப்பழம் பசி எடுக்காத குழந்தைகளுக்கும் பசி எடுக்க வைக்கும். மாதவிடாய் பிரச்னையை நீக்கும் சக்தி இதற்கு உண்டு.

*நெல்லிக்காய் சாறுடன் தேன் கலந்து சாப்பிட, விக்கல் நிற்கும்.

*முற்றிய வெண்டைக்காயை சூப் செய்து சாப்பிட, இருமல் நிற்கும்.

*மிளகு மூன்று அல்லது நான்கு எடுத்து கொஞ்சம் வெல்லத்துடன் சேர்த்து மென்று சாப்பிட இருமல், நீர்க்கோர்வை குணமாகும்.

*அறுகம்புல்லை தண்ணீரில் கொதிக்க வைத்து, வடிகட்டி கற்கண்டு சேர்த்து அருந்தி வர மூச்சிரைப்பு குணமாகும்.

*இதயம் பலம் பெற, மார்பு வலி தீர 200 மிலி தண்ணீரில் இரண்டு அல்லது மூன்று செம்பருத்திப் பூவை போட்டு கொதிக்கவைத்து குளிர்ந்ததும் வடிகட்டி அதனுடன் சிறிதளவு தேன் கலந்து காலை, மாலை குடித்து வர நல்ல பலன் கிடைக்கும்.

*வில்வ இலையை காய்ச்சி குடிக்க, காய்ச்சல் குணமாகும்.

*உணவில் வாழைத்தண்டை அடிக்கடி சேர்த்துக் கொள்ள குடல் இயக்கம் மேம்படும். ரத்தக் கொதிப்பு மட்டுப்படும்.

*ஓமம், பனங்கற்கண்டு மிளகு இவற்றை காய்ச்சியப் பாலுடன் சேர்த்து குடிக்க, சளி குறையும். ஓமத்துடன் சிறிது சீரகம் சேர்த்து கஷாயம் வைத்து சாப்பிட வயிற்றுவலி, வயிற்றுப் போக்கு குணமாகும்.

# ஜெமினி ஏஐ உடன் கைகோர்த்த கூகுள் மேப்ஸ்: உங்கள் பயண முறையே மாறப்போகிறது!

இன்றைய நவீன உலகில், தெரியாத இடங்களுக்குச் செல்வதற்கு நமக்கு உற்ற நண்பனாக இருப்பது கூகுள் மேப்ஸ் (GOOGLE MAPS). உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்கள் தினமும் வழிகாட்டுவதற்கும், அருகிலுள்ள இடங்களை கண்டுபிடிப்பதற்கும் இந்த செயலியை பயன்படுத்துகின்றனர். தற்போது, இது செயற்கை நுண்ணறிவுதொழில்நுட்பத்தின் உதவியுடன் ஒரு மிகப்பெரிய பரிணாம வளர்ச்சியை எட்டியுள்ளது. சமீபத்தில் கூகுள் நிறுவனம் வெளியிட்டுள்ள அப்டேட்கள், நாம் பயணிக்கும் முறையை முற்றிலும் மாற்றியமைக்கப் போகின்றன. வாருங்கள் அவற்றைப் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

ஜெமினி ஏஐ உடனான இணைப்பு: புதிய அப்டேட்டின் மிக முக்கியமான அம்சம் கூகுளின் சக்திவாய்ந்த ASK MAPS எனப்படும் வசதி. இது ஜெமினி AI உடன் இணைக்கப்படுகிறது. இந்த புதிய அப்டேட்டில் ஒரு மனிதரிடம் கேள்வி கேட்பது போலக் கேட்கலாம். உதாரணமாக, அருகில் உள்ள நல்ல டீக்கடைப் பற்றிக் கேட்கும்போது, அது வெறும் இடங்களின் பட்டியலோடுச் சேர்த்து, அந்த இடத்தைப் பற்றிய மக்களின் விமர்சனங்கள், அங்குள்ள ஸ்பெஷல் உணவுகள் என அனைத்தையும் AI உதவியுடன் தொகுத்து ஒரு சுருக்கமான பதிலாக வழங்குகிறது.

இம்மர்சிவ் வியூ (IMMERSIVE VIEW): கூகுள் மேப்ஸின் (GOOGLE MAPS) ‘இம்மர்சிவ் வியூ’ அம்சம் தற்போது அடுத்த கட்டத்திற்குச் சென்றுள்ளது. கணினி பார்வை மற்றும் ஏஐ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, பில்லியன் கணக்கான புகைப்படங்களை இணைத்து ஒரு இடத்தின் முப்பரிமாண காட்சியை இது உருவாக்குகிறது.




நீங்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் செல்வதற்கு முன்பே, அந்த இடம் எப்படி இருக்கும்; அங்குள்ள வானிலை எப்படி இருக்கிறது; குறிப்பிட்ட நேரத்தில் போக்குவரத்து நெரிசல் எப்படி இருக்கும் என்பதைத் தத்ரூபமாக உங்கள் மொபைலில் பார்க்க முடியும். இந்த அம்சம் சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

மேம்படுத்தப்பட்ட வழிகாட்டுதல்:

வாகனம் ஓட்டும்போது சரியான பாதையைத் தேர்ந்தெடுப்பது சவாலான காரியம். குறிப்பாகப் பெரிய மேம்பாலங்கள் மற்றும் பல கிளைப் பாதைகள் உள்ள இடங்களில் குழப்பம் ஏற்படுவது வழக்கம். இதனைத் தவிர்க்க, கூகுள் மேப்ஸ் (GOOGLE MAPS) இப்போது ‘லேன் கைடன்ஸ்’ வசதியை மேம்படுத்தியுள்ளது. நீங்கள் எந்தப் பாதையில் செல்லவேண்டும் என்பதைத் திரையில் மிகத் தெளிவாக நீல நிறக் கோடுகள் மூலம் காட்டும். இதன் மூலம் கடைசி நேரத்தில் பாதையை மாற்றும் பதற்றம் குறையும்.

LANDMARK NAVIGATION: முன்பு கூகுள் மேப்ஸ் “300 மீட்டர் கழித்து வலப்பக்கம் திரும்புங்கள்” போன்ற வழிகாட்டுதலை வழங்கியது. ஆனால் தற்போது, “அந்த ரெஸ்டாரண்ட்க்கு அருகில் வலப்பக்கம் திரும்புங்கள்” போன்ற LANDMARK-BASED NAVIGATION-ஐ அளிக்கிறது. இந்த வசதியின் மூலம், வழிகாட்டுதல்களை எளிதாகக் கையாக முடியும்.

LENS IN MAPS: கூகுள் மேப்ஸ் இப்போது கேமராவை பயன்படுத்தி அருகிலுள்ள இடங்களை கண்டறியும் வசதியையும் மேம்படுத்தியுள்ளது. LENS IN MAPS எனப்படும் இந்த அம்சம் AUGMENTED REALITY தொழில்நுட்பத்தை பயன்படுத்துகிறது. பயனர் தன் மொபைல் கேமராவை ஒரு தெருவில் உயர்த்தினால், அருகிலுள்ள, ATM, ரெஸ்டாரண்ட், கடைகள், பேருந்துநிலையங்கள் போன்ற தகவல்களைத் திரையில் நேரடியாக காட்டும். இதனால் புதிய நகரங்களில் வழியைக் கண்டுபிடிப்பது மிகவும் எளிதாகிறது.

சுற்றுச்சூழலுக்கு உகந்த பயணங்கள்: புதிய அப்டேட்டில் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் சிக்கனமான பாதைகளைத் தேர்ந்தெடுக்கும் வசதி இப்போது அதிக நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மின்சார வாகனங்கள் வைத்திருப்பவர்களுக்கு, சார்ஜிங் நிலையங்கள் எங்கு உள்ளன. அவை தற்போது காலியாக இருக்கின்றனவா என்ற விவரங்களையும் துல்லியமாக அறிய முடியும்.

அதோடு, கூகுள் நிறுவனம் இந்தத் தகவல்களை வழங்கும்போது அதன் உண்மைத்தன்மையை உறுதி செய்யப் பல்வேறு தரவுகளைப் பயன்படுத்துகிறது. ‘லோக்கல் கைட்ஸ்’ வழங்கும் தகவல்கள் மற்றும் ஏஐ உதவியுடன் சரிபார்க்கப்பட்ட புகைப்படங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி பயனர்களுக்குத் தவறான தகவல்கள் கிடைப்பதைத் தவிர்க்கிறது. இந்த அம்சங்கள் தற்போது சில நாடுகளில் கட்டப்படியாக அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. தொழில்நுட்பம் வளர வளர, நமது அன்றாட வாழ்க்கையின் சிக்கல்கள் குறைந்து, பயணங்கள் இனிமையானதாக மாறுகின்றன என்பதற்கு இந்த மாற்றமே சாட்சி. இனி நீங்கள் பயணத்தைத் திட்டமிடும்போது, கூகுள் மேப்ஸின் இந்த ஏஐ வசதிகளைப் பயன்படுத்திப் பாருங்களேன்.

## அசட்டு வீரமும்... அன்பு ஈரமும்.



"இந்தா பவுனம்மா.. நில்லு... ஊருக்குள்ள பாதிபேரு காப்புகட்டி விரதம் இருக்காங்க... இன்னும் எட்டு நாள்ல கோயில் திருவிழா வருது.. இப்ப போயி ஏவாரம் பார்க்க வர்றீயே.. உனக்கே உணரு வேணாம்.. வேற பக்கம் போயி ஏவாரம் பார்க்கறது தானே.. இனி ஒருமாசகாலம் உன்னை ஊருக்குள்ள பார்த்தேன்... நடக்குறதே வேற.."சாரைப்பாம்பாய் சீறினான் சிவன் காளை.

"என்னா.. காளையண்ணே.. நான் இன்னிக்கு நேத்தியா ஏவாரம் பார்க்கறேன்.. எங்கம்மா சீலைய புடிச்சிகிட்டு வாண்டா இந்த ஊருக்குள்ள வந்தேன்.. ஊரு நிலவரம் அறியாதவளா நானு.?"

"முப்பது வருச காலமா இந்த ஊருல யாரு வூட்டு தலைவாசல்லயாவது ஏறி வலியமா ஏவாரம் பார்த்திருப்பேனா.? ஏதோ வயித்துப்பொழப்பு... தலசுமையா அலைஞ்சி.. அல்லாடி உசுரு வளர்கனும்னு அவன் போட்ட எழுத்து.. யாரும் வேணும்னு கேட்டா எறக்கப்போறேன்... இல்லேன்னா வீதியோட நடந்து அடுத்த ஊருக்கு போகப்போறேன்.. நீ ஏன்னே வீணா சத்தம் போட்டு ஊரைக் கூட்டுற.?"

"ஏய்.. என்னா வாய் நீளுது.. இனி ஒரு நிமிசம் இந்த ஊருல ஏவாரம் பார்த்தியோ... நடக்குறதே வேற"என்று உறுமியபடி.. அப்போது ஊருக்குள் இருந்து வந்து கொண்டிருந்த அரசுப்பேருந்தை கைகாட்டி நிறுத்தினான் சிவன்காளை.

"இந்தா.. வண்டியில ஏறு.. வேறபக்கம் போயி வாய்ச்சவடால் வம்படி வியாபாரத்தை பாரு.. கோயில் திருவிழா முடிஞ்சதும் ஊருக்குள்ள வா"என்றபடி பவுனம்மாளின் தலையிலிருந்து மீன் கூடையை பறித்து பேருந்துக்குள் வீசியபடியே... கண்டக்டரின் கடமையையும் கையில் எடுத்துக்கொண்டு..."ரைட்.. ரைட்.. போகட்டும்"என்றபடி சீட்டியடித்தான் சிவன்காளை.

ஆற்றாமையை அடக்க இயலாதவளாய்.. தொண்டை அடைக்க.. கண்களில் கண்ணீர் கரைகட்ட.. அவசரமாய் பஸ்ஸில் தொற்றிக்கொண்டாள் பவுனம்மாள்.

******

"ஏன்யா.. என்ன பாவம் பண்ணுனேனோ ஏழு வருசமா ஒரு புழுப்பூச்சி வயித்துல தங்கல.. ஊர் உலக ஏச்சுக்கும்.. பேச்சுக்கும் ஏளனத்தும் ஆளாகி.. ஏதோ ஏக்கம் தீர எதங்கி முருங்கைக் கொத்தாட்டம் ஒரு மதலைய கொடுத்திருக்கா.. அந்த மாரியாத்தா..!.. அது மொகத்தை பார்த்தாவது உன் எகுத்தாள எச்சை புத்திய மாத்திக்க மாட்டேங்கறியேய்யா.?"

"இப்படி ஊரு பாவத்தை கொட்டிகிட்டு.. அடுத்தவங்க வயித்தெறிச்சலை வாங்கி ஒத்த புள்ள தலையில சுமத்திட்டு போயிடாதேய்யா... நீ சொத்துபத்து சேர்த்து வைக்கலன்னாலும் பரவாயில்ல.."

"பாவம்யா அந்த பவுனம்மா.. இந்த ஊருக்குள்ள எவ்வளவு ரூவாயை எறச்சியிருக்கா தெரியுமா.?.. இப்ப கோயில் திருவிழாவுக்கு கூட ரெண்டாயிரம் தந்திருக்கா... உன் சேக்காளி வளர்ப்பு மீன் வித்து.. கோடீஸ்வரனாகி கோட்டைகட்டி வாழனும்னு.. கோவில் திருவிழாவை காரணம் காட்டி அவ சோத்துல மண் அள்ளி போடறியே."

"இதையெல்லாம் பார்க்கும் போது நான் மலடியாகவே இருந்திருக்கலாமோன்னு தோணுதுய்யா... இப்படியாப்பட்ட பாதரவுக்கு புள்ளையா பொறந்து பழி சுமக்கனும்னு ...இந்த பிஞ்சுக்கு என்ன தலையெழுத்து.. சொல்லு.?"கண்களில் நீர் வழிய நின்றாள் சிவன்காளை மனைவி செண்பகம்.

"ஏன்டி.. இந்த ஊருக்குள்ள எவ்வளவு நாளா மீன் விற்குறா இந்த பவுனம்மா.. முந்தா நாளு தண்ணீ அடிக்க காசில்லாம தவிச்சு போயி.. ஒரு நூறு ரூவா கைமாத்தா குடு பவுனம்மா.. சாயங்காலமா தந்துடறேன்னு கேட்டேன்"

"ரூவாயுமில்ல.. ஒன்னுமில்ல.. அந்தாண்ட நகரு'ன்னு நார்ப்பெட்டியால முகத்துல வீசுன கணக்கா தொரத்திப்புட்டாங்கறேன்"

"அப்ப.. வச்சேன் வைராக்கியம்.. இனி இந்த ஊருக்குள்ள அவளை ஏவாரம் பார்க்க விடக்கூடாதுன்னு.. இப்ப போயி அசலூருக்காரன் தாவங்கட்டைய புடுச்சி ஏவாரம் பணணிப் பாரு.. அப்ப தெரியும் இந்த சிவன் காளையோட செல்வாக்கு என்னன்னு.."தற்பெருமை பீற்றிக்கொண்ட அதே நேரம்....

***

"அண்ணே.. காளையண்ணே.. நீங்க வம்படியா விரட்டி விட்டீங்களாமே.. நம்ம பவுனம்மாவ.. அவ உங்க வீட்டுக்கு தான் 'பால்சுறா மீன்'எடுத்துகிட்டு வந்தாளாம்.. நீங்க பண்ணுன அலம்பல்ல மறந்து போயி.. பக்கத்தூரு பஸ் ஸ்டாப்ல நின்னுகிட்டு.. யாருகிட்ட கொடுத்துவிடறதுன்னு தவிச்சு நின்னா.. நான் பேங்க் சோலியா டவுனுக்கு போக வேண்டியவ.. அவ தவிப்ப பார்த்து கொண்டா நான் கொடுத்துட்டு வாரேன்னு.. வண்டிய முடுக்கிட்டேன்.. மதனிய நெறையா பூண்டு உறிச்சிபோட்டு கொழம்பு காய்ச்சி சாப்பிடச்சொல்லனுமாம்... அப்பதான் குட்டித்தம்பிக்கு வயிறுமுட்ட பால் சுரக்குமாம்.. பவுனம்மா சொல்லச்சொன்னா" என்றபடி ஸ்கூட்டிப் பெண் பறக்க.. குற்ற உணர்வில் தலை கவிழ்ந்து நின்றான் சிவன்காளை.*

**-அரும்பூர்.க.குமாரகுரு,**
மயிலாடுதுறை

## "கடமை வேறு... உரிமை வேறு"



அந்த அப்பார்ட்மெண்ட் வளாகம் ஒரு நாள் துப்புரவு செய்யாது விட்டால் போதும் அதன் முகமே மாறி விடும்.

அங்கே பணிபுரியும் தனியார் ஹவுஸ் கீப்பிங் நிறுவனத் தொழிலாளிகள் பல மாதங்களாக ஊதிய உயர்வு கேட்டு வந்தார்கள். ஆனால் பதில் இல்லை. ஒரு காலை, எல்லோரும் முடிவு செய்தார்கள்.

"இன்று முதல் ஸ்டிரைக்!" குப்பைத் தொட்டிகள் நிரம்பி வழிந்தன. லிப்ட்டிற்குள் புழுதி மேடு. முகப்பிலிருந்த பூந்தொட்டிகள் வாடத் தொடங்கின. காற்றில் அருவருப்பான வாடை. அப்பார்ட்மெண்ட் வாசிகள் முகம் சுளித்தார்கள்.

துப்புரவுத் தொழிலாளியான ராமு மற்றவர்களிடம் சென்று, "நாம் ... நம் வேலையை நிறுத்த வேண்டாம்... வேலை செய்து கொண்டே போராடலாமே!" என்றான்.

எலோரும் அவனை எரித்து விடுவது போல் பார்த்தனர்,

"நம்மை நம்பி இருக்கும் மக்களைச் சிரமப்படுத்த வேண்டாமே..." கெஞ்சலாய்ச் சொன்னான்.

"நீ நல்லவன் மாதிரி நடிக்காதே !... நாம ஒன்றுபட்டுப் போராடினால்தான் வெல்ல முடியும் !" மற்றவர்கள் சினந்தார்கள்.

"நாம் ஒன்றுபடுவதற்காக மற்றவர்களைத் தண்டிக்க வேண்டியதில்லை..." அவன் வார்த்தை காற்றில் கலந்தது. அடுத்த நாள் யாரும் வரவில்லை.

ராமு மட்டும் வந்தான். காலை 5 மணிக்கு ஆரம்பித்த அவன் வேலை, மாலை 6 மணிக்குத்தான் முடிந்தது.

வியர்வை சட்டையை நனைத்தது. கால்கள் நடுங்கின. ஆனால் குப்பைகள் அகன்றன. வாசல்கள் சுத்தமாயின. ஒரு பெரியவர் கேட்டார், "என்னப்பா... நீ மட்டும் ஏன் வந்திருக்கே?" ராமு சிரித்தான், "வேலை என் கடமை.... போராட்டம் என் உரிமை. இரண்டும் ஒன்றுக்கொன்று எதிரியல்ல."

மூன்றாம் நாள், நிறுவன முதலாளி அவனை அழைத்தார். " ராமு... நீ மட்டும் வேலை செய்தாய்.... அதனால் உனக்கு மட்டும் ஊதிய உயர்வு தருகிறேன்." ராமு இட, வலமாய்த் தலையசைத்தான். "எனக்கு மட்டும்ன்னா வேண்டாம் சார். எல்லாருக்கும் தாருங்கள்... ஏன்னா நாங்க ஒரே குரூப்." முதலாளி அமைதியாக ராமுவைப் பார்த்தார். அவர் கண்களில் லாபம் இல்லை... மனிதம் இருந்தது.

அடுத்த வாரம் அறிவிப்பு வந்தது. 'அனைத்து தொழிலாளிகளுக்கும் ஊதிய உயர்வு" அடுத்த நாள், வேலைக்கு வந்த தொழிலாளிகள் அனைவரும் ராமுவை சுற்றி நின்றார்கள். "நாங்கள் உன்னைத் தப்பா நினைச்சிட்டோம்... மன்னிச்சிடு ராமு" என்றான் ஒருவன்.

ராமு சொன்னான், "நாம் போராடும் போது கூட, நம்மை நம்பி வாழ்பவர்களை மறந்து விடக் கூடாது."

அன்று முதல் அப்பார்ட்மெண்ட் வாசிகள் ராமுவை ஒரு துப்புரவுத் தொழிலாளியாகப் பார்க்கவில்லை. ஏனெனில், அவன் குப்பையை மட்டும் சுத்தம் செய்யவில்லை... சில மனங்களில் இருந்த தவறான எண்ணங்களையும் சுத்தம் செய்தான்.



**-முகில் தினகரன்**
கோயமுத்தூர்.

# திருவிளையாடல் புராணம் 27



**சிவ.முத்து லட்சுமணன்**
போச்சம்பள்ளி.

## அங்கம் வெட்டின படலம்

தன்னுடைய பக்தையின் துயரினைப் போக்க இறைவனான சொக்கநாதர் கொடியவனான சித்தனின் அங்கங்களை வெட்டியதைப் பற்றிக் கூறுகிறது.

பெண்களை குறைத்து மதிப்பிட்டு இழிவுபடுத்துபவர்களின் நிலை என்ன என்பதை இப்படலத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

குலோத்துங்கப் பாண்டியன் மதுரையை சீரும் சிறப்புமாக ஆண்டு வந்தான். அப்போது மதுரையில் வெளியூரினைச் சேர்ந்த வயதான வாளாசிரியன் ஒருவன் வசித்து வந்தான்.

அவனது மனைவியின் பெயர் மாணிக்க மாலை என்பதாகும். அவ்விருவரும் இறைவனான சோமசுந்தரரிடம் பேரன்பு கொண்டிருந்தனர்.

வாளாசிரியன் மதுரை நகரின் வெளிப்புறத்தில் வாட்பயிற்சி கூடம் ஒன்றினை அமைத்து வாட்பயிற்சியினைக் கற்பித்து வந்தான். அவனிடம் சித்தன் என்பவன் வாட்பயிற்சி பெற்றான்.

நாளடைவில் அவன் வாட்பயிற்சியில் குருவினை மிஞ்சிய சிஷியனாக விளங்கினான். திறமைசாலியாக விளங்கிய சித்தன் கெட்ட எண்ணங்கள் மற்றும் துர்நடத்தைகள் கொண்டவனாக விளங்கினான்.

சிறிது காலம் கழித்து தனது குருவுக்கு போட்டியாக வாட்பயிற்சி கூடம் ஒன்றைத் தொடங்கினான். வாட்பயிற்சி கற்பிக்க அதிக ஊதியம் பெற்றான்.

தனது குருவினை மதுரையை விட்டு விரட்ட தீர்மானித்த சித்தன், தனது குருவிடம் பயின்று வரும் மாணவர்களை தன்னிடம் பயிற்சி பெற கட்டாயப்படுத்தினான்.

ஆனால் அவனது குருவோ சித்தனின் இத்தகைய செயல்களால் அவனிடம் வெறுப்பு கொள்ளவில்லை.

குருவால் தன்னை ஒன்றும் செய்ய இயலாது என்ற மமதை தலைக்கு ஏறிய சித்தன் தனது குருவின் மனைவியை அடைய விரும்பினான்.

ஒருநாள் குரு வீட்டில் இல்லாதபோது அவரது வீட்டிற்குச் சென்று மாணிக்க மாலையிடம் தன்னுடைய விருப்பத்திற்கு உடன்படும்படி அவதூறாகப் பேசினான்.

பின் மாணிக்க மாலையின் கையைப் பிடித்து இழுத்தான். அவனிடம் இருந்து தப்பித்த மாணிக்க மாலை உள்ளே சென்று கதவை தாளிட்டாள்.

சிறிது நேரம் காத்திருந்த சித்தன் மற்றொரு நாள் மாணிக்க மாலையை கவனித்துக் கொள்வதாகக் கூறி சென்று விட்டான். மாணிக்க மாலை தனது நிலை குறித்து மிகவும் வருந்தினாள்.

மாணிக்க மாலை 'நடந்த விசயங்களை தன் கணவனிடம் கூறினால் சித்தனுக்கும் கணவனுக்கும் சண்டை ஏற்படக் கூடும். சண்டையில் வயதான தனது கணவனை சித்தன் தோற்கடித்தால் பின் தன்னுடைய நிலை?' என்று பலவாறு மனதிற்குள் எண்ணினாள்.

இறுதியில் திக்கற்றவளாய் சோமசுந்தரரை சரண் அடைந்தாள். "இறைவா, என்னையும் என் கணவனையும் இந்த இக்கட்டிலிருந்து காப்பாற்று" என்று கதறினாள்.

மாணிக்க மாலையின் அழுகுரலைக் கேட்டு இறைவனார் அவளுக்கு உதவ அருளுள்ளம் கொண்டார்.

மறுநாள் இறைவனார் வாளாசிரியரின் உருவத்தில் சித்தனின் வாட்பயிற்சி கூடத்திற்கு சென்றார். சித்தனிடம் "சித்தா இளைஞனான நீயும், வயதான நானும் நாளை வாட்போர் புரிந்து நம்மில் வல்லவர் யார் என்பதைக் காண்போம். ஆதலால் நீ நகருக்கு வெளியே வந்து



என்னுடன் வாட்போர் புரி" என்று கூறினார்.

இதனை எதிர்பார்த்து காத்திருந்த சித்தன் அதற்கு சம்மதித்தான். 'நாளை நடைபெறும் போரில் எளிதாக வெற்றி பெற்று வாளாசிரியனை ஊரைவிட்டு துரத்திவிட்டு மாணிக்க மாலையை அடைந்து விடவேண்டும்' என்று மனதிற்குள் எண்ணினான்.

மறுநாள் மதுரைநகரின் வெளியிடத்தில் சித்தனுக்கும், வாளாசிரியன் உருவில் வந்த இறைவனாருக்கும் வாட்போர் தொடங்கியது. இருவரும் நீண்ட நேரம் போர் புரிந்தனர்.

வாளாசிரியர் அங்கிருந்தோர் அனைவருக்கும் கேட்கும்படி "உன் குருவின்மனைவியை விரும்பிய உள்ளத்தையும், தகாதவார்த்தை பேசிய நாவினையும், தொட்ட கைகளையும், கெட்ட எண்ணத்தோடு பார்த்த கண்களையும் காத்துக்கொள்" என்று கூறினார்.

பின்னர் சித்தனுடைய அங்கங்கள் ஒவ்வொன்றையும் வெட்டி வீழ்த்தினார். பின்னர் அவ்விடத்திலிருந்து மறைந்தார்.

தங்களுடைய ஆசிரியரைக் காணாது வாளாசிரியரின் மாணவர்கள் திகைத்தனர். தங்களுடைய ஆசிரியரைத் தேடி அவருடைய இல்லத்திற்கு சென்றனர்.

வாளாசிரியருக்கும், மாணிக்க மாலைக்கும் கிடைத்த சிறப்பு வாளாசிரியரின் இல்லத்தில் இருந்த அவருடைய மனைவியிடம் வாளாசிரியர் எங்கே என்று கேட்டனர். மாணிக்க மாலை வாளாசிரியர் இறைவனை வழிபட திருக்கோவிலுக்கு சென்றதாகத் தெரிவித்தார்.

அப்போது வாளாசிரியர் தனது இல்லத்திற்கு வந்தார். அவரிடம் மாணவர்கள் "சித்தனைக் கொன்றபின் தாங்கள் எங்கே சென்றீர்கள்?" என்று கேட்டனர்.

வாளாசிரியரும் சித்தனைத் தான் கொல்லவில்லை என்று தெரிவித்தார். அப்போது மாணிக்க மாலை வாளாசிரியரிடம் சித்தன் தன்னிடம் நடந்த முறையற்ற நடத்தைகளைக் கூறினார்.

வாளாசியரின் மாணவர்களும் போர்களத்தில் வாளாசிரியர் மாணிக்க மாலை கூறியவாறு கூறி அவனைக் கொன்றதாகத் தெரிவித்தனர்.

அப்போது வாளாசிரியர் மாணிக்க மாலையின் துயரினை போக்க சோமசுந்தரர் தனது உருவம் தாங்கி வந்து சித்தனைக் கொன்றாதக் கூறினார்.

இந்நிகழ்ச்சியைக் கேள்விப்பட்ட குலோத்துங்க பாண்டியன் இறைவனின் திருவருளைப் பெற்ற அத்தம்பதியினரை வணங்கி யானையின் மீது ஏற்றி ஊர்வலம் வரச் செய்து பொன்னும் பொருளும் வழங்கினான்.

பின் தன் மகனான அனந்தகுண பாண்டியனுக்கு அரசு உரிமை அளித்து சிவப்பேறு பெற்றான்.

திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை என்பதே அங்கம் வெட்டின படலம் கூறும் கருத்தாகும்.

(தொடரும்)

# ஸ்ரீராம நவமி

"ராம நாம கீர்த்தனை நாத இன்ப வெள்ளமே
ஆத்மநாம பிரார்த்தனை தெள்ள தெளிந்த உள்ளமே"
தெளிந்த மனம், தூய உள்ளம் அடைய ஒரே வழி ராம நாம கீர்த்தனை.சித்த சுத்தி அடைய ராம நாமம் வழி நல்கும் என எத்தனை மகான்கள் முத்திரை பதிந்துள்ளனர்.

சாதாரணமாக நாம் உழைத்து வங்கிக் கணக்கில் வைக்கும் பணத்தை செலவழித்தால்தான் பொருள் கிடைக்கும்.
ஆனால் ராம நாம வங்கியில் நாம் எழுதி சேர்க்கும் வைப்புநிதி அள்ள அள்ள குறையாமல் குவியும்.
"தாய் நினைந்த கன்றேயொக்க என்னையும் தன்னையே நினைக்கச் செய்து தான் எனக்காய் நினைந்து அருள் செய்யும் அப்பணி."
அதாவது ராம நாமம் சொல்லுபவனிடம், கன்றை நினைந்து ஓடி வரும் தாய்ப்பசு போல, ராம பகவான் ஓடி வந்து, " நீ சொல்லும் நாமத்திற்கு உரியவன் நான்தான்" என்றும் நாம் ஒன்றும் கேட்காமல் இருந்தாலும் நமக்கு என்ன அருள் செய்யலாம் என நினைந்து அருள் செய்வதும் அவன் பணி என்று பொருள் தருகிறது.
ராம நாம பாராயணத்திற்கு தன் தவமெல்லாம் ஈடாக வைத்து ஸ்ரீ போதேந்திரர் பதித்த முத்திரை -
"ஸதா ஸர்வேஷ்டதம் ஜந்தோ:
ஸர்வாரிஷ்ட நிவாரணம்
ஸ்ரீராம நாம ஜயதி
ச்ரேயோ ஹேது சிகாமணீ:"
'அரிஷ்ட நிவாரணம்' - நோயற்ற வாழ்வு, இதைக் காட்டிலும் என்ன சொத்து வேண்டும் மானிடராகிய நமக்கு.... ராம ரசத்தைக் குடியுங்கள்,.என பொருள் பட "பிபரே ராம ரசம் " ஸ்ரீ ஸதாசிவ பிரஹ்மேந்திரர் பாடியுள்ளார்.
எத்துணை முயன்றும் சில பழக்கங்களை விட முடிவதில்லை என்று தவிக்கிறோம்.
ராம நாமம் சொல்லப் பழகுங்கள்.
நாமம் சொல்லும் பழக்கத்திலிருந்து விடுபட முடியவில்லை என்றால் நாம் எவ்வளவு பாக்கியம் செய்தவர்கள்.

"ஒரு சொல் ஒரு வில் " என தனது ஸ்ரீராம அவதாரத்தில் ,மனித வாழ்வின் எளிமையை நிரூபித்தார் ஸ்ரீமந் நாராயணன்.
சத்ய யுகத்தில் தியானத்தின் மூலமும்,த்ரேதா யுகத்தில் யாக யக்ஞங்கள் மூலமும்,த்வாபர யுகத்தில் ஆராதனை மூலமும் கிடைத்த நலன்கள் எல்லாம் கலியுகத்தில் பகவான் நாமாவை,ராம நாமத்தை,ஜபிப்பதன் மூலமே கிடைத்துவிடும்.

"அன்பு என்ற மொழியிலே
தர்மம் சென்ற வழியிலே
அன்னை தந்தை சொல்லிலே
ஸ்ரீ ராமர் கண்ட வெற்றியே"
அன்பு வழியிலே தர்மம் தழைக்க,தந்தை சொல் சிறக்க சூரிய வம்சத்தில் ஸ்ரீராமன் நவமி திதியில் பகல் வேளையில் அரண்மனையில் அவதரித்தார் .
எண்களில் ஒன்பதை எப்படி பெருக்கினாலும் அது தன் நிலைமை மாறாது. ராமபிரான் அதுபோல தன் நிலை மாறாமல் மனிதனாக அவதரித்து மனிதனாக வாழ்ந்து காட்டி தெய்வமானார்.

"அன்னை தந்தை மனதிலே
ஆசை பாசம் வளர்ப்பிலே
அண்ணன் தம்பி உறவிலே
அனைத்து பலமும் அடங்குமே"
ராமாயணம் ஆதிகாவியம் என பெயர் பெற்றது.
ரகு குல மன்னன் தசரதன்,அவரது மூன்று மனைவியருக்கும் மகன்கள் நால்வராய்- ராமன் லட்சுமணன் பரதன் சத்ருக்னன் - எனப் பிறந்து , பாசத்துடன் வளர்க்கப் பட்டு , அண்ணன் தம்பி உறவின் மேன்மையை வலியுறுத்தி ,வால்மீகி முனிவரால் ஏழு காண்டங்களாக வரையப்பட்ட ஒரு அற்புத காவியம் ராமாயணம்.
"ராம கதை மகத்துவம்
உலக வாழ்க்கை தத்துவம்
நீதி நியாயம் நேர்மையும்
ஸ்ரீ ராமர் வாழ்ந்த வாழ்க்கையே"
ராம நாமம் மனதை தூய்மையாக்குகிறது.
ராம நாம ஸாம்ராஜ்யத்தில் நமது மனதை செலுத்தி , எல்லோருக்கும் எல்லா மங்களங்களையும் அருள அந்த ரகுகுல திலகனை வணங்குவோம்.

நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராமவென் றிரண்டெ ழுத்தினால்

கேட்கவே இனிமையாக இருக்கிறதல்லவா?
அமிழ்தினும் இனிய நம் தமிழ் மொழியில் கம்பன் அளித்த காவிய அமுதம் கம்ப ராமாயணம் ஒரு வாடாத மலராகும்.



ராமாயணம் கதையைக் , கேட்டறிந்த அறிவு நம் எல்லோருக்கும் உண்டு.
கம்ப ராமாயணம் புத்தகம் , கடைசி பக்கங்களில் 'யுத்த காண்டத்தில்', 'திருமுடி சூட்டு படலத்தில்' அந்த வரிகளை...
"அரியணை அநுமன் தாங்க
அங்கதன் உடைவாள் ஏந்த
பரதன் வெண்குடை கவிப்ப
இருவரும் கவரி பற்ற
விரைசெறி குழலி ஓங்க
வெண்ணெயூர்ச் சடையன் தண்டல்
மரபுளோர் கொடுப்ப வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி"
ஸ்ரீ ராம பட்டாபிஷேகப் படத்தில் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் என்று தோன்றும்.
வனவாசம் முடிந்து குறித்த நாளில் ஸ்ரீ ராமர் வராததை, நந்திக்கிராமத்தில் காத்திருந்த பரதன் உணர்ந்து, சத்ருக்னனை அரசுரிமை ஏற்கக் கோரி , தீயில் தன்னை மாய்த்துக் கொள்ள முயன்றார்.
அன்னையரும் , சத்ருக்னனும், மற்றவரும் தடுத்தும் கேளாமல்,பரதன் ராமனை தியானித்தவாறு நெருப்பில் விழப் போக , அஞ்சனை மைந்தன் ஆகாய மார்க்கமாக ராமத் தியானத்துடன் பரதன் முன் வந்து நின்று முத்திரை மோதிரத்தை அளித்து , ஐயனின் வரவை அறிவித்தார்.
மகிழ்வுற்ற அனைவரும் பரத்வாஜ முனிவரைக் வணங்கி, வந்து நின்ற ஸ்ரீராமன் முதல் அனைவரையும் ஆரவாரித்து தழுவி வரவேற்றனர்.
பின்னர் பிரம்மதேவர் ஆணைப்படி மயனை அழைத்து மகுடாபிஷேக மண்டபம் அமைத்து ,ரத்தினம் பதித்த குடங்களில் சரயு நதி நீரைக் கொணர்ந்து , மங்கல கீதம் முழங்க , வேத மந்திரங்கள் முழங்க , சீதாதேவியோடு இணைந்த ஸ்ரீ ராமருக்கு தீர்த்த அபிஷேகம் செய்து , அலங்கரித்து அரியணையில் அமர்த்தினர் . பலவகை வாத்தியங்கள் முழங்க , தேவர்கள் பூமாரிப் பொழிய ராமபிரான் திருமுடியில் மாணிக்க மகுடத்தை சூட்டினார் வசிஷ்டர்.

கெட்டி மேளம் முழங்க ,மணமகன் மணமகள் கைப்பிடித்து மூன்று முறை அக்னியை வலம் வந்து , கூடியுள்ளோர் வாழ்த்துரைக்க, மாங்கல்யதாரணம் நடந்தவுடன் , சங்காராபரண ராகத்தில் "சீதா கல்யாண வைபோகமே" என்ற பாடல் தேன்மதுரமாக காதில் விழும்..
மகாலட்சுமியின் அவதாரமாக ,பூதேவியாக,
சீதா தேவி ஜனக மகாராஜாவிற்கு மகளாக மிதிலையிலும், தர்மத்தை நிலைநாட்ட,தசரத மகாராஜாவின் மகனாக ஸ்ரீராமன் அயோத்தியிலும் அவதரித்தனர்.
ஸ்ரீராமனுக்கும், சீதைக்கும் மனித வாழ்க்கை முறைப்படி, மனிதர்களுக்கு வாழ வேண்டிய வழி முறைகளை தெரிவிப்பதற்காகவே அவதாரம் எடுத்துக் கல்யாணத்தை முறைப்படி நடத்திக் காட்டினார் மனிதனாக அவதரித்த ஸ்ரீராமன்.

அக்னிசாக்ஷியாக,சப்தபதி,அருந்ததி தரிசனம் செய்து ,பாணிக்ரஹணம் பண்ணி விவாஹம் நடைபெற்றது..
"விசேஷண வாஹயதி இதி விவாஹ"
---
கல்யாணம் என்பது இருவரையும் பொறுப்புள்ளவர்களாக செய்விக்கிறது.ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழும் வாழ்க்கை,அமைதியுள்ள வாழ்க்கையாக அமைய அடித்தளம் இடுகிறது..
ஸ்ரீராமருடன் திருமணம் ஆனது முதல், அரண்மனையில் வாழ்க்கை நடந்தாலும், காட்டில் வாழ்க்கை நடந்தாலும்இ ரண்டையும் சமமாகப் பாவித்து கணவனைப் பிரியாமல் ஒரு மனதாக வாழ்க்கை நடத்த வேண்டுமென்பதை எடுத்துக் காட்டினாள் சீதா தேவி.
இதை வைத்துத்தான், "சீதா கல்யாண வைபோகமே" என்று பாடினார்கள்.
கம்பன் இதை காவியத்தில் வடித்த அழகு வார்த்தைகளால் வரைய இயலாது. வானவர்களுக்கெல்லாம் தலைவனாகிய ஸ்ரீராமன் சீதையைத் தன் மனத்தில் நினைத்திருக்க, 'தேன் உண்ணும் வண்டுகள் மொய்க்கும் கூந்தலைக் கொண்ட சீதைக்கு, நாளை திருமணம்' என்று அறிவித்தான்,ஜனக மகா ராஜன்..

மிதிலையில் நிலவிய செல்வச் செழிப்பை, எங்கும் பார்த்திருக்கவே முடியாது. அவ்வண்ணமே சீதையும் ராமனும் மாலை சூடும் இந்த மண நாள்தான்,அனைவருக்கும் கண் குளிர்ந்த காட்சியைக் காணக் கிடைத்த மிகச் சிறப்பான நாள் என கம்பன் வர்ணிக்கிறார்.

சீதையும் ராமனும் திருமணம் செய்துகொள்ளவிருக்கும் அந்த மண்டபம், முந்நாளில் மயன் என்ற சிறந்த தச்சனால் செய்யப்பட்டது.
தங்களின் பிரியமான ஸ்ரீராமனின் திருமணம் காண ஆண்களும்,பெண்களும்,சூழ பல தேசத்து அரசர்களுடன் தசரதனும், ஜனகனும் அங்கே கம்பீரமாக அமர்ந்துள்ளனர்.
மாப்பிள்ளை ராமன் தேரில் வந்து மண்டபத்தினுள் நுழைகிறான்!
வில்லைப் பயன்படுத்துவதில் சிறந்தவன் அந்த ஸ்ரீராமனை ,திருமண அலங்காரங்களுடன் பார்க்கும்போது, மேரு மலையில் சூரியன் உதித்ததுபோல் இருந்ததாம்...
சூரியவம்சத்தில் பிறந்தவனாயிற்றே!
ஒரு சொல்,ஒரு இல் ,ஒரு வில் என வாழ்ந்து காட்டியவன்....
சீதையும் மலையில் உதிக்கிற வெண்மதி போல் புன்சிரிப்புடன் தேவதை போல் வருகிறாள்!
சீதையும், ராமனும் திருமணம் செய்துகொள்கிற அழகைக் காண இந்திரன் தன்னுடைய மனைவியாகிய இந்திராணியுடனும்,சிவபெருமான் உமையுடனும்,பிரம்மன் சரஸ்வதி தேவியுடனும் வந்தனர்...

சக்கரவர்த்தித் திருமகனாகிய ராமனுக்கு எதிரே வந்து நின்ற ஜனகன், அவனுடைய தாமரை போன்ற கையில் குளிர்ந்த நல்ல நீரை வார்த்து சீதையைத் திருமணம் செய்துகொடுத்தான்.
'பரம்பொருளாகிய திருமாலும், தாமரையில் வாழும் திருமகளையும்போல, என் சிறந்த மகளாகிய சீதையுடன் நீ என்றென்றும் வாழ்க!'
என வாழ்த்தினான...உண்மை அதுவன்றோ?
வீரனாகிய ராமன், திருமணத்துக்குரிய மந்திரங்கள் முழுவதையும் சொல்லி,ஹோமங்களை முறைப்படி செய்து சீதையைக் கைப்பிடித்தான்!

ஆர்த்தன பேரிகள், ஆர்த்தன சங்கம், ஆர்த்தன நான்மறை, ஆர்த்தனர் வானோர்,ஆர்த்தன பல்கலை, ஆர்த்தன பல்லாண்டு,ஆர்த்தன வண்டினம், ஆர்த்தன வேலை!
என அந்தக் காட்சியை வர்ணிக்கிறான் கம்பன்...

"ராம" நாமம் பஜித்து, இல்லந்தோறும் தீப ஒளி மிளிரச் செய்து அந்த ரகுகுல திலகன், கோசலை மைந்தன் , பரம தயாளன்,ராஜீவ லோசனன்,ஆத்மா ராமனை, ஆனந்த ரமணனைப் பாடி துதித்து மகிழ்வோம்.



சோபனா விச்வநாதன்

---

**தினம் ஒரு தலைவர்கள்**

# சந்திர ராஜேஸ்வர ராவ் வரலாறு

சந்திர ராஜேஸ்வர ராவ் (ஜூன் 6, 1914 - ஏப்ரல் 9, 1994) ஒரு இந்திய கம்யூனிஸ்ட் அரசியல்வாதி ஆவார். அவர் தெலுங்கானா கிளர்ச்சியின் (19461951) தலைவர்களில் ஒருவராக இருந்தார் . 1992 ஆம் ஆண்டு உடல்நலக் காரணங்களுக்காகப் பதவி விலகுவதற்கு முன்பு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (சிபிஐ) பொதுச் செயலாளராகவும் 28 ஆண்டுகள் பணியாற்றினார்.

வாழ்க்கை
ராவ் ஒரு வசதியான விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் ஜூன் 6, 1914 அன்று இந்தியாவின் ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள மங்களபுரம் கிராமத்தில் பிறந்தார். வாரணாசியில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்திலும் விசாகப்பட்டினத்தில் உள்ள ஒரு மருத்துவக் கல்லூரியிலும் மருத்துவக் கல்வியைப் பெற்றார் . 1931 இல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் (சிபிஐ) சேர்ந்தார். ராவ் 1954 மற்றும் 1955 இல் அகில இந்திய கிசான் சபாவின் (விவசாயிகள் சங்கம்) துணைத் தலைவராக இருந்தார். டிசம்பர் 1964 இல் அவர் சிபிஐ தேசிய கவுன்சிலின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு 1974 இல் ஆர்டர் ஆஃப் லெனின் வழங்கப்பட்டது .

அவரது மகன் சந்திர சந்திரசேகர் மற்றும் பேரன் சந்திர ஜெய்தீப் ஆகியோர் ஆந்திரப் பிரதேசத்தில் அரசியலில் ஈடுபட்டுள்ளனர்.

தெலுங்கானா கிளர்ச்சியில் பங்கேற்பு
1946 ஆம் ஆண்டு ஹைதராபாத்தில் நிலைமை மேலும் மேலும் பதட்டமாக மாறியது. இதற்கு பதிலளிக்கும் விதமாக, ஆந்திர மகாசபாவும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் (சிபிஐ) ஆயுதமேந்திய எதிர்ப்பைத் தேர்ந்தெடுத்தன, அதுதான் மக்களுக்குத் திறந்திருக்கும் ஒரே நடவடிக்கை என்று நம்பின. பி.சி. ஜோஷியின் தலைமையில் , சிபிஐ நிஜாமின் ஆட்சியை அகற்றும் குறிக்கோளுடன் ஆயுதமேந்திய போராட்டத்தைத் தொடங்கியது. இந்த மோதல் 1946 முதல் 1948 வரை நீடித்தது.

இந்தக் காலகட்டத்தில் இந்தியா சுதந்திரம் பெற்றது, ஹைதராபாத்தில் ஒரு கம்யூனிஸ்ட் இந்தியக் கொடியை ஏற்றினார். இருப்பினும், நிஜாம் இந்தியாவுடன் இணைய மறுத்துவிட்டார், இதனால் மாநில ஒருங்கிணைப்புக்கான பேச்சுவார்த்தைகள் தேவைப்பட்டன. இதற்கிடையில், பிப்ரவரி 1948 இல் கல்கத்தாவில் நடந்த சிபிஐயின் இரண்டாவது மாநாட்டில் இடதுசாரி பிரிவினைவாத மற்றும் சாகசவாதத் தலைமையின் எழுச்சி காணப்பட்டது, இது பி.சி. ஜோஷியை நீக்கி, பி.டி. ரணதிவே பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டதற்கு வழிவகுத்தது. தெலுங்கானா ஆயுதப் போராட்டத்தில் முக்கிய நபரான ரணதிவேவின் கொள்கைகள் கட்சிக்குள் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை, ஆனால் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள் உட்பட பலர் ஆயுதப் போராட்டத்தை ஆதரித்தனர். பொதுவான கருத்து இருந்தபோதிலும், அவர் 1948 இல் மத்திய குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார், பொலிட்பீரோவிற்கு அல்ல.



கட்சிக்குள், பெரும்பாலும் 'ரஷ்ய வழி' மற்றும் 'சீன வழி' என்று அழைக்கப்படும் மாறுபட்ட கருத்துக்கள் இருந்தபோதிலும், இரு பிரிவுகளும் ஆயுதப் போராட்டம் குறித்து ஒன்றிணைந்தன. செப்டம்பர் 13, 1948 வாக்கில், இந்தியப் படைகள் நிஜாமை வீழ்த்தி ஹைதராபாத்தை இந்தியாவுடன் இணைத்தன, விவசாயிகளுக்கு சலுகைகளையும் வழங்கின. ஆயுதப் போராட்டத்தின் முதன்மை நோக்கங்கள் இவைதான், அவை தர்க்கரீதியாக முடிவுக்கு வந்திருக்க வேண்டும். இருப்பினும், மத்தியத் தலைமை போராட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

இந்தக் கொள்கையின் பேரழிவு விளைவுகள் 1950 ஆம் ஆண்டு வாக்கில் தெளிவாகத் தெரிந்தன, இதன் விளைவாக ஜூன் 1950 இல் கல்கத்தாவில் நடந்த மத்தியக் குழுக் கூட்டத்தில் ரணதிவேக்குப் பதிலாக சி.ராஜேஸ்வர ராவ் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார். புதிய 'ஆந்திரக் கோட்டின்' சிற்பியான ராவ், நெருக்கடியைத் தீர்க்கத் தவறிவிட்டார், இது இந்த அணுகுமுறையும் குறைபாடுடையது என்பதை உணர வழிவகுத்தது. இதன் விளைவாக, சி. ராஜேஸ்வர ராவ், எஸ்.ஏ. டாங்கே, கே. கோவிந்த ராவ், சி.ஆர். வல்லபன் ஐயர் (மணி ஐயர்), பசவ்புன்னையா மற்றும் அஜோய் கோஷ் உள்ளிட்ட நான்கு பேர் கொண்ட சிபிஐ குழு, மூலோபாயம் மற்றும் தந்திரோபாயங்கள் குறித்து ஸ்டாலினுடன் கலந்தாலோசிக்க சோவியத் யூனியனுக்குச் சென்றது. இது ஏப்ரல் 1951 இல் வரைவு கட்சித் திட்டங்கள் மற்றும் கொள்கை அறிக்கைகளை வெளியிடுவதற்கும், 1951 இல் கல்கத்தாவில் நடந்த ஒரு சிறப்பு மறைமுகக் கட்சி மாநாட்டில் அஜோய் கோஷ் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் வழிவகுத்தது.

# மூன்றே நாட்களில் ரூ.500 கோடி வசூலை குவித்த துரந்தர் 2




இந்தியில் ஆதித்யா தார் இயக்கத்தில் ரன்வீர் சிங், மாதவன், அக்ஷய் கண்ணா, சாரா அர்ஜுன் உள்ளிட்டோர் நடிப்பில் கடந்த டிசம்பரில் வெளியான படம் 'துரந்தர்'. இத்திரைப்படம் உலகம் முழுவதும் சுமார் ரூ.1350 கோடிக்கும் மேல் வசூலித்து மெகா ஹிட் ஆனது. ஆனால் இப்படம் முஸ்லிம்களை கெட்டவர்களாக சித்தரித்து எடுக்கப்பட்ட இந்துத்துவ பிரச்சார படம் என்று விமர்சனம் எழுந்தது.

இந்த நிலையில், துரந்தர் படத்தின் 2 ஆம் பாகமாக "துரந்தர்: தி ரிவெஞ்ச்" (Dhurandhar: The Revenge) திரைப்படம் நேற்று (மார்ச் 19) வெளியானது. இந்தப் படம் ரிலீசுக்கு முன்பே முன்பதிவிலேயே பல கோடிகளை ஈட்டியிருந்தது. பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வெளியான நிலையில், "துரந்தர் தி ரிவெஞ்ச்" திரைப்படம் முதல் நாளில் உலகளவில் ரூ. 241-க்கும் அதிகமாக வசூலித்து சாதனை படைத்தது.



# 25 ஆண்டுகளாக சினிமாவில் நடிக்காதது ஏன்?

நடிகை சம்யுக்தா மேனன் தமிழ், தெலுங்கில் பாப்புலர் நடிகையாக இருந்து வருகிறார். அவர் தனுஷ் ஜோடியாக வாத்தி படத்தில் நடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது கைவசம் அவர் பல படங்கள் வைத்திருக்கிறார். லோகேஷ் கனகராஜின் LCU படமாக உருவாகி வரும் Benz படத்தில் அவர் ஹீரோயினாக நடித்து வருகிறார். சம்யுக்தா தற்போது சேலையில் தாராள கவர்ச்சி போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க.

தமிழ் சினிமாவின் 90 காலகட்டத்தில் முன்னணி நடிகையாக திகழ்ந்தவர் சங்கீதா. விஜய்யுடன் 'பூவே உனக்காக' படத்தில் நடித்து புகழ்பெற்ற இவர். தமிழில் கடைசியாக 2000-ம் ஆண்டு 'கண் திறந்து பாரம்மா' என்ற படத்தில் நடித்திருந்தார். இவர் தமிழில் 25 ஆண்டுகளுக்குப் பிறகு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் திரைப்படம், 'காளிதாஸ் 2'. பரத் நாயகனாக நடித்திருக்கும் இந்தப் படத்தில் அஜய் கார்த்திக், அபர்னதி, பவானி ஸ்ரீ உள்பட பலர் நடித்துள்ளனர். இந்தப் படத்தை 'பைவ் ஸ்டார்' செந்தில் இயக்கியுள்ளார்.

சென்னையில் நடந்த படத்தின் இசை வெளியீட்டு விழாவில் பங்கேற்ற சங்கீதாவிடம், '25 ஆண்டுகளாக சினிமாவில் நடிக்காதது ஏன்? என்று கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த சங்கீதா, "வீட்டில் எனக்கு வேலைகள் குவிந்து விட்டது. ஆனாலும் சினிமாவை விட்டு நான் தூரம் போகவில்லை. ஏனெனில் என் கணவர் (ஒளிப்பதிவாளர் - இயக்குனர் சரவணன்) சினிமாவில் தான் இருக்கிறார். இதுநாள் வரை என் வீட்டுக்கான கடமைகளை சரியாக செய்துவிட்டேன் என்பதில் எனக்கு மகிழ்ச்சி.

இந்தச் சூழலில்தான் என்னை பாதிக்கும் கதையாக 'காளிதாஸ் 2' அமைந்தது. அதனால் அதில் நடிக்க சம்மதம் தெரிவித்தேன்.

இத்தனை ஆண்டுகள் வீட்டில் ராணி மாதிரி இருந்து விட்டு, மீண்டும் சினிமாவில் நடிக்க வந்துள்ளேன். பொதுவாகவே 'இதுதான் வசதி' என்று நினைக்கும் நிலையில் இருந்து அடுத்த கட்டத்துக்கு மாற வேண்டும். அப்போதுதான் வாழ்க்கையின் அடுத்த கட்ட பயணங்கள் ஆரம்பிக்கும். அந்த வகையில் மீண்டும் தமிழ் சினிமாவுக்கு வந்தது மகிழ்ச்சி அளிக்கிறது" என்றார்.



# மம்மூட்டியின் அடுத்த சம்பவம்.. மட்டஞ்சேரி மாபியா

'அனுராக கரிக்கின் வெள்ளம்' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானவர் கலித் ரஹ்மான். 2019 இல் இவரது இயக்கத்தில் மம்மூட்டி 'உண்டா' என்ற திரைபடத்தில் நடத்திருந்தார். தொடர்ந்து 'லவ்', 'தள்ளுமலா' என அடுத்தடுத்த கலித் இயக்கிய படங்கள் கவனம் பெற்றன. இறுதியாக 'ஆழப்புழா ஜிம்கானா' படத்தை கலித் தயாரித்து இயக்கினர். இந்த சூழலில் கலித் ரஹ்மான் மீண்டும் மம்மூட்டியை வைத்து படம் இயக்குகிறார். இதில் ஆசிப் அலி, நஸ்லேன் உள்ளிட்டோர் முக்கிய காதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

இந்த நிலையில், இப்படத்திற்கு, 'மட்டஞ்சேரி மாபியா' எனப் பெயரிட்டுள்ளதாக படக்குழுவினர் போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளனர்.

நியோக் கிருஷ்ணா, ஷராபு-சுஹாஸ் மற்றும் தஸ்ரீக் அப்துல் சலாம் கதை எழுத சுஷின் ஷ்யாம் இப்படத்திற்கு இசையமைக்கிறார்.

மட்டஞ்சேரி மாபியா என படத்தின் பெயர் அறிவிக்கப்பட்டதில் இருந்து பல விவாதங்கள் மலையாள வட்டாரங்களில் உருவாகி உள்ளன.






இந்திய சினிமாவில் பிரபலமான நடிகையாக வலம் வருபவர் சோபிதா துலிபாலா. இவர் பொன்னியின் செல்வன் படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானார்.

இதை தொடர்ந்து தற்போது பா. ரஞ்சித் இயக்கத்தில் உருவாகி வரும் வேட்டுவம் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார். கடந்த ஆண்டு நடிகர் நாக சைதன்யாவை காதலித்து திருமணம் செய்துகொண்டார். இவர்களுடைய திருமணம் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

இந்த நிலையில், தற்போது தனது புதிய ஹேர் ஸ்டைலுடன் கிளாமர் லுக்கில் எடுத்துக்கொண்ட போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

# இளமை திரும்புதே... ஸ்டைலிஷ் லுக்கில் நடிகை ஜோதிகா



சூர்யா - ஜோதிகா 1999ம் ஆண்டு வெளியான 'பூவெல்லாம் கேட்டுப்பார்' திரைப்பத்தில் முதன் முதலாக இணைந்து நடித்தனர். அதை தொடர்ந்து இந்த ஜோடி உயிரிலே கலந்தது, பேரழகன், காக்க காக்க, சில்லுனு ஒரு காதல், மாயாவி உள்ளிட்ட திரைப்படங்களை ஒன்றாக இணைந்து நடித்தனர்.

இதனையடுத்து சூர்யா - ஜோதிகா இருவரும் 2006ம் ஆண்டு இருவீட்டாரின் சம்மதத்தோடு திருமணம் செய்து கொண்டனர். திருமணத்திற்கு பிறகு சினிமாவில் இருந்து விலகி இருந்து ஜோதிகா 36 வயதினிலே பணம் மூலம் ரீஎன்ட்ரி கொடுத்தார்.

அதன் பிறகு கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள கதைகளில் அவர் நடித்து வருகிறார்.

அண்மை காலமாக ஜிம்மிற்கு சென்று ஜோதிகா கடுமையாக உடற்பயிற்சி செய்து வந்தார். உடற்பயிற்சியின் விளைவால் உடல் எடை குறைந்து இளமை லுக்கில் ஜோதிகா மாறியுள்ளார். இந்நிலையில் இன்ஸ்டாகிராமில் ஜோதிகா பகிர்ந்துள்ள ஸ்டைலிஷ் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகியுள்ளன.

முனீஸ்வரர் துணை
கங்கோதரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
* Plots
* Flats
* House
* Villa
* Bungalows
* Farm Land
* Ware Houses
* Factory Sites
* Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the LEADS GENERATION FACTORY
For Your REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80% OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY AT ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
விளம்பரம்
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 - Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009

WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349



விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்ஒலக்கூர்
பசுமலை ஸ்ரீ சுப்ரமணிய சுவாமிக்கு விசுவாவசு வருஷத்திய

# பிரமோற்சவப் பத்திரிக்கை

அன்புடையீர் வணக்கம்.

குன்றுகள் தோறும் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் முருகப் பெருமான், மகிமை நிறைந்ததும், சித்தர்களும், ஞானிகளும் வணங்கும் புண்ணிய திருத்தலம் பசுமலை என்று அழைக்கப்படும் **கோ கிரி** என்னும் திருக்கோயில் ஆகும்.

எழிலும், அருளும் நிறைந்த பசுமலையில் முருகப்பெருமான் ஸ்ரீ வள்ளி, தேவசேனா சமேத ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி என்னும் திருநாமத்தோடு வீற்றிருந்து பக்தர்களின் இன்னல்களை களைந்து வாழ்வில் அனைத்து செல்வங்களையும் தந்து மேன்மையடையச் செய்கிறார் என்பது பக்தர்கள் வாயிலாகக் கண்ட நிதர்சனமான உண்மை.

இறைவன் திருவருளாலும், பூஜ்யஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீஸ்ரீஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் குருவருளாலும் நிகழும் மங்கலகரமான கலியுகாதி 5126 விசுவாவசு வருடம் பங்குனி மாதம்-**08** ம் தேதி **22.03.2026 ஞாயிற்றுக்கிழமை**, சதுர்த்தி திதி, பரணி நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் காலை 10.30 மணிக்கு மேல் 12.00 மணிக்குள் **மயூர துவஜாரோகணமும்** அன்று முதல் பதினொன்று நாட்கள் வரையில் சிறப்பான மகோற்சவங்களும் நடக்க இருப்பதால் பக்தர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டுஸ்ரீமுருகப்பெருமான் திருவருளுக்கு பாத்திரமாகும்படி கேட்டுக்கொள்கிறோம்.

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| பங்குனி மாதம்- 07 | 21.03.2026 சனிக்கிழமை | விநாயகர் வழிபாடு,பூர்வாங்க பூஜைகள் |
| பங்குனி மாதம்- 08 | 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை | அஸ்திர தேவர் பூஜை, துவஜாரோகணம்(கொடியேற்றம்) |
| பங்குனி மாதம்- 09 | 23.03.2026 திங்கட்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 10 | 24.03.2026 செவ்வாய்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 11 | 25.03.2026 புதன்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 12 | 26.03.2026 வியாழக்கிழமை | மயில்வாகன கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 13 | 27.03.2026 வெள்ளிக்கிழமை | முத்து பிரபை கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம் - 14 | 28.03.2026 சனிக்கிழமை | இந்திர விமான கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம் - 15 | 29.03.2026 ஞாயிற்றுக்கிழமை | திருக்கல்யாணம் இரவு 9.00 மணிக்கு |
| பங்குனி மாதம் - 16 | 30.03.2026 திங்கட்கிழமை | ரதோற்சவம் [ மாலை 5.00 மணிக்கு திருத்தேரோட்டம்] |
| பங்குனி மாதம் - 17 | 31.03.2026 செவ்வாய்கிழமை | பங்குனி உத்திரம், தீர்த்த வாரி, துவஜ அவரோகணம்(கொடி இறக்கம்) |
| பங்குனி மாதம் - 18 | 01.04.2026 புதன்கிழமை | 11-ம் நாள் விடையாற்றி உற்சவம் |

குறிப்பு
பிரதிமாதம் பௌர்ணமி கிரிவலம் நடைபெறுகிறது
கிரிவலம் செய்து வளமோடு வாழ்க!

பிளாஸ்டிக் உபயோகிப்பதை தவிர்ப்போம்.
தாய்மண்ணை காப்போம்.

இங்ஙனம்.
S.V.சுப்ரமண்ய சோமயாஜுலு
V.ராம்குமார் சோமயாஜுலு
ஆதின பரம்பரை அறங்காவலர்கள்,
மேல் ஒலக்கூர் - 604 203.
செல் : 9962344722, 8610716563
9047725285






## ரம்ஜானை வாழ்த்துவோம்!

புனிதமான மாதம் ரம்ஜான்
பூத்துவரும் மாதம் ரம்ஜான்
கனிவான மாதம் ரம்ஜான்
காட்சிதரும் மாதம் ரம்ஜான்!
ஆன்மாவைத்
தூய்மை யாக்கும்
அழகான ரமலான் மாதம்
நோன்பினிலே திகழும் மாதம்
நுவல்கின்ற அன்பு மாதம்!
ஒன்பதாவ தாகும் மாதம்
ஒண்மைமிகு இன்ப மாதம்
அன்பினாலே
பரிமாற் றத்தை
அருளோடு
செய்யும் ரமலான்!



**முனைவர் இராம. வேதநாயகம்**
திருவண்ணாமலை.



போதும்...உணராத ... அந்த
பேருண்மை...

பெருவலியாக என்னை
மூச்சடைக்க வைக்கிறது....
உன் பிரிவில்...

## சமத்துவம்...

குடிசை வீட்டு வாசிக்கும்..
சென்றடையும்... பிரியாணி
வாசத்தில்....
மிதந்து
வருகிறது...
காருண்யம்...
எதுவும் இங்கே
நிரந்தரமில்லை என்பதை
படித்த போதும்... படிக்கும்



**தே.சௌந்தர ராஜன்**
கல்யாணம் பூண்டி




# நூல் விமர்சனம்

நூலின் பெயர் : டார்ச்சர் கிங் 12ம் மணிமாறன்
ஆசிரியர்: பாலகணேஷ்
விலை ; ₹ 50
வெளியீடு: தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட்
தொடர்புக்கு:95978 00452

இந்தப் புத்தகத்தைக் பெற எழுத்தாளரை அடியேன் டார்ச்சர் செய்தது தனிக்கதை.

மன்சூர் அலிகான் எடுத்த ரா.ரா.கம்பீர காத்தவராய கிருஷ்ண காமராஜன் போல நீளமான பெயர் கொண்ட 12ம் மணிமாறன், ஒரு வார்த்தை விடுபட்டாலும் அவைக்குள் நுழையாது சினம் கொள்வான்.

பலருக்கும் சம்பளபாக்கி வைத்திருக்கும் நிலையில், பெரிய மாளிகை கட்ட நினைக்கிறான். அமைச்சர் நிதி நிலை சரியில்லை, பஞ்சம் தலைவிரித்தாடுகிறது எனச் சொன்னால், கட்டிக் கொள்ள ரிப்பன் கொடுங்கள் என நக்கலடிப்பதோடு நிதி திரட்ட, எவரேனும் ஆலோசனை சொல்ல வேண்டும் என்கிறான். இவனுக்கு சொல்லழகன் என்ற மகனும், கோலவல்லி என்ற மகளும் உள்ளனர். இளவரசியைக் காதலிக்கும் அறிவுடை நம்பி, தான் அண்டை நாடுகளுக்குச் சென்று நிதி திரட்டி வருகிறேன் என்றதோடு, நிதியும் கொண்டு வருகிறான் எப்படி? தனக்கு மன்னர் பதவியே கிடைக்காதோ? எனும் வருத்தத்தில், தேனிகுஞ்சரம்மாள் போல பாயசம் போட தீர்மானிக்கிறான் இளவரசன் என அறிவுடை நம்பி மன்னரிடம் சொல்கிறான்.என்ன ஆயிற்று ? இறுதியில் ....படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

**ஸ்ரீகாந்த் திருச்சி**

## கவிதையைப் போற்றுவோம்!

நேரிசை வெண்பா!

படைப்புத் திறனையே
பாங்காகக்கொண்டே
இடையூறு காணாமல்
என்றும்.. படைப்பாக்கம்
செய்யும். கவிதைக்குச்
சீர்மைச் செழிப்பினை
நெய்தல் கவிதைநாள் நேர்!

நுண்மையுடன் நேர்த்தி
கலந்த கவிதையே
பண்பாட்டைக்காட்டிப்
பலகாலம்... இன்புறும்
எல்லைகளைத்தாண்டியே
எங்குமே சென்றிட
வல்லமுறை காணல் வளம்!

## நீரறம்!

அறச்செயல் கற்பி
ஆதரவு கொடு
இல்லார்க்குத் தா
ஈகை போற்று உதவி நன்று
ஊக்கம் சிறப்பு
எறும்புபோல் உழை
ஏழைக்கு உதவிசெய்
ஐயமின்றி உதவு
ஒற்றுமை கைக்கொள்
ஓதிடு நன்று ஔவை
சொன்னார் அறம்
அஃதே அறவழி!

## காடுகளைக் காப்போம்!

நேரிசை வெண்பா!

மரத்தை வளர்ப்போம்!
மரத்தினை வெட்டாக்

கருத்தை வளர்ப்போம்!
கனிவாய்.. அருமை

உயிர்வளி தந்துதவும்
உன்னத மான
நயன்மை மரங்கள் நனி!

உணவாக மூலிகையாய்
உத்தமமான

மணக்கும் பலவுதவி
மாண்பாய்.. இனிக்கவே

செய்திடும் காடுகளைச்
சீர்மையாய்க்காப்பமே

பெய்திடுவோம்
அன்பையே பீடு!

## பொம்மலாட்டம் பார்ப்போம்!

நேரிசை வெண்பா!

பழமை மரபுவழி
பாங்காம் கலையே

அழகான பொம்மையின்
ஆட்டம்.. தொழில்நுட்பம்

சார்ந்தநல் ஆட்டமே.
சந்தனமாய்த் தோன்றிடும்

ஈர்த்திடும் நெஞ்சை இனிது!


பழமையான காவியங்கள்
மூலம் பொம்மை

அழகாகவைத்திட
ஆட்டிப்..பழகுவார்

பல்லாற்றும் சீர்மையுடன்
பாங்கான பொம்மலாட்டம்

வல்லமையுடைத்தே வளம்!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



சிந்திக்க சிதைந்து போக
ஒரு காதல் போதுமானது!

இத்தனைக்கு பிறகும்
அந்த மானம் கெட்ட இதயம்
செருப்படி பட்ட பிறகும்
அந்த காதல் புளிக்காமல்
பிடித்து தான் போனது!

கொடுத்து தான்
வைத்திருக்க வேண்டும்
அந்த பார்வையை காண!

அவள்
ஆடிக்கொண்டிருக்கிறாள்
நான் ரசித்து
கொண்டிருக்கிறேன்
அவள் கடைசி வரை
திரும்பவே இல்லை இருந்தும்
என் கனவு கடைசி வரை
கலையவே இல்லை!

என் தோள்கள்
இருக்கும் போது
முகம் புதைக்க
உன் கைகள் எதற்கு?
அன்பில் அணைத்து
நேசத்தில் தழுவும்
இன்னொரு உயிர்க்காக தான்
அந்த காதல் இன்னமும்
காத்து கிடக்கிறது!

பெருந்தவம் கிடக்க வேண்டும்
அடுத்த ஜென்மமும் உன்
காதல் வரமாய் கிடைக்க!

கருமம் உனக்கு பிடிக்காத ,
எனக்கு பிடித்த
அந்த வேண்டாத காதல்
ஒரு ஓரமாய் கிடக்கட்டும்
கொஞ்சம் தோழமையோடு
உரையாடி
ஒரு தேநீர் அருந்த வா!

சந்திக்க சிரிக்க
ஒரு முத்தங்கள்
எல்லாம் போதாது
இன்னொன்று கொடுத்தால்
குறைந்தா போய் விடுவ
மறுப்பு பேசாமல்
இன்னொன்று கொடுடி!

அக்ரிமெண்ட் கூட செய்து
கொள்வோம் இப்படியே
ஆயுள் முழுதும்
அணைத்து கொள்ள!

நீ விளையாடு
நான் தோற்க்க தயாராகிறேன்
உன்னிடம் தோற்பதும்
வாழ்வின் வெற்றி தான்!



பேரன்பில் எல்லா
உயிரும்
அடங்கி தான்
போகும்!


**லி.நௌஷாத் கான்**



## கண்ணே என் கண்மணியே!!

கண்ணே என் கண்மணியே!
கண்ணுரங்கு பூமலரே!
பொன்னே என் பொன்மணியே!
பொத்திவச்ச மல்லிகையே!
நான் உறங்கி நாளாச்சு!
நட்டவிதை பூவாச்சு!
விட்டகுறை தொட்ட குறை போக்க
நீயும் வந்தாச்சு!

பொல்லாத உலகமிது பொருமையாக வாழவேண்டும்!
எல்லோரின் மனதிலும் அன்புவிதை தூவவேண்டும்!
கெட்டோரும நல்லோராய் மாறும்படி செய்யவேண்டும்!
இன்பம்துன்பம் இரண்டையும்சமநிலையில் பார்க்கவேண்டும்!
பூவோடு நாராக சேர்ந்தவரை மாற்றவேண்டும்!
ஊற்றாரும் சுற்றாரும் ஒன்றாக போற்றவேண்டும்.!
தீமைக்கு நன்மை செய்யும் இதயமது உனக்குவேண்டும்.!
துணிசலுடன் போராடி வெற்றிமாலை சூடவேண்டும்!
நம்பிக்கையின் துணையோடு
வீரநடைபோடவேண்டும்.!
இயன்றதை எல்லாமே இல்லாதவருக்கு
கொடுக்கவேண்டும்!
இயற்கையை போலவே பயன்கருதா
எண்ணம்வேண்டும்!



**கவிஞர் பொன். பனகல் பொன்னையா**

அமைதி வேண்டுவோம்
அகிலமும் செழிக்கவே!

கலகம் என்றிதே
கலைந்தே போகுமே
விலகிடும் விரைவாய்
விடியுமே அமைதி
நலமது நிலைக்க
நாமொன் றெண்ணிட
உலகப் போராய்
உயரப் போகும்
இந்நிலை நிலைப்பதோ
இழிவினை விதைக்குமோ?
செந்நீர் மட்டும் சேதம் தானே
என்றே எண்ணும்
எம்மனம் தன்னில்
நன்றாய்த் தாக்கும்
நாட்படு குண்டுகள்!!

குண்டுகள் பொழியும்
கூக்குரல் ஓலம்
அண்டை நாடுகள்
அதிலுமே நடுக்கம்
விண்தொடும் உயரமாய்
விலைமிகு இடங்கள்
குண்டிட அழிக்குமே
குவலயம் துளைத்தே!!

போரெனப் பட்டதோ
பூமியை அழிக்கும்
பாரென தெனவே
போட்டியில் உலகைச்
சீர்கெடச் சிதைப்பது!
சிறிதும் முறையன்றோ
வேர்முதல் தொடங்கி
விதையையும் அழிக்கும்
வேடிக்கை மாந்தராம்
விவரமில் தலைவரின்
கேடியாய் நிறைந்த
கோணல் புத்தியே!!

இடித்து நொறுக்கினர்
இல்லம் எல்லாம்
மடிந்து செத்தார்
மக்கள் அங்கே
உறவுகள் எல்லாம்
உடைந்தே போயின
உறவாம் அனைவரும்
உணர்வால் ஆங்கே
செய்வதே அறியாமல்
சிலைபோல் நிற்க
பொய்யாம் உலகம்
போரால்
மெய்யாய்
அழியும்
மேதினி
யோரே!



**வைரமணி**
சென்னை



## "ஒரு பொம்மலாட்டம் நடக்குது..."

மேடை தயார்
திரை திறக்கிறது...
பொம்மைகள்
வரிசையாய் நிற்கின்றன!

ஆனால் இம்முறை
மர பொம்மைகளில்லை
மனித பொம்மைகள்!

கயிறெங்கே தேடினேன்
கையில் இல்லை
கண்களில் இருந்தது
பயமாய்... ஆசையாய்...

அரசியல்வாதி சிரிக்கிறார்
அது சிரிப்பல்ல...
இழுக்கும் சைகை!

மக்கள் கைத்தட்டுகிறார்கள்
அது மகிழ்ச்சி இல்ல...
அழுத்தப்பட்ட ஒலி!

ஆடுவது பொம்மைதான்
ஆட்டுவிப்பது யாரோ
நாட்டுவது இலவச நாற்று
நாணமில்லா அறுவடைக்கு!

கரன்ஸிக் கயிற்றால்
கட்டப்பட்ட ஒட்டு மந்தைகள்!
இலவசக் காட்டின்
இற்றுப்போன
கரையான் புற்றுக்கள்!

போதையின் பாதையில்
வீழ்ந்தே கிடக்கும்
விட்டில்கள்! சாவதை
இலக்காக்கி
சரக்கேற்றும்
சாதாரணர்கள்!



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



## காதல் சுற்றும் வாலிபன்

என் இனிய காதல் தேவி நீ!
உன்னை(யே) நினைப்பதும்
உன்னை(யே) சுற்றுவதையும்
விடவும் வேறு மகிழ்ச்சியான
தருணம் இந்த வனப்பான
உலகத்தில் எனக்குக்
கிடைத்து விடுமா என்ன?!
என்னுள் அன்பைச்
செலுத்திக்காதலையே சுற்றி
வரச் செய்து என்னைச்
சக்ரவர்த்தியாக்கிய
வெற்றித் திருமகள் நீ!
என் ராணி உன்னை விடவா
வேறொரு தேவதை
என் மனதில் மகாராணியாக
வீற்றிருக்க முடியும்?!
என் அரசி பெண் அரசி
உன் முத்தங்களில் கிட்டாத
சுபிட்சம் சொர்க்கத்திலும்
கிடைக்காத இன்பம் என்றே
நான் நவில்வேன்!
நீ சைவத் திலகம் எனும்
போதும் எனக்காக(வே)
நிகழும் உன் அசைவுகள்
வரலாற்றில் நான் இது வரை
காணாத அன்பின் பெரும்
பேறு! காதலை இத்தனை
அழகாக்க உன்னை விட
வேறு யாரால் இயலும்?!
என் இனிய உயிர்க்காதல்
அன்பே!

நீ கொலஸ்ட்ரால் சுந்தரி
என்றாலும்(கூட)
உன்னிடம் பேரரசியின்
சாயல் அதிகம்! உன்னைப்
பிடிவாதம் குத்தகைக்கு
எடுத்திருந்தாலும்
அதைப் பற்றிக் கொண்டு
ஆட்சி புரிவதில் உனக்கு
நிகர் நீ மட்டும் தான்!
நான் உன்னைச் சுற்றும்
காதலனாக இருப்பினும்
மடக்கிச் சாய்த்து
அமர வைப்பதில் நீ ஓர்
அழகிய காதல்மதி!
உன் முத்தங்களுடன்
ஒப்பிடுகையில் இனிப்பின்
சுவை ஓரங்கட்டப்பட்டு
எங்கோ ஒரு
மூலையில்
இருப்பிடம்
தேடுகிறது!
நீ நம் காதலில்
நல்லாட்சி
நடத்துகையில்
வேறொரு ராணி இனி
எனக்கெதற்கு?!

நீ வெப்பமாக இருக்கும்
போதும் வெப்பன்ஸுடன்
இருக்கும் போதும்
வன தேவதை!
நீ குளிர்ச்சியாக இருக்கும்
போதும் முத்தங்களால்
என்னைக் குளிர வைக்கும்
போதும் நீ வானத்து
தேவதை! உன்னைச்
சுற்றும் போது நான் காதல்
இளவரசனாகிறேன்!
நீ என்னை
முத்தமிடும்போதோ
காதலுக்கே நான்
சக்ரவர்த்தியாகிறேன்!
சேலையோ சுடிதாரோ
தாவணியோ சல்வார்
கம்மீஸோ ரோஜா மலர்களால்
செய்தால் தான்
உனக்கு அழகாகவும்
பொருத்தமாகவும் இருக்கும்!
மனசுக்குள் வந்து விட்டாய்
என் மஞ்சத்திற்கும் வா!
ஒரு முத்தாரத்தில் சேர்த்து
வைத்த முத்துகளைப் போல்
உன் சிரிப்பழகு!
கன்னத்தில் மயிலிறகால்
வருடியது போல்
உன் இதழ்களின்
பெட்டகத்திலிருந்து
உதயமாகும் புன்னகை!
உன்னைச் சுற்றினால்
காதலையே சுற்றியது போல்
அத்தனையோர் அழகான
சுகம்! உன்னைப் பற்றி எழுத
நினைக்கிறேன் அழகான
மற்றும் பேரழகான
வனப்பான மற்றும் சுந்தரமான
அத்தனை வார்த்தைகளும்
வந்து வரிசை கட்டி
நிற்கிறது! எந்தப் பக்கம்
எப்பொழுது எப்படித் திருப்பிப்
பார்த்தாலும் நீதான் என்
காதல் நீ மட்டும் தான் என்
காதல் என்ற உண்மை
எனக்குத் தெரிய வருகிறது!

நீ எப்பொழுதாவது
என்னைச் சந்திக்க வரும்
போதே நான் கரும்புத்
தோட்டத்தில் புகுந்த
வேழமாகிறேன்!
இன்னும் நீ எந்த நேரமும்
என்னுடனே(யே) இருந்து
விட்டால் நான் காதல் சுற்றும்
வாலிபனாக அல்லவா மாறி
விடுவேன்! புன்னகை சிந்தும்
மலர் நீ பொழுது புலர்ந்தது
முதல் நள்ளிரவு வரை
உன்னைப் பற்றிய
சிந்தனையிலேயே
என் காதல் நதி ஓடுகிறது!
அழகி அப்சரஸ் சுந்தரி
தேவதை என்றெல்லாம்
உன்னை விதவிதமாக
வர்ணிக்கிறார்கள்!
ஆனால் நானோ இந்த
உண்மையையெல்லாம்
ரசித்து ருசித்தபடியே
வாழ்கிறேன்!



**முத்து ஆனந்த்** வேலூர்



நீ சிரித்துப் பேசினால்.
என் அடி வேரில்
ஈரம் தொலைவதில்லை..
எத்திசையிலும் வேர்கள் பரப்பி
இசைந்திருக்கிறேன்
உன் ஒவ்வொரு
வார்த்தைக்கும்.
உனக்கான தனிமையில்
எனக்கான நேரங்கள்
குறைவுபடுவதில்
கூம்பியே போகிறது
என் சூரியன்.
ஓரங்கமாய்ப் பிறந்திருந்தால்
பிரியாதிருந்திருப்பேனோ
உன்னை..
தன் கிளைகளைத் தானே
ஒடித்துக் கொள்கிற
மரமாகி விடுகிறேன்..
நீ முகந்திருப்பிப் போனால்.
வருடமுழுவதும்
பூக்க முடிகிறதென்னால்
ஏங்கித் தவிக்கும்
புத்திக்குத்
தெரிவதில்லை..
ஈருடலில் ஒருயிரின்
ரகசியம்.



**ரிஷபன்**

## இடம் அறிந்து செய்..!

இடம் பொருள் காலமறிந்து எதையும் செய்யுவோம்..!இங்கே
இலக்கினை அடையும் வரை.. துணிந்து செல்லுவோம்.!

பாலைவனத்தில் நெற்கதிர்கள் விளைவதில்லையே..
பரந்த கடல் நீரைக் குடிக்க இயல்வதில்லையே..
சோர்ந்து இங்குப் படுத்தவர்க்கு வெற்றி யில்லையே.!
பாய்ந்து இடம் பார்த்துப் பாய.. தோல்வியில்லையே.!

கவ்வுதற்கு காத்திருக்கும் கொக்குகள் பார்த்து..
பாய்வதற்கு பதுங்கின்ற புலிகளைப் பார்த்து..கார்காலம் பார்த்து
உழவர் விதைப்பதைப் பார்த்து..
கால நேரம் பார்த்து செயல் புரிய வேண்டுமே.!

இடம் பார்த்து..தடம் பதித்து.. நடைபோடுவோம்..!
வடம் பிடித்துப் புவித்தேரை நிலை நாட்டுவோம்..!
நடம் ஆடும்.. தலம் பார்த்து களமாடுவோம்!
இடம் பார்த்து.. வெற்றிக்கு விடைத் தேடுவோம்.!

**வே.கல்யாண்குமார்.**






## அவள் பறந்து போனாளே !

வீடே நிசப்தமாக இருந்தது. பின் ட்ராப் சைலன்ஸ் என்று கூறலாம். அபர்ணா ?வின் காரியங்கள் முடிந்து, அதற்காக வந்திருந்த உறவினர்கள் எல்லாரும் புறப்பட்டுச் சென்று விட்டனர்.

அபர்ணா முரளியின் மனைவி. திருமணம் முடிந்து மூன்று வருடங்களே வாழ்ந்தாள். அதற்கு அத்தாட்சியாக இறப்பதற்கு சில நாள் முன்பு கருவுற்றிருந்தாள். நாள் கழித்து உண்டான அபர்ணாவை தன் உள்ளங் கையில் தாங்கினான் முரளி.

ஆனால் விதி அபர்ணாவை இரண்டு நாள் அடித்தகாய்ச்சலில் பலி கொண்டது. தாயும் சேயும் சேர்ந்து மரித்தனர்.

அழுது அழுது ஓய்ந்து போயிருந்தான் முரளி.

அருகில் நிழடாட தலை தூக்கிப் பார்த்தான். அம்மா செண்பகம் தன் கையில் பெட்டியுடன் நின்றுகொண்டிருந்தாள்.

“ நீ எங்கம்மா கிளம்பிட்டே ?” கேள்வி கேட்ட மகனைப் பார்த்து வேதனை யோடு சிரித்தாள் செண்பகம்.

“ இதென்னப்பா கேள்வி ? நான் எங்கிருந்து வந்தேனோ அங்கேதான் போகறேன்.”

“ உன்னை ஹோமுக்குப் போகச் சொன்னவளே போய்ச் சேர்ந்துட்டா. அப்புறம் நீ எதுக்குப் போகணும் ?”

“ பைத்தியக்காரா ! நான் கடைசி வரை ஹோமுலதான் இருக்கணும்னு தீர்த்துச் சொல்லிட்டா உன் பெண்டாட்டி . நீயும் தானே கூட இருந்தே … மறந்துட்டியா?
அதை மீறி நான் எப்படி இங்க இருக்க முடியும் சொல்லு ?”

“ அவளோட கடைசி காலம் வரைன்னு எடுத்துக்கோயேன். ஸோ அவளோட காலம் முடிஞ்சுது. உனக்கும் விடியல் கெடைச்சாச்சு. பேசாம பெட்டியைக்கொண்டு போய் உள்ளே வச்சுட்டு ஆக வேண்டியதப் பாரும்மா !”

“ முரளி, உனக்கேற்றார் போல பேசாதே. கடைசி காலம் வரை நான் ஹோமுல இருக்கணும்ங்குறதுதான் உன் பெண் டாட்டி யோட ஆசை. அதை நான் மீற முடியாது. கிளம்பறேன்.”

முரளி திரு திருவென்று விழித்தான்.
கண்களில் நீர் சுரக்க ஆரம்பித்தது.

செண்பகம் மெல்ல திரும்பி நடந் தாள். முரளிக்கு மீண்டும் அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

“ அத்தை, போகாதீர்கள். நான் செஞ்சது மகாப் பெரிய தப்புதான் ! என்னை மன்னித்துவிடுங்கள். பழசையெல்லாம் மறந்து உங்கள் பிள்ளையோடு இருங் கள். கையெடுத்து கும்பிடறேன்..” அருவமாக இருந்த அபர்ணாவின் கெஞ்சல் வெளி யேக் கேட்கவில்லை.

திரும்பிப் பார்க்காமல் சென்று கொண்டிருந்த செண்பகத்தின் தோளைத் தொட முயன்ற அவளின் கை காற்றோடு கலந்தது !

“ அத்தை.. ப்ளீஸ்..போகாதீர்கள். …..அத்தை…அத்தை ” அபர்ணாவின் ஆவி கதறியது. ம்ஹூம் ! காற்றின் சப்தம்தான் ஒலித்தது !



தொடர்ந்து நடந்து சென்ற செண்பகம் கை தட்டி ஒரு ஆட்டோவை நிறுத்தி னாள். கடைசியாக ஒரு தடவை தன் வீட்டை ஆசை தீரப் பார்த்துவிட்டு அந்த ஆட் டோவில் ஏறினாள். ஆட்டோ பறந் தது.

**வி.கே.லக்ஷ்மிநாராயணன்**

## அன்பு

அன்பு நீடிய சாந்தமும்
தயவு உள்ளது !

அன்புக்கு பொறாமைஇல்லை!
அன்பு தன்னை புகழாது!

இறுமாப்பாயிராது!
அயோக்கியமானதைச்
செய்யாது, தற்பொழிவை
நாடாது சினமடையாது தீங்கு
நினையாது!

அநியாயத்தில்
சந்தோஷப்படாமல்
சத்தியத்தில் சந்தோஷப்படும்!

சகலத்தையும்
தாங்கும் சகலத்தையும்
விசுவாசிக்கும்
சகலத்தையும் நம்பும்
சகலத்தையும் சகிக்கும் !

நிறைவானது வரும்போது
குறைவானது ஓய்ந்து போகும்!

அன்பு என்பது எதிர்பார்ப்புகள்
இல்லாத தூய உணர்வு !

சொல்லில் அடங்கா உணர்வு!

இதயங்களை
இணைக்கும் பாலம்!

எல்லைகள் இல்லாதபேரமைதி
மௌனத்திலும் பேசும் மொழி!

விசுவாசம், நம்பிக்கை, அன்பு,
இம்மூன்றும்
நிலைத்திருக்கிறது
இவைகளில்
அன்பேபெரியது!



**பெ. திருமுகம்**
**ஆசிரியர்**
மணமேல்குடி

## ஆழியும் அவளும்…

ஆழியும் அவளும் ஒன்று
என்று மார்கழியில்
நினைத்தேன் நான் இன்று!
தூளியில் ஆடும் குழந்தை
போல துள்ளி எழுவாள்
என்னை கண்டு!

ஆழ் கடலின் நடுவே
படகினிலே! பயணம்
சென்றால் பகலினிலே!
இடையே தெரியா உடை
உடுத்தி! நீல ஆடையில்
மயில் ஒருத்தி!

வலக்கையில் பாதம் தான்
பிடித்து இடக்கையில்
ஆடைஅதை திருத்தி!
முகத்தை காட்டா
முழுமதியாய் கெண்டை
மீனின் கண்ணழகி மலர்
கொண்டை அழகை
காட்டுகிறாள் !

ஆழியின் எல்லை
முழுவதையும் கண்டவர்
உலகில் கிடையாது! பெண்
அவளின் மனதில்
உள்ளதையும் கண்டிட
என்றும் முடியாது!
ஆழியும் அவளையும்
ஒன்றினைக்க ஒற்றுமை
இதைவிட வேரில்லை!



அவளின்
நினைவுகள்
விழுதுகளாய்…
மனதில்
முளைவிட்ட
வேர் எல்லை.

**கவிஞர்**
**பொன். பனகல்**
**பொன்னையா.**



## காதல் - தேர்தல் !

அண்ணலும் நோக்கினான்
அவளும் நோக்கினாள்..
என… நேர்காணலில்
தொடங்குகிறது காதல்….
வேட்பாளர் தேர்வில்
வெற்றி பெற்றால் காதல்
அரும்புகிறது..

அரும்பிய காதல் வெற்றி
பெற பெற்றோர் நடத்தும்
கருத்துக்கணிப்பில்..
வெற்றி பெற்றாக வேண்டும் !

எதிர்ப்பை மீறும் காதல்கள்…
ஆதரவு வாபஸால்
கலைந்து போவதும் உண்டு…

காதலில் கூட்டணியை
சேர்க்காதீர்.. கூட்டணி
ஆலோசனை கள்ள ஓட்டிற்கு
தூண்டிவிடும்…



தனியே
நிற்பீர் வெற்றி
பெறுவீர் !
காதலிலும்…
தேர்தலிலும் !

**எம்.பி.தினேஷ்.** கோவை

## நீரின்றி அமையாது உலகு!

நேரிசை வெண்பா!

நன்னீர் வளங்களை
நாடோறும் மேம்படுத்த
முன்னெடுக்கும் திட்டத்தால்
மேன்மையாய்..முன்னேற
எல்லோர்க்கும் தூய்மை
இனியநீர்கிட்டிட பல்லாற்றும்
பாடுபடுவோம்!

நீரின்(றி)
அமையாதுலகென்போம்
நேர்ந்திட்ட யாருமே
வாழ்ந்திட்ட அன்பான…
நீரன்றோ தேவையென்போம்
சிக்கனம் தேர்ந்தே
கடைபிடிப்போம்
ஆவலாம் நீரே.. அழகு!

உயிர்களைத்தாங்கிநிற்கும்
உண்மை வளமே
நயன்மையாய் நல்லுயிர்கள்
யாவும்.. வியப்பாக
வாழ்ந்திடும்நீராலே மாசின்றி
வாழ்வதற்கே ஆழ்ந்த
நல்தூய்நீர் அழகு!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**



## கண்ணே என் கண்மணியே!!

கண்ணே என் கண்மணியே!
கண்ணுரங்கு பூமலரே!
பொன்னே என்
பொன்மணியே! பொத்திவச்ச
மல்லிகையே! நான் உறங்கி
நாளாச்சு! நட்டவிதை
பூவாச்சு! விட்டகுறை
தொட்ட குறை போக்க நீயும்
வந்தாச்சு!

பொல்லாத உலகமிது
பொருமையாக
வாழவேண்டும்!
எல்லோரின் மனதிலும்
அன்புவிதை தூவவேண்டும்!
கெட்டோரும நல்லோராய்
மாறும்படி செய்யவேண்டும்!
இன்பம்துன்பம்
இரண்டையும்சமநிலையில்
பார்க்கவேண்டும்!
பூவோடு நாராக சேர்ந்தவரை
மாற்றவேண்டும்!
ஊற்றாரும் சுற்றாரும்
ஒன்றாக போற்றவேண்டும்.!
தீமைக்கு நன்மை செய்யும்
இதயமது உனக்குவேண்டும்.!
துணிசலுடன் போராடி
வெற்றிமாலை சூடவேண்டும்!
நம்பிக்கையின் துணையோடு
வீரநடைபோடவேண்டும்.!
இயன்றதை எல்லாமே
இல்லாதவருக்கு
கொடுக்கவேண்டும்!
இயற்கையை
போலவே பயன்கருதா
எண்ணம்வேண்டும்!

**கவிஞர் பொன். பனகல் பொன்னையா**



## அவள்

நீரூற்றைப்
பார்க்கும்போதெல்லாம்
வற்றா நின் அன்பே
நினைவிலாடுகிறது…

வெள்ளைக் காகிதத்தைப்
பார்க்கும்போதெல்லாம்
உன் உள்ளத்தைப்
பார்ப்பது போலவே…

வீசும் தென்றலை
ஸ்பரிசிக்கும்போதெல்லாம்
இதமான உன்
வார்த்தைகளே மனதில்…

நிலவொளியின் கீழ்
நிற்கும்போதெல்லாம்
தவறாதுணர்கிறேன்
தண்மை தரும் உன்
அண்மையை…

ஓடும் நதியைக்
கடக்கும்போதெல்லாம்
ஓயாமல் கடமையில் நீ
உழல்வதே நினைவில்…

ஓங்கி வளர் வேம்பைக்
காணும்போதெல்லாம்



நம்
குடும்பத்தைத்
தாங்கி
நிற்கும்
வேராக நீ
நிற்பதே…

உன்னை நினைவுபடுத்தாத
ஓரழகும் இல்லை
இவ்வுலகில்.

**கே. பி. ஜனார்த்தனன்**

## ஆணி வேராய்…

அன்றொரு நான் மாலை…
அலுவலகம் விட்டு
அயர்ந்து போய்
வீட்டுக்கு வந்திருந்தேன்…
பள்ளி விட்டுத் திரும்பிய
பையன் பசிக்கு பலகாரம்
இல்லை யென்று
படு சீற்றம் காட்டியவாறு
கண்ணயர்ந்தான்
வேலைப் பளுவில் வெந்து
நொந்து வீரியம் இழந்த
என்னிதயம் அறிவானோ
அவன்? வேதனை எதையும்
வெளியில் காட்டாது
தட்டில் அவன் விருப்ப
உணவைக் காட்டி நின்று
செல்லமாய்த் தான் தட்டி
எழுப்பினேன்…
சிணுங்கிக் கொண்டே
சொன்னான் அவன்…
வேலைக்குப் போகாத
வெறும் அம்மா தான்
வேண்டும் என்று…



அந்தக்
கணத்தில்
என் ஆருயிர்
மைந்தன்
அழிந்து
போனதென்று
நான்
நினைத்திருந்த
ஆணாதிக்கத்தின்
ஆணிவேராய் அப்பட்டமாய்
தெரிந்தான் எனக்கு !

**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்



யார் சுதந்திரமும்
யார் கைகளிலும் இல்லை
அவனை அவனாகவும்,
அவளை அவளாகவும்
இருக்க விடுவது தான்
சுதந்திரம் என்பதை
நாம் ஒரு போதும்
உணரப் போவதே இல்லை!

யார் கண்ணிலும்
படாத படி இப்புவியை விட்டு
தொலைந்து போதலும்
வரம் தான் என்பதை
வலி பட்டவன் மட்டுமே
உணர்வான்!

பேரன்பில் எல்லா உயிரும்
அடங்கி தான் போகும்!

எது அழகென்று
கடவுள் கேட்டார்?



உன்
வெட்கத்தை
விடவா
வேறொரு
பேரழகு
இருந்து விட
போகிறது!

**லி.நௌஷாத் கான்**

## உரிமையும்.. கடமையும்.!

*நமது ஓட்டுக்கு நிகரான
நோட்டு இல்லீங்க நாட்டுல…
விவரமில்லாம காசுக்காக
வாக்கை வீசியெறிஞ்சுட்டு…
வெறிச்சு நிக்காதீங்க
ரோட்டுல..

வரலாற்றை
புரட்டிப்போடும் வலிமை..
நமது விரல்களுக்கு உண்டு…
அதனால் அனைவரும்
வாக்களிப்பது நன்று..

ராமன் ஆண்டால் என்ன?..
ராவணன் ஆண்டால்
என்ன?..
என்று வாக்குப்பதிவு
நாளில்..கால்நீட்டி
தூங்காதீங்க… படிச்ச
மேதாவிகளே பாவிகளாய்
ஆகாதீங்க..
வாக்களிப்போம் வாங்க
நூறுசதம்..



வளரும்
வல்லரசு
நாட்டிற்கு
அதுவே சோறு
பதம்.!

**க.குமாரகுரு,**
மயிலாடுதுறை



## தினம் தினம் கவிதை தினம்!

எவ்வளவு வேடிக்கை பார்
என் பேரன்பே!
நினைத்த போதெல்லாம்
நாம் ஒருவரை ஒருவர்
படித்துக்கொண்டிருக்கிறோம்!
ஆனால் –இன்றொரு நாளை
கவிதை தினம் என்கிறார்கள்!
ஆக –மற்ற நாட்கள்
அத்தனையும்
கவிதை(களு)க்கு
விடுமுறையா?!
எவ்வளவு விந்தை பார் இது!
கவிதை படிப்பவர்களை விட
எழுதுபவர்கள் அல்லவா
பன்மடங்கு அதிகரித்து
விட்டார்கள்! எங்கு
வேண்டுமானாலும்
எதைப் பற்றி
வேண்டுமானாலும்
சொல்லும் போது
ஒவ்வொருவரின் கவிதையும்
என்னமாய்ப் பிரமிக்க
வைக்கிறது! காதல்
ப்ரியன்களை விடக்
கவிப்ரியன்கள்
தானே நம்மைச் சுற்றி
இருக்கிறார்கள்!



ஒரு நாள்
போதாது
இன்றொரு நாள்
போதாது
தினம் தினம்
கவிதை தினம்
வேண்டும்!

**முத்து ஆனந்த்** வேலூர்



வலை வீசத் துடிக்கும்
எனக்கு உன் வாள் வீச்சு
மயக்கம் தர

புன்னகைக்கும் கண்
விளிம்பில் என்னை மறந்து
போனேன் என்பேன்

கண்ணசைவிற்கு
காத்திருக்கும் எனக்கு
எண்ணமெல்லாம் நிறைந்து
என்னுள்



வண்ணமயமாய்
வந்துவிடு
நீயும் வழியில்
விழிவைத்து
தடம்
பார்த்திருப்பேன்

**வி.பிரபாவதி,** மடிப்பாக்கம்

## வாழ்க்கை கனவு

வண்ணக் கனவுகள் தான்
எண்ணத்தில் நிறையும்
போது வாழ்க்கை ஒளியாக
மாறும் …விடியலில்
வரும் ஆதவன் தருவது
அளவில்லா மகிழ்ச்சியுடன்
நம்பிக்கையும் ..
சின்ன கனவுகள்
கூட நிறைவேறினால்
எல்லையில்லா
மகிழ்ச்சிதானே…
செய்யும் செயலில்
நம்பிக்கை இருந்தால்
கனவு நினைவாகுமே …
வெற்றி வராவிட்டாலும்
தோல்வி இல்லை என்று
மகிழ்ச்சியுடன் தொடங்கி
விடு … இதில் கிடைப்பது
வெற்றிக்கனையுடன்
நம்பிக்கையும் தீப ஒளி
என்ற விளக்கு எறிய
தேவை நம்பிக்கை
என்ற எண்ணைதான்…
உறக்கத்தில் வரும்
கனவை நினைவு படுத்தி
முன்னேறிச் சென்று விடு ….
பிறகென்ன…….. வாழ்க்கை
வாழ்வதற்கே வெற்றி…..
வெற்றி தான்….. வாழ்க்கை
வாழ்வதற்கே…..

**உஷாமுத்துராமன்**





## உலக தண்ணீர் தினம்!

தண்ணீர் சிக்கனம் தேவை இக்கனம்
தண்ணீரை தண்ணீராக செலவழிப்பதை நிறுத்துங்கள்!

வருங்கால சந்ததிகளுக்கும் வேண்டும் தண்ணீர்
வீணாக செலவழிப்பதை முதலில் நிறுத்துங்கள்!

குழாயை திறந்துவிட்டு கைகழுவ வேண்டாம்
குவளையில் மோந்து கைகழுவ வேண்டும்!

தண்ணீருக்காக உலகப்போர் வரும் என்கின்றனர்
தண்ணீரை சேமித்து உலகப்போர் தவிர்த்திடுவோம்!

குற்றால அருவியில் குளிப்பதைப் போலவே
குடும்பத்தில் இல்லத்தில் குளிப்பதை நிறுத்துங்கள்!

மழைநீர் சேகரிப்பை கட்டாயமாக்கிடுவோம்
மழைநீரை வீணாக்காமல் சேமிக்கப் பழகிடுவோம்!

வானிலிருந்து வரும் அமுதம் மழையாகும்
வீணாகக் கடலில் கலப்பதைத் தடுத்திடுவோம்!

அண்டை மாநிலங்களுக்கு இரக்கம் இல்லை
அனைத்து மழைத்துளிகளையும் சேமித்து வைப்போம்!

நீர் இன்றி அமையாது உலகு உரைத்தார் வள்ளுவர்
நீர் இன்று வியாபாரம் ஆனது உலகில்!

விலை கொடுத்து வாங்கவேண்டிய அவலம்
விவேகமாக சிந்தித்தால் நீக்கிடலாம் அவலம்!

அடிப்படைத் தேவைகளின் அடிப்படையானது தண்ணீர்
அனைவருக்கும் நல்ல குடிநீர் வழங்கிட வேண்டும்!

குழாயில் வரும் நல்ல தண்ணீரைக் குடிக்கலாம்
குடிநீரை செம்புப் பாத்திரத்தில் வைத்துக் குடிக்கலாம்!

சுத்திகரிக்கப்பட்ட நீரில் சத்தும் சுவையும் இல்லை
சுகாதாரம் என்ற பெயரில் நடக்கும் ஏமாற்று வேலை!

மனிதனின் தாகம் தணிப்பது மட்டுமல்ல தண்ணீர்
மனிதனின் உயிர் வளர்க்கும் நீர் தண்ணீர்!

உடல் சுத்தமாகவும் உடை சுத்தமாக்கவும் தண்ணீர்
உலகம் இல்லை உன்னதத் தண்ணீர் இன்றி!

**கவிஞர் இரா. இரவி**

## ஸ்ரீ கிருஷ்ணர் உபாசகர் பரிகார புகழ்

ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US 9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
- PREDICTION & SOLUTIONS
- MONEY
- LOVE
- HEALTH
- FAMILY
- BUSINESS
- CAREER
- MARRIAGE

## ARG CONSTRUCTIONS

ARG
We Build Your DREAM HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
- Residential Construction
- Commercial Construction
- Customer Satisfaction

Contact Us 9710348377

## VINAYGA ENTERPRISES

WANTED
COMPUTER OPERATOR
( FEMALE)
ONIDA AUTHORISED SERVICE CENTRE
CONTACT:9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET, ALWARPET CHENNAI

## PREMIUM LAND SALE NEAR PARANDUR AIRPORT

YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!
Location: Just 6 KM Near Parandur New Airport
Price Details
- ₹700 to ₹2200 per Sq.Ft
- Affordable & High Return Investment

Why Invest Here?
- Fast Developing Area
- Near Upcoming Airport
- Excellent Appreciation Value
- Suitable for Residential & Investment
- Easy Road Access

PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS - BOOK NOW!

## PREMA ENTERPRISES

FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
DO YOU WANT TO BUY OR SELL PROPERTY OR LAND?
+91 9884417843

## Get Free Jobs Alert on Your WhatsApp

Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs

## ST COURIER

The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

## Launch Your Own Secure Crypto MLM Software Today!

@4999/- onwards
CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com

## WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift
7540003588

## ADVERTISE WITH US

CONTACT US
9438610756

## WANTED

### JAY SECURITY FORCE

பணி வாய்ப்புகள்
- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ, வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம், மேட்டுக்குப்பம்- சென்னை-97

## செக்யூரிட்டி கார்டுகள் தேவை

கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம் கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை
அணுகவும்: 9840861539

## S.R Call Drivers Travels

24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.

## Just499 JOB WEBSITE SOFTWARE

We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

## Euro Kids

Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
based on Harvard's Project Zero
Admissions Open for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081

## just499 MLM SOFTWARE

All Types of MLM Software Solutions Available
Binary | Unilevel | Matrix | Board | Generation | ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We
provide
Targeted Leads
to grow your
buisness
Boost
your
business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005



SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
We Build Perfection
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909
+91 96770 88843
info@sevenstarslogistics.com
www.sevenstarslogistics.com



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், பூந்துறை கிராமம்
தமிழ்நாடு அரசு இந்துசமய அறநிலையத்துறைக்கு உட்பட்ட
அருள்தரும் பாகம்பிரியாள் உடனமர்
அருள்மிகு புஷ்பவனேஸ்வர சுவாமி
ஸ்ரீ அலமேலு மங்கை லக்ஷ்மி சமேத
ஸ்ரீ தாமோதரப் பெருமாள்
அருள்தரும் அங்காளம்மன்
ஆகிய திருக்கோவில்களின்
ஜீர்ணோத்தாரன அஷ்ட பந்தன
மஹா கும்பாபிஷேகம், மஹா சம்ப்ரோக்ஷணம்
எனும் திருக்குட நன்னீராட்டு
பெருவிழா அழைப்பிதழ்
பங்குனி 11-ஆம் நாள் 25.03.2026 புதன்கிழமை
நேரம் : காலை 5.45 மணிக்குமேல் 10.00 மணிக்குள்


74369 14247
CRYTOCURRENCY
SOFTWARE DEVELOPMENT SERVICE
4999/-
Mobile App Development
Website Maintenance and Support
Website Hosting and Domain Management
HTML
PHP
C++
CONTACT US
98537 19337
www.mlmperfect.com


விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்ஒலக்கூர்
பசுமலை ஸ்ரீ சுப்ரமணிய சுவாமிக்கு விசுவாவசு வருஷத்திய
பிரமோற்சவப் பத்திரிக்கை


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009







## WANTED

Needed female staff to look after children, patients.

Contact

9150989424

## WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872
















தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma


Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE








# பல்சுவை களஞ்சியம்




நண்பரின் இல்லத்தில் நடைபெற இருந்த விசேஷ நிகழ்ச்சிக்காகப் பதினொன்று பழங்கள் கொண்ட ஒரு சீப் நாட்டு வாழைப்பழம் தேவைப்பட்டது.பழ மார்கெட்டிற்குச் சென்று வியாபாரிடம், "ஒரு சீப் பழம் வேணும்..கொஞ்சம் சீப்பா..போட்டுத் தாங்க.." என்றோம்.

அதற்குக் கடைக்காரர்.."உங்களுக்குச் சீப்பா வேணுமின்னா..தாரா வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்.உடனே நண்பர் "தாரா.. வாங்கினால் உங்ககிட்ட எதுக்கு சீப்பா கேட்கிறோம்.." என்றார்."மீண்டும் அப்போ.. சீப்பா வேணுமின்னா சீப்பா கிடைக்காதுன்னு".. கடைக்காரர் சொல்லவே .."மறுபடியும் முதல்ல இருந்தா.." என வடிவேல் பாணியில் கேட்டு அவர் சொன்ன விலைக்கே பழத்தை வாங்கி நடையைக் கட்டினோம்.

## தாய்மை உணர்வே நீ வாழி!.....

இன்று வாசலில்
மார்கழிக் கோலம் போட்டு
செம்மண் கரை கட்டும் போது
தாயை இழந்த செவலை நிற
நாய்க் குட்டி ஒன்று சிணுங்கிக்
கொண்டே ஓடி வந்து
என் கால்களுக்கு நடுவே
புகுந்து உரசி உரசி ஒரு
கதகதப்பைத் தேடியது!

என்னை முன்னேயும்
பின்னேயும் நகர முடியாமல்
நான் தவிக்க அது என்
என் தாய்மை உணர்வை
மோப்பம் பிடித்து என்
பாதங்களில் ஏறி ஏறி
தாவப் பார்க்கிறது!
என்ன செய்ய ஏது செய்ய



தெரியவில்லை என் கைகள்
அனிச்சையாக அதை தூக்கி
நெஞ்சில் வைத்து மெது
மெதுவாக வருடிக் கொடுக்க
அதன் தவிப்பு அடங்கி
அமைதியானது.

வென் மேகப் பொதியாக
என் கைகளுக்குள் சுருண்டு
துளி சிணுங்கல் இல்லாமல்
தாய் மடி என்று நம்பி அந்தக்
குட்டி என் கைகளில்
கண் அயர்ந்தது!

என் உறவுகள் என்னை
கை விட்ட நிலையில்
தனிமை வெப்பம் தகிக்க
காலனுக்காக காத்திருந்த
எனக்கு மறுபடியும் தாயாக்கிய
உணர்வை தந்த அந்தச் செவலைக்
குட்டிக்காக இன்னும் பல நாள்
உயிர் வாழ துணிந்து விட்டேன்!

## பெண்கள் தீவு..!!!

கேரளத்துக்கு அருகே அரபிக் கடலில் அமைந்துள்ளது லட்சத்தீவு, இந்தத் தீவுக் கூட்டத்தில் இரண்டாவது பெரிய தீவு மினிக்காய். மாலத்தீவுக்கு நிகரான எழில்மிகு கடற்கரைகள், பரந்து விரிந்த வெள்ளை மணற்பரப்பு, அழகிய ரிசார்டுகளின் , அழகு நமது அரபிக் கடலில் அமைந்துள்ள மினிகாய் தீவிலும் இருக்கின்றன. இதில், நீர் விளையாட்டு ஆர்வலர்களுக்கும் சிறந்த இடம். இந்தத் தீவைச் சுற்றிப் பார்க்க குளிர்காலமும், கோடைக்கு முந்தைய காலமும் ஏற்றது.



கோடைக்காலம் இங்கு மிகுந்த வெப்ப மயமாக இருக்கும். தற்போது சிறந்த சீதோஷ்ண நிலை நிலவும். இந்த இடத்தின் பண்டைய பெயர் மகி வாடு. அதாவது, பெண்கள் தீவு என்று பொருள். ஜசிரத் அல் - மாலிகு என்று அறியப்படும் அரேபிய வணிகரின் ஒரு சொல்லிலிருந்து இந்தப் பெயர் தோன்றியது. ஆங்கிலேயர் இத்தீவில் இறங்கி சுற்றி வந்தபோது, உள்ளூர்வாசியை பிடித்து இத்தீவின் பெயரை கேட்டுள்ளார். அவர் மாலிகு என கூறியுள்ளார். மினிக்கா ராஜ்ஜியத்தைச் சேர்ந்தவர் என தெரிந்து கொண்டு மாலிக்குவையும், மினிக்காவையும் இணைத்து மினிக்கா ஆனது.

ஆங்கிலேயரால் 19-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட சுமார் 170 அடி உயரம் கொண்ட பழைமையான லைட்ஹவுஸ் சுற்றுலாவாசிகளைக் கவருகிறது. இதுதான் விமான ஓடுதளம் உள்ள ஒரே தீவு, இந்த அகத்தி தீவு. மாலத்தீவைப் போல் நீர் விளையாட்டு நடவடிக்கைகளுக்காக நன்கு அறியப்பட்ட இடம். லட்சத்தீவில் பார்க்க வேண்டிய சிறந்த இடங்களில் இதுவும் ஒன்று. லட்சத்தீவில் ஸ்கூபா டைவிங் செய்யவும் இடமுள்ளது. இயற்கையின் மாயாஜாலத்தை தெரிந்துகொள்ள இது ஒரு சிறந்த வழியாகும்.

நீர்வழி அல்லது வான் வழியாக மட்டுமே இங்கு வர முடியும். அகத்தி விமான நிலையத்தில் இறக்கி மினிக்காய் தீவுக்கு செல்ல முடியும். நீர் வழி என்றால் கொச்சியிலிருந்து பயணிகள் கப்பல்கள் பல இயக்கப்படுகின்றன. அதில் முன்பதிவு செய்துவிட்டுச் செல்லலாம். நேரடி விமானங்கள் அகத்தி தீவுக்கு கிடையாது. கொச்சி விமான நிலையம் வந்து, அங்கிருந்து செல்லலாம். விமானக் கட்டணம் ரூ.5 ஆயிரத்தில் இருந்து உண்டு.

## மீம்ஸ்




"Recentஆ வெய்ட் குறைஞ்சுருப்பீங்களே தோழி.."

"ஏன் அப்படி கேட்குறீங்க?"

"1 மாசமா என் mind ல ஓடிட்டே இருக்கீங்களே.. அதான்.."😉🚶





## விடுகதை

| | |
|---|---|
| ஊரெல்லாம் சுத்துவான், ஆனால் வீட்டிற்குள் வரமாட்டான். அவன் யார்? | செருப்பு |
| தண்ணியில்லாத காட்டிலே அலைந்து தவிக்கும் அழகி. அவள் யார்? | ஒட்டகம் |
| ஊசி நுழையாத கிணற்றிலே ஒரு படி தண்ணீர்? | தேங்காய் |
| பாலாற்றின் நடுவே கறுப்பு மீன் தெரியுது அது என்ன? | கண்கள் |
| முதலெழுத்து தமிழின் அடுத்த எழுத்து கடை மூன்று சேர்ந்தால் ஒரு எண்ணிக்கை மொத்தத்தில் இது வருமுன் எச்சரிக்கை தேவை? | ஆபத்து |
| மண்ணுகுளே கிடப்பான் மங்களகரமானவன் அவன் யார்? | மஞ்சள் |

## "இவர் வேற மாதிரி"

கல்யாணக் கூட்டத்தில் திவாகர் காதில் கிசுகிசுத்தாள் கௌரி. 'அதோ.. அங்க நிற்கிறார் பாருங்க... மஞ்சள் நிற ஜிப்பா... அவர்தான் நேதாஜி மாமா" திவாகர் திரும்பி அந்த நபரைப் பார்த்தான். சுமார் அறுபது வயதிருக்கும்!. "சரி அவருக்கென்ன இப்ப?" கேட்டான்.

"போன வருஷம்.... அவரு மனைவி இறந்தப்ப.. அமர்க்களம் பண்ணிட்டாரு... சவம் ஹால்ல கிடக்கும் போதே அறைக்குள்ளார போயி தூக்கு மாட்டிக்க முயன்றாரு... கதவை உடைச்சுக் காப்பாத்தினாங்க!.. அப்புறம்.. சுடுகாட்டுல சவம் எரியறப்ப... திடீர்னு நெருப்புக்குள்ளார பாய்ஞ்சிட்டாரு!.கஷ்டப்பட்டுக் காப்பாத்தி ஆஸ்பத்திரில சேர்த்தாங்க!... மனைவி மேல அத்தனை பாசம்!... உசுரையே வெச்சிருந்தாரு!... ஹூம்... நீங்களும்தான் இருக்கீங்க"

மண்டபத்திலிருந்து கிளம்பும் போது எதிரே வந்த அந்த நேதாஜி, "என்னம்மா கௌரி சௌக்கியமா?' கேட்டு விட்டு ஒரு இளம் பெண்ணை அழைத்து, "இவதாம்மா.. என் புது மனைவி.... மூணு மாசமாச்சு கல்யாணமாகி... அதிகமா கூப்பிடாம சிம்பிளாவே முடிச்சுட்டோம்" என்றார்.

வீடு வரும் வரை கௌரி திவாகரிடம் பேசவேயில்லை.



## ஜோக்ஸ்



"தலைவர் பலே கில்லாடின்னு எப்படி சொல்றே?'

"பின்னே அடிக்கடி ரெய்டு வந்த ஆபிஸரை தனக்கு சம்பந்தி ஆக்கிட்டாரே....."

##################################################

"தலைவர் தன் வாயாலயே கெடுத்துக்கிட்டாரா. எப்படி?"

"ரெய்டுல பிடிப்பட்ட லிஸ்டை காட்டின அதிகாரிங்க கிட்டே ஈசிஆர் ல உள்ள ரிசார்ட், கார்டன் எல்லாம் இதுல காணோமேன்னு கேட்டு இருக்கார்..."

##################################################



"தலைவரே உங்களுக்கு சிலை வைக்கலாம்னு இருக்கோம்....."

"உயிரோட இருக்குறவங்களுக்கு சிலை வைக்க கூடாதய்யா...."

"நீங்க தானே சொன்னீங்க.. நடைபிணமா வாழுறேன்னு...."

################################################

"கட்சியிலே சேர வந்த பெண்கள் தலைவரை போட்டு அடிச்சாங்க...?"

"பின்னே...என் இத்தனை வருச சர்விஸ்ல இப்படிப்பட்ட பிகர்களை பாத்ததில்லைன்னு ஜொள்ளு விட்டா சும்மா விடுவாங்களா...?"

##################################################

"கட்சிக்காக தொண்டர்களிடம் எதுவும் வாங்கியதில்லைன்னு தலைவர் அடிக்கடி சொல்றாரே..."

"ஆமாம்...வாங்குவது எல்லாம் அவர் குடும்பத்துக்காக தானே..."

##################################################

"தலைவரே...கட்சிக்கு ஒரு வாரிசு வந்துட்டு....."

"என்னய்யா சொல்றே?"

"உங்களுக்கு கொள்ளு பேரன் பிறந்திருக்கான்...."

##################################################

"நம்ம கட்சி தான் சுத்தமான கட்சின்னு தலைவர் அடிக்கடி சொல்றாரே...?"

"எதிர்கட்சிகாரங்க கழுவி கழுவி ஊத்துறதை தான் நாசுக்கா சொல்றார்....."

##################################################

"தலைவர் நாட்டுபற்று மிக்கவர்னு எப்படி சொல்றே...?"

"நாட்டு சரக்கு, நாட்டு கோழி, நாட்டுகட்டை இதுதான் அவருக்கு ரொம்ப பிடிக்கும்...! "

##################################################

-நாகை பாபு,
கீழ்வேளூர்-611104
செல்:9944862417



# பன்முகம்



## இராமரின் திருவுளப்படி

ஓர் ஊரில் நெசவுத்தொழில் செய்யும் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் மிகவும் உண்மையானவன். பொய்யே பேச மாட்டான். எப்போதும் நியாயமாக நடந்து கொள்ளுவான். இராமபிரானை மனதில் நினைத்தவாறே எதையும் நம்பிக்கையோடு செய்வான். எல்லா செயல்களும் இராமபிரானின் விருப்பப்படியே நடக்கின்றன என்பதில் அவனுக்கு முழு நம்பிக்கை உண்டு.

யாராவது வந்து துணியின் விலையைக் கேட்டால் அதையும் நேரடியாக இவ்வளவு விலை என்று சொல்லமாட்டான். இராமரின் திருவுளப்படி நூலின் விலை இவ்வளவு, லாபம் இவ்வளவு, துணியின் விலை இவ்வளவு என்று தனித்தனியே பிரித்து நேர்மையாக உண்மையான விலையைச் சொல்லுவான். இதனால் அவன் சொல்வதை அப்படியே நம்பி பேரம் எதுவும் பேசாமல் துணியை வாங்கிக் கொண்டு செல்லுவார்கள்.

இரவு சாப்பிட்டு முடித்ததும் அந்த ஊரிலிருந்த ஒரு மண்டபத்தில் உட்கார்ந்து இறைவனை மனதில் நிறுத்திச் சிந்திப்பான். இராமநாமத்தை உச்சரித்துக் கொண்டே இருப்பான். இராமனின் மகிமைகளைப் பாடிக் கொண்டிருப்பான்.

ஒருநாள் மண்டபத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த போது சில திருடர்கள் அந்தப் பக்கமாக ஓடி வந்தார்கள். அவர்கள் கொள்ளையடிக்கத் துணையாக ஒருவன் தேவைப்பட்டான். எனவே, நெசவாளியைப் பார்த்து, "நீ எங்களோடு வா!" என்று கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு சென்றார்கள். ஒரு வீட்டில் கொள்ளையடித்து அந்தப் பொருட்களை நெசவாளியின் தலையில் வைத்து தூக்கிக் கொண்டு வரச்சொன்னார்கள். இந்த நேரத்தில் காவலர்கள் அங்கே வரவே அவனை தனியே விட்டுவிட்டுத் திருடர்கள் தப்பித்துச் சென்றுவிட்டார்கள். நெசவாளி காவலர்களிடம் மாட்டிக் கொண்டான்.

காவலர்கள் அவனை அன்றிரவு காவலில் வைத்து மறுநாள் நீதிபதியின் முன்னால் கொண்டு நிறுத்தினார்கள். விஷயத்தை அறிந்த ஊர்க்காரர்கள் அங்கே கூடினார்கள். அவர்கள் நீதிபதியிடம் “அய்யா இந்த நெசவாளி மிகவும் நல்லவன். நேர்மையானவன். இவன் ஒரு போதும் இத்தகைய செயலைச் செய்திருக்கவே மாட்டான்” என்று அனைவரும் ஒன்று போலவே கூறினார்கள். இதைக் கேட்ட நீதிபதியும் நெசவாளியிடம், "என்ன நடந்தது என்று சொல்" என்று கேட்டார்.

“நீதிபதி அய்யா! நான் இராமரின் திருவுளப்படி இரவு சாப்பிட்டு முடித்து இராமரின் திருவுளப்படி வழக்கமாக அமரும் மண்டபதில் உட்கார்ந்திருந்தேன். இராமரின் திருவுளப்படி அவரை நினைத்துக் கொண்டிருந்தேன். அவரின் பெருமைகளைப் பாடிக் கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் இராமரின் திருவுளப்படி திருடர்கள் அந்த வழியாக வந்தார்கள். இராமரின் திருவுளப்படி என்னைத் தங்களுடன் இழுத்துக் கொண்டு சென்றார்கள். இராமரின் திருவுளப்படி அவர்கள் ஒரு வீட்டிற்குச் சென்று திருடினார்கள்.

இராமரின் திருவுளப்படி திருடிய பொருட்களை என் தலைமீது வைத்தார்கள். இராமரின் திருவுளப்படி காவலர்கள் அந்த இடத்திற்கு வந்தார்கள். இராமரின் திருவுளப்படி காவலர்கள் என்னைப் பிடித்துக் காவலில் வைத்தார்கள். இராமரின் திருவுளப்படி என்னை இப்போது தங்கள் முன்னால் நிறுத்தியிருக்கிறார்கள்.”

நெசவாளியின் தூய்மையான இராம பக்தியையும் நல்ல உள்ளத்தையும் நீதிபதி உணர்ந்து கொண்டு அவனை விடுதலை செய்தார். அவன் வீட்டிற்குத் திரும்பும் போது தன் ஊர்க்காரர்களிடம் “இராமரின் திருவுளப்படி என்னை நீதிபதி விடுதலை செய்துவிட்டார்” என்று சொல்லியவண்ணம் வீட்டிற்குச் சென்றார்.





## அன்பு-க்கு ஏங்கும் மனம்

“அத்தை, என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க?”

“ஏம்மா, பார்த்தா தெரியலையா? மணக்க மணக்க சமைச்சுக்கிட்டு இருக்கேன்.”

“இல்லை, ஏதாவது உதவி செய்யலாம்னுதான் கேட்டேன்.”

“அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். உன்னோட புருஷன் படுக்கையை விட்டு எழுந்தானான்னு போய் பாரேன்.”

“ஏன், உங்க பிள்ளை என்று சொல்ல மாட்டீங்களா?”

“அப்படி இல்லம்மா. என் பிள்ளைதான், இல்லைன்னு சொல்லல. ஆனா, இப்போ உன்னோட புருஷன், அதான் அப்படி சொன்னேன்.”

இந்த பேச்சு சமையல் அறையில் நீண்டுகொண்டே போனது. கமலத்தின் மருமகள்தான் இந்தக் கிரிஜா. கமலம், தாமரை இலைத் தண்ணீர் போல ஒரு சுத்த கர்நாடகம் என்று பேச்சு வழக்கில் சொல்லுவோமில்லையா, அது அப்படியே அவளுக்குப் பொருந்தும். கமலம், வேரைப்போல் ஒரு பழங்காலப் பாரம்பர்யத்தைக் கடைப்பிடிக்கக் கூடியவள். ஆனால் கிரிஜாவோ, இந்த நூற்றாண்டின் நவநாகரிகப் பெண்களில் ஒருத்தி.

கமலம் எப்போதும் விசேஷ நாட்களில் மடிசாரும், மற்ற ஏனைய நாட்களில் புடவையும்தான் அணிந்திருப்பாள். கிரிஜாவோ, வண்ணத்துப்பூச்சி போல மாடர்ன் டிரஸ் போடக்கூடியவள்.

அலுவலகம் செல்லும்போது தினம் ஒரு டிரஸ், கவுனில் தொடங்கி திங்கள் முதல் சனி வரை தினம் ஒரு பிரத்தியேக டிரஸ் போடக்கூடியவள் கிரிஜா.

கமலம் அந்தக் காலப் பாரம்பரியத்தைக் கடைப்பிடிப்பவளாச்சே, எப்படி கிரிஜாவை விட்டுவைக்கிறாள்? கமலம் அவளது மருமகளுக்கு, பரந்த வானம் போல முழு சுதந்திரமும் கொடுத்து வைத்திருக்கிறாள்.

வேங்கடம், கமலத்தின் கணவர், ஓய்வுபெற்ற போஸ்ட் மாஸ்டர். திடகாத்திரமான உடல், மாநிறம், கமலத்தைக் காட்டிலும் சற்றுக் குள்ளமானவர். 'மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது' என்பார்களே, அது அவருக்குப் அளவெடுத்து செய்ததுபோல் பொருந்தும். எப்போதும் கம்பீரமாக, சிங்கத்தைப் போல, மற்றவர்களை அதட்டி வேலை வாங்கக்கூடிய ஆசாமி. அவரது வீட்டிலும் அப்படித்தான். கமலத்திடம் ஏதாவது சொல்லிக்கொண்டே இருப்பார்.

ஏதாவது வேலையைக் கமலத்திற்குக் கொடுத்துக்கொண்டே இருப்பார். விடியற்காலையில் படுக்கையை விட்டு எழுந்தார் என்றால், பல் துலக்கிக் கை, கால்களை எல்லாம் சுத்தம் செய்த பிறகு, காபியில் ஆரம்பித்து, குளிக்க வெந்நீர் போடுவதிலிருந்து, காலை உணவு ஏற்பாடு செய்வது, அவருடைய துணிகளை இஸ்திரிப்பெட்டியின் உதவியுடன் தேய்த்துக் கொடுப்பது வரை அவளது வேலைதான்.

வேங்கடம் அப்பவே அப்படி என்றால், இப்போது ஓய்வுபெற்ற பின்னரும் துருப்பிடிக்காத இரும்பைப் போல அப்படியேதான் காணப்படுகிறார். கமலமும் அந்த உபசரிப்பைத் தினம் தன் கணவனுக்குச் செய்துவருகிறாள்.

காபி, தண்ணீர் குடித்த டம்ளரைக் கூட வேங்கடம் அசைக்க மாட்டார் என்றால் பார்த்துக்கோங்க. எல்லாவற்றையும் கமலாதான் செய்ய வேண்டிய சூழல்.

“அத்தை, ஏன் மாமாவிடம் நீங்க எதையும் சொல்ல மாட்டேங்கிறீங்க?”

“ஏம்மா, என்ன சொல்லச் சொல்ற? நான் ஏதாவது சொல்லி, பிறகு ஏன் வீண் வம்பு என்று தான் அப்படியே விட்டு விடுகிறேன்.” 'போனாப் போகுது, வயசான கிழம் இல்லையா, அதான் ஆற்று நீர் போல வளைந்து கொடுத்துத்தான் பிடிக்க வேண்டும். எங்க போயிடப் போறாரு."

“அத்தை, ஆனாலும் உங்களுக்கு கடலை விட ஆழமான இவ்வளவு பொறுமை ஆகாது.”

“சரி, உன் ஆம்படையான் எழுந்தானா படுக்கையைவிட்டு? ஞாயிற்றுக்கிழமையானா போதும், எட்டு மணிவரை படுக்கையில் புரண்டுகிட்டே இருக்கான். நீயாவது இதற்கு ஓர் முடிவு கொண்டு வருவ என்று பார்த்தால், நீயும் அவன் இழுக்கிற இழுப்புக்கெல்லாம் போயிட்டே இருக்க! கொஞ்சம் அவனிடத்தில் சொல்லக்கூடாதா?”

“எப்படி சொல்லச் சொல்றீங்க? உங்க வயசுக்கு நீங்களே கேட்கலாம் அவரிடத்தில், ஆனால் கேட்கமாட்டீங்க! பின் நான் எப்படி அவரிடத்தில்! அதுவும் இன்னைக்கு ஞாயிற்றுக்கிழமை வேற. எங்க நான் போய் அவரை எழுப்பி, பின் அவர் எரிமலை போல வெடிக்கவா? ஒருநாள் தானே அத்தை, கொஞ்சம் தூங்கிட்டுப் போறாரு.”

“அத்தை உங்ககிட்ட ஒண்ணு சொல்லணும்”

“என்ன? சொல்லு.”

“இல்ல நம்ம சாருலதா இருக்காளே!”

“ஆமா, அவளுக்கு என்ன இப்போ? உன்னோட கூட வேலை பார்க்கிறவதானே! உன்னுடைய சிநேகிதிதானே?”

“அவள் வீட்டில் ஒரே சண்டையாம்! அவளுக்கும் அவ ஆம்படையானுக்கும். ரெண்டு பேரும் அவரவர் தரப்பு நியாயத்தையே பேசிப்பேசி இன்னும் சண்டையை, ஒரு முடிவில்லாத நூல் போல, இழுத்துக்கிட்டே இருக்காங்க. அவள் வீட்டில் நிம்மதியே இல்லை என்று என்னிடம் தினம் புலம்புவாள்.

“நேற்று என்னிடம் வந்து அழுதாள் பாருங்க, என்னிடம் கேட்டாள், 'ஏண்டி! உன்னோட மாமனார் ஒரு கோபக்காரராமே! எப்படி உங்க மாமியார் அசையாத மலையைப் போல சமாளிக்கிறாங்க? கொஞ்சம் அவரிடம் கேட்டுச் சொல்லேன்' என்றாள். நானும் அவளிடத்தில், ஏதாவது யோசனை கேட்டு வர்றேன் என்று சொல்லி அவளைச் சமாதானப்படுத்தினேன்.

அத்தை, அவளுக்கு இருக்கிற அதே சந்தேகம் எனக்கும் உள்ளது. எப்படி இத்தனை வருஷமா மாமாவோட எல்லா செயலையும் பொறுத்துக்கொண்டு பொறுமையா அவருடன் காலத்தை தள்ளுகிறீர்கள்? நான் உங்களைத் தப்பாக சொல்லவில்லை. இப்பொழுது இருக்கிற பெண்களுக்கு எல்லாம் வீட்டிலும் மற்றும் வேலை செய்யும் இடத்திலும் நிறையவே நெருக்கடி இருக்கிறது. இப்பொழுது கருத்து வேறுபாட்டினால் பிரியும் குடும்பங்கள்தான் அதிகமாக வெளியே தெரிகிறது. அதற்கும் ஒரு காரணம் இருக்கிறது. ஏன் பெண் மட்டும் எப்போதும் விட்டுக்கொடுத்துப் போகவேண்டும்? கணவன் மனைவிக்காக விட்டுக்கொடுத்துப் போக மாட்டானா? இந்தக் காலகட்டத்தில் தவறு இருவர் பக்கமும் இருக்கிறது...?"

“ஏனம்மா, நமக்கு கடவுள் வாழ்க்கையை ஒரு முறையே கொடுத்திருக்காரு. ஒவ்வொரு பொண்டாட்டியும் அவளுடைய கணவனோடு எவ்வளவு வருஷம் இருந்திடப் போறா! இருக்கப் போறது சொற்பகாலம். அதையும் நாம இப்படி சண்டையும் சச்சரவுமாகக் கழிச்சோமேயானால் எப்படி வாழ்க்கை இனிக்கும். யாராவது ஒருவர் விட்டுக்கொடுத்துப் போலாமே! நாம விட்டுக் கொடுத்துப் போவதால் ஒண்ணும் ஆகாது. இதில் ஏன் தேவையில்லாமல் பிடிவாதம் பிடித்துக்கொண்டு மேலும் மேலும் சண்டையைப் போட்டுக்கிட்டு இருக்கணும். நீயே தனியா சிந்தித்துப் பாரு, உனக்கே புரியும். எதையும் ஆரம்பிக்கும் போது கஷ்டமாத்தான் இருக்கும். பிறகு அதுவே பழகிப் போய்விடும். நான் சொல்றதால நீ அதைக் கடைப்பிடிக்க வேண்டாம். நீயே யோசிச்சுப் பார்த்தபின் சரி என்று உன் மனசு சொல்லிச்சுன்னா, அதை உன் சிநேகிதியிடம் போய் சொல்லு."

“அத்தை, என்னை மன்னிச்சுடுங்க. நான் கூட சில சமயங்களில் உங்க பிள்ளை மீது கோபப்பட்டு, பேசாமல் இருந்திருக்கிறேன். சண்டைப் போட்டிருக்கிறேன், முரண்டு பிடித்திருக்கிறேன். ஆனால், இதை ரெண்டு பேரும் வெளியில் உங்களிடத்தில் காட்டிக்கொள்ளாமல் இருந்திருக்கிறோம். இப்பதான் நான் செஞ்சது தப்பு என்று எனக்குப் புரிகிறது. நீங்க சொல்ற மாதிரி அன்பை மட்டும் உங்க பிள்ளைக்குத் தரப்போகிறேன். இதனால் அவரும் என்னிடம் அன்பைத் தவிர வேறு எதையும் கொடுக்க மாட்டார் என்று உணர்ந்துகொண்டேன்.”

## பெருமை தரும் பொறுமை!



“ராஜூ, எழுந்திரு! குளிச்சுட்டு கிளம்ப சரியா இருக்கும்”

அம்மாவின் குரல் கேட்டது. ஆனால், ராஜூ எழுந்திருக்கவில்லை. அம்மா அருகில் வந்து, ராஜூவை மெல்லத் தட்டி எழுப்பினாள்.

“எழுந்திரு கண்ணா, அப்புறம் பள்ளிப் பேருந்து போயிடும். ம்ம்... சீக்கிரம்!”

“போம்மா, போ!” என்று கோபமாகக் கத்தினான் ராஜூ.

“ம்ஹூம்... பல் தேய்த்துக் குளிக்க வேண்டும், எழுந்திரு,” என அவனைப் படுக்கையில் இருந்து மெல்லத் தூக்கினாள் அம்மா.

கோபமாகவே எழுந்தான் ராஜூ. கால்களைத் தரையில் வேகமாகத் தேய்த்துச் சத்தம் வரும்படி குளியலறைக்குச் சென்றான். குளியலறையில் தன் கோபத்தை வாளி, சோப்பு, டப்பா மற்றும் தண்ணீர்க்குழாய் மீது காட்டினான். “ராஜூ, பொறுமை... பொறுமை. எதுக்கு இவ்வளவு கோபம்? எதுக்கு ஆத்திரம்?” என அம்மா மீண்டும் சொன்னாள். இப்போதெல்லாம் ராஜூ ஒவ்வொரு விஷயத்துக்கும் அநாவசியமாகக் கோபப்படுவது வழக்கமாகிவிட்டது.

காலை உணவுத் தட்டை எடுத்துக்கொண்டு, தொலைக்காட்சி பார்க்க அமர்ந்தான் ராஜூ.

“ராஜூ, சீக்கிரம் சாப்பிட வேண்டும். தொலைக்காட்சி பார்த்தால் நேரமாகிவிடும். டி.வி. போடாதே,” என்றாள் அம்மா.

உடனே ராஜூ ரிமோட்டைத் தூக்கி எறிந்தான். அதிலிருந்த பட்டன்களில் ஒன்று தெறித்து விழுந்தது.

“ராஜூ, சின்ன விஷயங்களுக்கு ஏன் இவ்வளவு கோபமும் ஆத்திரமும் கொள்கிறாய்? இது ரொம்பத் தப்பு!” அம்மாவின் குரலில் கண்டிப்பும் கடுமையும் தெரிந்தன.

ராஜூ அமைதி காத்தான். 'ஒருவேளை கைபேசியை இவ்வாறு தூக்கி எறிந்திருந்தால் அது பழுதாகி இருக்கும், அம்மா, அப்பா மிகவும் கோபித்திருப்பார்கள்' என அவன் நினைத்தான்.

“இப்போ இந்த ரிமோட் இல்லாம தொலைக்காட்சி பார்க்க முடியாது. இது நமக்கு வீண் செலவுதான்,” என்றாள் அம்மா.

ராஜூ மௌனமாகத் தன் சீருடையை அணிந்தான்.

“ராஜூ, பொறுமையா இருக்கணும். உன் கோபத்தால நீ ஒரு பொருளை உடைச்சா, அதைத் திருப்பி வாங்கிடலாம். ஆனா, மத்தவங்க மனசை உடைச்சா, அந்த உறவை ஒட்ட வைக்க முடியுமா?” என்று கேட்ட அம்மா, அவனருகே வந்து தலையைக் கோதிவிட்டாள்.

“அம்மா, நான் கோபப்படக்கூடாதுன்னு தான் நினைக்கிறேன். ஆனா, எப்படியோ கோபம் வந்திடுது,” என்றான் ராஜூ வருத்தத்துடன்.

“கோபத்தை வெல்ல உனக்கு ஒரு மந்திரம் சொல்லவா? பொறுமை! பொறுமை! பொறுமை பெருமை தரும்! இந்த மந்திரத்தைக் கோபம் வரும்போது சொல்லிப் பாரு,” என்றாள் அம்மா.

மாலையில் ராஜூ மிக மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினான்.

“அம்மா, இன்னைக்கு நான் எதுக்காகவும் யார்கிட்டயும் கோபப்படல அம்மா!”

“ஆஹா! அருமை, அருமை!”

“என் நண்பர்கள் கூட என்னைப் பாராட்டினாங்க அம்மா!” என்று சொல்லி அம்மாவைக் கட்டிக்கொண்டான் ராஜூ.

## இராமகிருஷ்ண பரமஹம்சர் போதித்த பாடங்கள்

1. ஒரு சமயம் ஒருவனுக்கு கடலைக் கடக்கவேண்டிய சந்தர்ப்பம் எழுந்தது. ஒரு துறவியை சந்தித்தான். அவர் ஒரு இலையில் இராமநாமத்தை எழுதி அதை அவனுடைய ஆடையின் முனையில் வைத்து முடிச்சு போட்டார்.

“மனதில் முழு நம்பிக்கையோடு கடலின் மீது நடந்து செல். நீ நம்பிக்கையை இழந்தால் அந்த கணமே கடல் நீரில் முழ்கி இறந்து விடுவாய்", துறவி இவ்வாறு அவனிடம் எச்சரித்து அனுப்பினார்.

அவனும் நம்பிக்கையோடு கடலின் மீது நடக்கத் தொடங்கினான். இப்படியே நடந்து சுலபமாக வெகுதூரம் போய்விட்டான்.

திடீரென்று அந்த துணியில் துறவி முடிந்து அனுப்பியது என்னவாக இருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் பிறந்தது. உடனே அந்த துணியின் முடிச்சை அவிழ்த்துப் பார்த்தான். அதில் ராமநாமம் எழுதப்பட்டிருந்தது. உடனே அவன் துணுக்குற்றான். இதில் வெறும் இராமநாமம்தானே எழுதியியிருக்கிறது என்று தன் மனதுள் நினைத்துக் கொண்டான்.

இராமநாமத்தில் என்ன மகிமை இருக்கிறது என்ற சந்தேகம் அவன் மனதில் எழுந்த அடுத்த கணமே அவன் கடலில் மூழ்கி விட்டான்.

2. ஒரு சமயம் இராமகிருஷ்ணரை நாடி ஒருவன் வந்து அவரிடம் ஒரு கேள்வியைக் கேட்டான்.

“சுவாமி. ஞானத்தை அடையும் வழி என்ன என்று கூறுவீர்களா?”

இதற்கு இராமகிருஷ்ணர் ஞானத்தை அடைய என்ன செய்ய வேண்டும் என்று கூறினார்.

“தினமும் கீதையை படி. பின்னர் நிவேதனம் செய். அதன் பின்னர் திராட்சைப் பழங்களை சாப்பிடு. இதைக் கேட்ட அந்த மனிதனுக்கு திடீரென ஒரு சந்தேகம் தோன்றியது.

“சுவாமி. தினமும் எத்தனை திராட்சைப் பழத்தை சாப்பிட வேண்டும்?”

“நீ தினமும் கீதையில் எத்தனை ஸ்லோகங்களை படிக்க வேண்டும் என்று கேட்டிருந்தால் உனக்கு ஞானத்தை அடையும் வழியில் ஆர்வம் இருக்கிறது என்று பொருள். ஆனால் நீயோ சாப்பிடுவதைப் பற்றி கேட்கிறாய். நீ புறப்படலாம்”.

3. இராமகிருஷ்ண பரமஹம்சரைச் சந்திக்க அவருடைய பக்தர் ஒருவர் வந்தார்.

“ஸ்வாமி. நான் இதுநாள் வரை செய்து வந்த தொழில் மற்றும் எனது சொத்துக்களை எனது பிள்ளைகளுக்குத் தந்துவிட்டேன். சர்வசதா காலமும் இறைவனையே நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் இறைவன் எனக்கு இதுவரை தரிசனம் தரவில்லை. அது ஏன் என்று விளக்குவீர்களா?”

“நீ என்ன வியாபாரம் செய்து வந்தாய்?”

“மளிகைப் பொருட்கள் மற்றும் எண்ணெய் வியாபாரம் செய்து வந்தேன் ஸ்வாமி”

“நீ விற்ற பொருட்கள் தீர்ந்த பின்னரும் அவற்றை வைத்திருந்தவற்றில் வாசனை இருக்குமா அல்லது இருக்காதா?”

“நிச்சயம் இருக்கும் ஸ்வாமி”

“உனது விஷயமும் அப்படித்தான். நீ சொத்துக்கள் அனைத்தையும் உன் மகன்களுக்குக் கொடுத்த பின்னரும் அதன் மீது உனக்கு இன்னமும் பற்று இருக்கிறது. அது எப்போது உன்னைவிட்டு முழுமையாக அகலுகிறதோ அப்போதுதான் உனக்கு இறைதரிசனம் கிடைக்கும்”

4. ஒரு சமயம் பகவான் இராமகிருஷ்ணரைப் பார்க்க பக்தர் ஒருவர் வந்திருந்தார். அவர் நீரில் நடக்கும் கலையை கற்றிருந்தார். அதுபற்றி மிகுந்த பெருமையுடன் அவர் இராமகிருஷ்ணரிடம் பேசினார்.

“ஸ்வாமி. நான் நீரில் நடக்கும் கலையை மிகுந்த சிரமப்பட்டு கற்றுவைத்திருக்கிறேன். இக்கலையை கற்க எனக்கு பதினாறு ஆண்டுகள் பிடித்தன”

இதைக் கேட்டு இராமகிருஷ்ணர் தன்னை பாராட்டுவார் என்று எதிர்பார்ப்புடன் காத்திருந்த அந்த பக்தருக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது.

“படகுக்காரனிடம் அரை அணாவைக் கொடுத்து சுலபமாக எந்த ஆற்றையும் கடந்து விடலாம். இதற்காக நீ உன்னுடைய வாழ்க்கையில் பதினாறு ஆண்டுகளை வீணடித்திருக்க வேண்டாம்”

இராமகிருஷ்ணரின் இந்த பதில் பக்தரை ஆழ்ந்து சிந்திக்க வைத்தது.









## பொன்முடி போட்டியில்லை



சட்டமன்றத் தேர்தலில், திமுக முன்னாள் அமைச்சர் பொன்முடி போட்டியிடப் போவதில்லை என தகவல் வெளியாகி உள்ளது. விழுப்புரம் மாவட்டத்திற்கு உட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களுக்கு சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேர்காணல் நடைபெற்றது.

## ஆவூர் ஊராட்சியில் தேர்தல் அலுவலகம் திறப்பு விழா





திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஒன்றியம் ஆவூர் ஊராட்சியில் தேர்தல் பணி குழுக்கள் 9 மற்றும் 10-க்களுக்கான தேர்தல் அலுவலகத்தை மாண்புமிகு சட்டமன்ற துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள் தேர்தல் அலுவலகத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். உடன் ஆரஞ்சி ஆறுமுகம், கழகத் தோழர்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## மாற்றுக் கட்சியிலிருந்து அதிமுகவில் இணைக்கும் நிகழ்ச்சி





திருவண்ணாமலை மாவட்டம் துரிஞ்சாபுரம் ஒன்றியம் வட ஆண்டாபட்டு ஊராட்சியில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மோகன் கிளை கழக செயலாளர் மணி அவர்களின் தலைமையில் மாற்றுக் கட்சியை சேர்ந்த ஏராளமானோர் திருவண்ணாமலை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் எஸ்.ராமச்சந்திரன் அவர்களின் முன்னிலையில் அதிமுகவில் இணைந்தனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## வசந்த நவராத்திரி 3-ஆம் நாள் உற்சவம்

**திருவண்ணாமலை, மார்ச் 23:**

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் வசந்த நவராத்திரி உற்சவம் 3-ஆம் நாள்( பகை நீக்கம் ) ஸ்ரீ மீனாட்சி அம்மனுக்கு சிறப்பு பூஜை,அபிஷேகங்கள் ரோஜாப்பூ, சாமந்திப்பூ மாலைகளால் அலங்கரித்து, தாமரைப் பூக்களால் அலங்காரங்கள், பிரசாதம், வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுக்கள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் வசந்த நவராத்திரி உற்சவத்தில் கலந்துகொண்டு ஸ்ரீ மீனாட்சி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை





## தொகுதி பங்கீடு விவகாரங்கள் சூடுபிடிக்க தொடங்கியுள்ளன



தமிழ்நாட்டின் 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் வரும் ஏப்ரல் 23ஆம் தேதி ஒரே கட்டமாக வாக்குப் பதிவு நடைபெற இருக்கிறது. இந்த நிலையில், கூட்டணி கட்சிகளிடையே தொகுதி பங்கீடு விவகாரங்கள் சூடுபிடிக்க தொடங்கியுள்ளன. அதிமுக தலைமையிலான என்.டி.ஏ. கூட்டணியில் இன்னும் அதிகாரப்பூர்வமாக தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை தொடங்கப்படாத சூழலில், திமுக தலைமையிலான கூட்டணியில் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை தொடங்கி நடைபெற்று வருகிறது.

## பத்திரகாளியம்மன் திருக்கோவிலின் தூக்க திருவிழா



தமிழகத்தில் பச்சிளம் குழந்தைகளுக்காக நடைபெறும் அபூர்வமான மற்றும் பக்தி மிகுந்த நேர்ச்சைகளில் ஒன்றாக விளங்குவது கன்னியாகுமரி மாவட்டம் கொல்லங்கோடு பகுதியில் உள்ள பிரசித்தி பெற்ற பத்திரகாளியம்மன் திருக்கோவிலின் தூக்க திருவிழா.



தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2026ல் திமுக, கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலைவிட குறைவான தொகுதிகளில் போட்டியிட திட்டமிட்டுவருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

## ‘துரந்தர் தி ரிவெஞ்ச்’




பாலிவுட் இயக்குநர் ஆதித்யா தார் இயக்கத்தில் ரன்வீர் சிங், மாதவன், அக்சய் கண்ணா, சாரா அர்ஜுன் உள்ளிட்டோர் நடிப்பில் கடந்த டிசம்பரில் வெளியான படம் ’துரந்தர்’. இத்திரைப்படம் உலகம் முழுவதும் சுமார் ரூ.1350 கோடிக்கும் மேல் வசூலித்தது. இந்நிலையில், துரந்தர் படத்தின் 2 ஆம் பாகமாக ’துரந்தர் தி ரிவெஞ்ச்’ திரைப்படம் கடந்த 19ஆம் தேதி வெளியானது. இந்தப் படம் முதல் மூன்று நாள்களிலேயே ரூ. 500 கோடிக்கும் அதிகமாக வசூலித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## அமெரிக்க டாலர் மதிப்பு 110-ஐத் தொடும்



வட்டி விகித உயர்வால் தங்கம் விலை ரூ.11,000 வரை சரிந்தாலும், வட்டி குறைப்பின்போது ரூ.22,000 வரை கிடுகிடுவென உயரும் என பொருளாதார நிபுணர் ஆனந்த் ஸ்ரீனிவாசன் கூறியுள்ளார். மேலும், சீனா பெருமளவில் தங்கத்தை வாங்கி இருப்பு வைப்பது டிமாண்டை மேலும் அதிகரிக்கும். அதோடு, அடுத்த 2.5 – 3 ஆண்டுகளில் இந்திய ரூபாய்க்கு நிகரான அமெரிக்க டாலர் மதிப்பு 110-ஐத் தொடும் வாய்ப்புள்ளதும் தங்கத்தின் மாபெரும் விலையேற்றத்திற்கு வழிவகுக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தமிழ் மீனவர் கூட்டமைப்பு ஆதரவு



ராமதாஸ் நீண்டகாலமாக கூட்டணியை அறிவிக்காமல் இருந்த நிலையில் அவர் திமுக அல்லது தவெக கூட்டணியில் இணைவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், சசிகலா தொடங்கியுள்ள அனைத்து இந்திய புரட்சி தலைவர் மக்கள் முன்னேற்ற கழகத்துடன் ராமதாஸ் தனது கூட்டணியை இறுதி செய்தார். இந்நிலையில், இந்த கூட்டணிக்கு தற்போது தமிழ் மீனவர் கூட்டமைப்பு ஆதரவு தெரிவிப்பதாக அறிவித்துள்ளது. தைலாபுரத்தில் பாமக நிறுவனர் ராமதாஸை, அக்கூட்டமைப்பின் தலைவர் ரஜினிமகி நேரில் சந்தித்து ஆதரவு தெரிவித்தார்.





திண்டுக்கல் மாவட்டம் சரளைப்பட்டியில் 10 நாட்களுக்கு முன் மாயமான இளைஞர் கருப்பசாமி சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளது. திமுக MLA பழனியாண்டி மகன் விஜயபாரதிக்கு சொந்தமான குவாரியில் இந்த சடலம் எடுக்கப்பட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. குவாரியில் எம் சாண்ட் மணல் குவியலுக்குள் இளைஞர் சடலம் புதைந்து இருந்ததாக கூறப்படுகிறது. தொடர்ந்து, இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## புரிந்துணர்வு ஒப்பந்தம்





இந்திய ராணுவத்திற்கான செயற்கைக்கோள் அடிப்படையிலான சேவைகளை மேம்படுத்துவதற்காகவும், பாதுகாப்புத் தகவல் தொடர்பு அமைப்புகளை வலுப்படுத்தும் நோக்கிலும் இந்தியா மற்றொரு முக்கிய நடவடிக்கையை எடுத்துள்ளது. அதன்படி, டெல்லியிலுள்ள தலைமையக ஒருங்கிணைந்த பாதுகாப்புப் படை மற்றும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) கீழ் ஆமதாபாத்தில் செயல்படும் விண்வெளிப் பயன்பாட்டு மையம் (எஸ்.ஏ.சி.) ஆகியவை ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (எம்.ஓ.யு.) தயாரித்தது.





## ஸ்ரீ ராமர் திருமஞ்சனம்



திருவல்லிக்கேணி பார்த்த சாரதி பெருமாள் கோவில் சென்னையில் ஸ்ரீ ராமர் திருமஞ்சனம்

## ராமர் உற்சவம் ஹனுமந்த வாகனம்



3ஆம் நாள் ராமர் உற்சவம் ஹனுமந்த வாகனம். திருவெற்றியூர் காலாடிப்பேட்டை ஸ்ரீ கல்யாண வரதர்

# சுற்றுலா: ஊட்டியில் காண வேண்டிய முக்கியமான இடங்கள்!

பச்சைப் போர்வை போர்த்திய எழில்மிகு மலைகள், கண்ணாமூச்சி ஆட்டம் காட்டும் மேகங்கள், உடலுக்கு மட்டுமல்லாது மனதிற்கும் குளிர்ச்சி தரும் தட்பவெப்பநிலை, பாறைகளுடன் விளையாடியபடி ஓடி வந்து நம் கண்முன்னே விழுந்து நம்மை மகிழ்விக்கும் அருவிகள் என இயற்கையின் ஆதிக்கம் அதிகம் நிறைந்திருக்கும் இடம் ஊட்டி என்று சுருக்கமாக அழைக்கப்படும் உதகமண்டலம். ஊட்டியில் நாம் காண வேண்டிய இடங்களைப் பற்றி இந்த பதிவில் பார்ப்போம்.



### மலை ரயில்

ஊட்டிக்கு மேட்டுப்பாளையத்திலிருந்து மலை ரயிலை தினந்தோறும் இயக்குகிறார்கள். இரண்டு பக்கமும் ஓங்கி உயர்ந்து நிற்கும் மரங்கள், பூத்துக் குலுங்கி நம்மைப் பார்த்து தலையசைக்கும் வண்ண வண்ண பூக்கள் இவை யாவும் கண்களுக்கு இயற்கைதரும்விருந்து. சுவாரசியமான இந்த இரயில் பயணம் சுமார் ஐந்து மணி நேரம் நீடிக்கிறது. வழியில் மலைகளைக் குடைந்து குகைப் பாதைகளை அமைத்திருக்கிறார்கள்.

### தொட்டபெட்டா

நீலகிரி மாவட்டத்தின் மிக உயரமான இடம் ஊட்டியிலிருந்து பத்துகிலோமீட்டர் தொலைவில் உள்ள தொட்டபெட்டா. கடல் மட்டத்திலிருந்து சுமார் 2623 மீட்டர் உயரத்தில் இந்த இடம் அமைந்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஒரு தொலைநோக்கி நிலையத்தை அமைத்துள்ளார்கள். சக்திவாய்ந்த தொலைநோக்கி வழியாக இயற்கைக் காட்சிகளை வெகு அருகில் கொண்டு வந்து ரசிக்கலாம். ஊட்டி பேருந்து நிலையத்திலிருந்து கோத்தகிரி செல்லும் பேருந்தில் ஏறினால் தொட்டபெட்டா ஜங்ஷனில் இறங்கிக் கொண்டு அங்கிருந்து ஷேர் ஜீப்பில் தொட்டபெட்டாவை அடையலாம்.



### தாவரவியல் பூங்கா

ஊட்டியில் மிகவும் புகழ்பெற்ற ஒரு இடம் தாவரவியல் பூங்கா. 1847 ல் உருவாக்கப்பட்ட இந்த பூங்கா 22 ஹெக்டேர் பரப்பளவு கொண்டது. இந்த பூங்கா தமிழ்நாடு அரசின் தோட்டக்கலைத் துறையால் நிர்வகிக்கப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் மே மாதத்தில் மலர் கண்காட்சி நடத்தப்படுகிறது.

### ரோஜாப் பூங்கா

தாவரவியல் பூங்காவிலிருந்து அருகில் அமைந்துள்ள ரோஜாப் பூங்காவிற்குச் செல்லலாம். உலகின் சிறந்த பதினைந்து ரோஜாத் தோட்டங்களில் இதுவும் ஒன்று என்ற பெருமையினைப் பெற்றுள்ளது. இந்த பூங்கா சுமார் 10 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இந்தியாவிலேயே அதிக அளவிலான ரோஜாச் செடிகளைக் கொண்ட பூங்கா என்ற சிறப்பைப் பெற்றுள்ளது. இந்த பூங்காவில் சுமார் 3600 வகையான ரோஜாச் செடிகள் அமைந்துள்ளன.

### படகுத்துறை

விடுமுறைகளில் குடும்பத்தோடு படகுச்சவாரி செய்வது மகிழ்ச்சி தரும் ஒருவிஷயம். ஊட்டியில் அமைந்துள்ள இந்த செயற்கை ஏரி சுமார் மூன்று கிலோமீட்டர் நீளம் கொண்டது. இங்கு பெடலிங் போட் வசதியும் இருக்கிறது.

### குன்னூர்

மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டிக்குச் செல்லும் வழியில் ஊட்டியிலிருந்து இருபது கிலோமீட்டருக்கு முன்னால் அமைந்துள்ள இடம் குன்னூர். ஊட்டியிலிருந்து ஏராளமான பேருந்துகள் குன்னூருக்கு இயக்கப்படுகின்றன. ஒரு மணி நேரப்பயணம்தான்.

### டால்ஃபின் நோஸ்

குன்னூரிலிருந்துசுமார் பத்துகிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள ஒரு வியூபாயிண்ட் டால்பின் நோஸ். இங்கிருந்துநின்று பார்த்தால் கேதரின் நீர்வீழ்ச்சியைக் கண்டு களிக்கலாம். டால்பின் நோஸ் போகும் வழியில் அமைந்துள்ளமற்றொருவியூபாயிண்ட் லேம்ப்ஸ் ராக். இந்த இடத்தில் நின்று இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்கலாம். இந்த இரண்டு இடங்களிலும் வியூபாயிண்ட்டை அமைத்துள்ளார்கள்.

### சிம்ஸ் தாவரவியல் பூங்கா

குன்னூரில் சிம்ஸ் தாவரவியல் பூங்கா அமைந்துள்ளது. குழந்தைகள் விளையாட நிறைய வசதிகள் இருக்கின்றன. ஒரு சிறிய நீச்சல் குளமும் இருக்கிறது. சிம்ஸ் பூங்காவிற்கு அருகில் ஊட்டியில் விளையும் அரிதான சீசனல் பழங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

### ஊட்டி வர்க்கி

ஊட்டிக்கு புகழ் சேர்க்கும் ஒரு பேக்கரி உணவு வர்க்கி. பேக்கரிகளில் கிடைக்கும் இந்த பிஸ்கட் போன்ற பொருள் மிகவும் சுவையுடையது. மேலும் இங்கு சாக்லேட் பர்பியும் மிகவும் பிரபலம். அவசரமயமான உலகத்தில் ஏதோ ஒன்றைத்தேடி நாம் ஓடிக் கொண்டிருக்கிறோம். இதற்கு பரிசாகக் கிடைப்பதோ மனஅழுத்தமும் வியாதிகளும்தான். மனதை எப்போதும் புத்துணர்ச்சியோடு வைத்துக்கொண்டு சுறுசுறுப்பாக இயங்க வருடத்திற்கு ஒரு முறையாவது ஊட்டி போன்ற மலைவாசஸ்தலங்களுக்குச் சென்று வாருங்கள். மனமும் உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### ஆயுஷ் மருத்துவமனையில் 48 இடங்கள்




பணியிடங்கள் விவரம்:

1. சித்தா டாக்டர்: 12 இடங்கள். தகுதி: பிஎஸ்எம்எஸ் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

2. ஆயுர்வேதிக் டாக்டர்: 12 இடங்கள். தகுதி: பிஏஎம்எஸ் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

3. ஹோமியோபதி டாக்டர்: 12 இடங்கள். தகுதி: பிஹெச்எம்எஸ் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

4. யோகா மற்றும் நேச்சுரோபதி டாக்டர்: 12 இடங்கள். தகுதி: பிஎன்ஒய்எஸ் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட பணிகளுக்கான வயது: 22 லிருந்து 40க்குள் இருக்க வேண்டும்.

சம்பளம்: ரூ.15,800- ரூ.34,000.

விண்ணப்பதாரர்களின் முன்அனுபவம், நேர்முகத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

மாதிரி விண்ணப்பத்தை www.simcoagri.com என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கம்ப்யூட்டரில் டைப் செய்து, விவரங்களை பூர்த்தி செய்து, தேவையான அனைத்து சான்றிதழ்களின் நகல்களையும் சுய சான்றொப்பமிட்டு அனுப்ப வேண்டிய முகவரி:

The Managing Director,South India Multi State Agriculture

Co-Operative Society Ltd (SIMCO),35, Ist West Cross Road, Near Govt. Law College,Gandhi nagar, Vellore- 06. விண்ணப்பிக்க கடைசி நாள்: 31.03.2026.

## கன்னியாகுமரியில் 20 கிலோ கஞ்சா வைத்திருந்தவர் கைது

**சென்னை, மார்ச் 23:**

கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை சுற்றுவட்டாரப் பகுதிகளில் சட்டவிரோதமாக கஞ்சா விற்பனை நடைபெறுவதாக மதுவிலக்கு போலீசாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து மதுவிலக்கு டி.எஸ்.பி. ராஜா மேற்பார்வையில், போலீஸ் இன்ஸ்பெக்டர் தமிழரசன் தலைமையிலான தனிப்படையினர் அப்பகுதியில் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

இந்த சோதனையின் போது, சந்தேகப்படும்படி இருசக்கர வாகனத்தில் வந்த ஒருவரை மறித்து போலீசார் விசாரணை செய்தனர். அதில் அவர் மறைத்து வைத்திருந்த 20 கிலோ எடையுள்ள கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்தனர். மேலும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட இருசக்கர வாகனமும் கைப்பற்றப்பட்டது.

இதனையடுத்து போலீசார் மேற்கொண்ட விசாரணையில் பிடிபட்ட நபர் நாகர்கோவில் காமராஜபுரம் அம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த ஜோசப்ராஜ் என்பவரது மகன் ஜெரின்ஜோஸ் (வயது 37) என்பது தெரியவந்தது. போலீசார் அவரை கைது செய்து, கஞ்சா விற்பனை மற்றும் கடத்தல் தொடர்பாக கூடுதல் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கஞ்சா, குட்கா மற்றும் புகையிலை போன்ற போதைப் பொருட்கள் புழக்கத்தைத் தடுக்கக் கண்காணிப்புப் பணிகள் மேலும் தீவிரப்படுத்தப்படும் என மாவட்ட காவல்துறை தெரிவித்துள்ளது. கஞ்சா விற்பனை மற்றும் கடத்தலில் ஈடுபடுபவர்கள் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மாவட்ட எஸ்.பி. ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## செம்மரக் கடத்தல்! சினிமா பாணியில் விரட்டிப் பிடித்த வனத்துறை!

**சென்னை, மார்ச் 23:**

ஆந்திர மாநிலத்திலிருந்து கடத்தி வரப்பட்ட 500 கிலோ செம்மரக் கட்டைகளை ஆந்திர மற்றும் தமிழக வனத்துறையினர் சினிமா பாணியில் விரட்டிப் பிடித்து பறிமுதல் செய்தனர்.

ஆந்திர மாநிலம் திருப்பதி அருகே ஆந்திர வனத்துறையினர் வாகன தணிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, தமிழக பதிவு எண் கொண்ட காரை அவர்கள் தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். அப்போது, ஆந்திர வனத்துறையினரிடமிருந்து தப்பித்த செம்மரக் கடத்தல்காரர்கள், காரை அதிவேகமாக ஓட்டிச் சென்றனர்.

அதிவேகமாக சென்ற காரை, ஆந்திர வனத்துறையினர், பின் தொடர்ந்து துறத்திச் சென்றனர்.


மேலும், அவர்கள் ஆந்திர எல்லையில் இருந்து தமிழக எல்லைக்குள் நுழைந்த நிலையில், தமிழக வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து, பரதராமி சோதனைச் சாவடியில் தமிழக வனத்துறையினர் காரை, தடுத்து நிறுத்த முயன்றபோது, அங்கிருந்து தப்பிய கார், வேகமாக குடியாத்தம் நோக்கிச் சென்றது. சினிமா பாணியில் ஆந்திர மற்றும் தமிழக வனத்துறையினர் காரை சேசிங் செய்துள்ளனர். அப்போது, குடியாத்தம் அருகே பாக்கம் பகுதியில் அதிவேகமாக வந்த கார் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்துக்குள் கவிழ்ந்துள்ளது. காரில் இருந்த 3 பேர் அங்கிருந்து தப்பிவிட்ட நிலையில், சுமார் 500 கிலோ செம்மரக்கட்டைகளுடன் இருந்த காரை வனத்துறையினர் பறிமுதல் செய்தனர். மேலும், படுகாயம் அடைந்த இருவரை சிகிச்சைக்காக குடியாத்தம் அரசு தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர்களிடம் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைக்கு பின்னரே அவர்கள் யார்? அவர்கள் எந்த ஊரில் இருந்து யாருக்கு செம்மரக் கட்டைகளை கடத்திச்சென்றார்கள் என்ற விவரம் தெரியவரும்.

## தேர்தலில் வாக்களிக்க 13 வாக்காளர் அடையாள சான்று: தேர்தல் ஆணையம் அறிவிப்பு

**காஞ்சிபுரம், மார்ச் 23:**

ஆட்சியர் சினேகா வெளியிட்ட அறிக்கை: 1951-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ், வாக்குப் பதிவின் போது ஆள் மாறாட்டத்தைத் தவிர்க்கவும், உண்மையான வாக்காளர்களை உறுதிப்படுத்தவும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (EPIC) கட்டாயமாக்கப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் ஏறத்தாழ 100% பேருக்கு இந்த அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், வாக்காளர்கள் அனைவரும் வாக்குச்சாவடிக்கு வரும் போது இந்த அட்டையை முதன்மை ஆவணமாகக் கொண்டு வர வேண்டும் என ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.



வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டும், அதனைத் அளிக்க இயலாத வாக்காளர்கள், தங்களின் அடையாளத்தை மெய்ப்பிக்க தேர்தல் ஆணையம் அங்கீகரித்துள்ள 12 மாற்று புகைப்பட அடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைச் சமர்ப்பிக்கலாம்.

அதன்படி, ஆதார் அட்டை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட பணி அடையாள அட்டை, புகைப்படத்துடன் கூடிய வங்கி அல்லது அஞ்சலக கணக்குப் புத்தகங்கள், தொழிலாளர் நல அமைச்சகத்தின் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டு அட்டை (ஆயுஷ்மான் பாரத்), ஓட்டுநர் உரிமம், வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை, தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப் பட்ட திறனட்டை, இந்திய கடவுச்சீட்டு, புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம், மத்திய மற்றும் மாநில அரசுகள் அல்லது பொதுத் துறை நிறுவனங்களால் வழங்கப்பட்ட பணி அடையாள அட்டைகள், நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை மற்றும் சமூக நீதி அமைச்சகத்தால் வழங்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக் கான தனித்துவமான அடையாள அட்டை ஆகியவற்றை வாக்காளர்கள் பயன்படுத்தலாம்.

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள அச்சுப் பிழைகளை பொருட்படுத்தத் தேவையில்லை என்றும், வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெற்றிருந்தால் வேறொரு தொகுதியின் தேர்தல் அதிகாரியால் வழங்கப்பட்ட அடையாள அட்டையையும் ஏற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புகைப்படம் பொருந்தாத காரணத்தால் அடையாளத்தை உறுதி செய்ய முடியாத பட்சத்தில் மட்டுமே மாற்று ஆவணம் கோரப்படும்.

வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு அசல் கடவுச் சீட்டு மட்டுமே சான்றாகும்.

## தொகுதி எண்ணிக்கையில் இழுபறி: விசிக இன்று ஆலோசனை

**சென்னை, மார்ச் 23:**

தி.மு.க. தனது கூட்டணி கட்சிகளுக்கு தொகுதி பங்கீட்டை இறுதி செய்து வருகிறது. ஏற்கனவே. காங்கிரஸ் கட்சிக்கு 28 தொகுதிகள், இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கு 5 தொகுதிகள், ம.தி.மு.க.வுக்கு 4, மனித நேய மக்கள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகியவற்றுக்கு தலா 2 தொகுதிகளை ஒதுக்கியுள்ளது.

விடுதலை சிறுத்தைகள் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, தே.மு.தி.க. ஆகிய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. புதிய கட்சிகள் கூட்டணிக்குள் இணைந்துள்ளதால் தொகுதிகளை குறைத்து கேட்குமாறு தனது கூட்டணி கட்சிகளை தி.மு.க. வலியுறுத்தி வருகிறது.

விடுதலை சிறுத்தைகள் கட்சி கடந்த சட்டமன்ற தேர்தலில் 6 தொகுதிகளில் போட்டியிட்டு 4 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இந்த முறை இரட்டை இலக்கத்தில் தொகுதிகளை கேட்டு பெற வேண்டும் என்று முடிவு செய்துள்ளது. திமுகவுடன் இரண்டு முறை தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டும் தொகுதி பங்கீட்டில் எந்த விதமான முடிவும் எட்டப்படவில்லை. திமுக கூட்டணியில் தொடர்ந்து விசிக இரட்டை இலக்கத்தில் தொகுதிகளை கேட்டு வருகிறது. ஆனால் திமுக கூட்டணியில் விசிக-வுக்கு 7 தொகுதிகளை கொடுக்க முன்வந்துள்ளது. தொகுதி பங்கீடு இழுபறிகளுக்கிடையே விசிக நாளை அவசர உயர் நிலை குழு கூட்டத்தை கூட்டுகிறது. திருமாவளவன் தலைமையில் கட்சியின் பொதுச்செயலாளர் ரவிக்குமார், சிந்தனை செல்வன் மற்றும் துணை பொதுச்செயலாளர்கள் , நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

## பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு - சரத்குமார் பேட்டி

**சென்னை, மார்ச் 23:**

பாஜகவில் சரத்குமாருக்கு முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பு வழங்கப்படவில்லை என ஆதரவாளர்கள் தங்களது குமுறலை தெரிவித்தனர்.

சென்னை தி.நகரில் ஆதரவாளர்கள், ரசிகர் மன்ற நிர்வாகிகளுடன் சரத்குமார் ஆலோசனை மேற்கொண்டார். அதனை தொடர்ந்து அவர் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

30 ஆண்டுகளாக என்னுடன் பயணித்தவர்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர். பாஜகவில் எந்த ஒரு பொறுப்பும் வழங்கப்படாதது என்ற அவர்களின் கேள்விக்கு நான் பதில் சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

பாஜகவில் எனக்கு எந்தப் பொறுப்பும் வழங்கப்படாதது ஆதங்கமாக உள்ளது. பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு என நினைக்கிறேன். பாஜகவிடம் மாநிலத்திலும் மத்தியிலும் அதிகாரத்தை கேட்போம். நான் யாருக்கும் பயந்தவன் இல்லை. சினிமாவில் உச்சத்தில் இருந்தபோது அரசியலுக்கு வந்தேன். நயினாரை சந்திக்க உள்ளேன். எங்களின் கோரிக்கையை அவர் நிறைவேற்றுவார் என நம்புகிறேன். இதுவரை பாஜகவில் எனக்கும் என் ஆதரவாளர்களுக்கும் பதவி வழங்கப்படவில்லை. பாஜக கொடுத்த வாக்கை நிறைவேற்றவில்லை. பாஜக கூட்ட மேடைகளில் உங்களின் புகைப்படம் கூட இல்லை? என ஆதரவாளர்கள் ஆதங்கப்படுகின்றனர் என்றார்.

தமிழ்நாடு இ-பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# போரூர் - பூந்தமல்லி மெட்ரோ பாலத்தின் அதிர்வு: சிஎஸ்ஐஆர்-எஸ்இஆர்சி நிகழ் நேரக் கண்காணிப்பு

**சென்னை, மார்ச் 23:**

வடபழனியிலிருந்து பூந்தமல்லி பைபாஸ் வரை மெட்ரோ வழித்தடம் நிறைவடைந்துள்ளது. இதன் ஒரு பகுதியில் மெட்ரோ ரயில் உயர்நிலைப் பாலம் தூண் இடைவெளி நீளமாக உள்ள நிலையில் அதன் அதிர்வுகளை சிஎஸ்ஐஆர் - கட்டமைப்புப் பொறியியல் ஆராய்ச்சி மையம்(எஸ்இஆர்சி) நிகழ் நேரமாக கண்காணிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மத்திய அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு கவுன்சிலின் (சிஎஸ்ஐஆர்) கீழ் இருப்பது சென்னை தரமணியிலுள்ள எஸ்இஆர்சி, இந்தக் கண்காணிப்பு குறித்து அதன் இயக்குநா என்.ஆனந்தவல்லி வெள்ளிக்கிழமை கூறியதாவது: வடபழனி - பூந்தமல்லி பைபாஸ் வரை மெட்ரோ ரயில் தடப் பணிகள் முடிவுற்று சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. இந்தப் உயர்நிலை மெட்ரோ பாலத்தில் பூந்தமல்லி முதல் நசரத்பேட்டை இடையே அதாவது சவிதா மருத்துவக் கல்லூரி அருகே சாலைகளின் குறுக்கே மெட்ரோ உயர்நிலைப் பால தூண் எண் 509 முதல் 512 வரை இடைப்பட்ட 65 மீட்டருக்கு தூண்கள் இல்லை. பொதுவாக மெட்ரோ தூண்கள் அதிகபட்சம் 30 அல்லது 40 மீட்டருக்கு இடைவெளியிருக்கும். ஆனால் இந்த தூண்களுக்கு இடையே 61.2 மீட்டா் நீளத்திற்கு எஃகு கலவை வளைவு பாலம் தூண்கள் இன்றி வெற்றிகரமாக மெட்ரோ உயா்நிலைப் பாலம் வடிவமைக்கப்பட்டு அதன் உறுதித்தன்மை நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பாலத்தைக் கண்காணித்து ஆய்வு செய்ய எஸ்இஆா்சி -ஐ ரயில்வே பாதுகாப்பு ஆணையம் கேட்டுக் கொண்டது. அதன்படி இந்த 65 மீட்டா் பாலத்தில் மெட்ரோ ரயில்கள் செல்லும்போது தண்டவாளங்களில் ஏற்படும் அதிா்வுகளை (நெகிழ்வுத் தன்மைகளை) நிகழ் நேரத்தில் கண்காணிப்படுகிறது. எஸ்இஆா்சி பொறியாளா்கள் குழு சென்சாா் கருவிகளைப் பொருத்தி கணினி மூலம் இணைத்துள்ளனா்.

தற்போது சோதனை முறையில் ரயில்கள் இயக்கப்படும் நிலையில் இந்தக் கருவி, 10 மில்லி மீட்டா் அளவு வரை அதிா்வுகள் (நெகிழ்வுத் தன்மை) உள்ளதாக பதிவு செய்துள்ளது. அதிகபட்சம் 25 மி.மீ. அளவிற்கு அதிா்வுகள் இருக்கலாம். இருப்பினும் தொடா்ச்சியாக இந்தப் பாலத்தை நிகழ்நேரத்தில் கண்காணிக்க மெட்ரோ ரயில் நிா்வாகத்துடன் 6 மாதம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 8 ஆண்டுகளாக பயன்பாட்டிற்கு வராது இருந்த சென்னை பரங்கிமலை - வேளச்சேரி இடையேயான பறக்கும் ரயில் மேம்பாலத்தின் உறுதித்தன்மை குறித்தும் ஆய்வு செய்து அறிக்கை சமா்ப்பிக்கப்பட்டது. புதிய பாம்பன் செங்குத்து தூக்கு பாலம், பழைய ரயில்வே பாலங்கள், ஆந்திர மாநிலத்தில் உள்ள போலவரம் அணை உள்ளிட்டவைகளையும் ஆய்வு செய்து சென்னை சிஎஸ்ஐஆா்-எஸ்இஆா்சி ஆய்வறிக்கை சமா்ப்பிக்கப்பட்டுள்ளது என்றாா்.

## விளையாட்டு செய்திகள்

### ஐபிஎல் தொடரிலிருந்து ஆகாஷ் தீப் விலகல்

**கொல்கத்தா, மார்ச் 23:**

ஐபிஎல் தொடரிலிருந்து கொல்கத்தா நைட் ரைடர்ஸ் (கேகேஆர்) அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஆகாஷ் தீப் காயம் காரணமாக விலகியுள்ளார். ஐபிஎல் போட்டிகள் வரும் 28-ம் தேதி முதல் 31-ம் தேதி வரை நடைபெறவுள்ளன. கொல்கத்தா அணியிலிருந்து முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ஹர்ஷித் ராணா ஏற்கெனவே காயம் காரணமாக ஐபிஎல் தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்துவிட்டார். இந்நிலையில், நேற்று மற்றொரு வேகப்பந்து வீச்சாளரஹான ஆகாஷ் தீப்பும் ஐபிஎல் தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

### "கிடைக்கும் வாய்ப்புகளை ரிங்கு சிங் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" - இர்பான் பதான் யோசனை

**புதுடெல்லி, மார்ச் 23:**

இர்பான் பதான் தனது யூடியூப் சேனலில் பேசியதாவது: ரிங்கு சிங் ஒரு மிகச்சிறந்த வீரர் என்பதை நாம் அனைவரும் அறிவோம். பல ஐபிஎல் ஆட்டங்களில் அவர் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்.

கடந்த ஐபிஎல் சீசனில் அவர் ஃபார்ம் சரியில்லை. 2023 சீசனில் அவர் அபாரமாக விளையாடினார். இந்த சீசனில் தனக்குக் கிடைக்கும் வாய்ப்புகளை அவர் சரியாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும். நடந்து முடிந்த ஐசிசி டி20 உலகக் கோப்பையில் அவர் தனக்குக் கிடைத்த வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்தவில்லை. எனவே, வரும் ஐபிஎல் சீசனில் ரிங்கு சிங்கை, கொல்கத்தா அணி எவ்வாறு பயன்படுத்தப் போகிறது என்பதைப் பார்க்கவேண்டும்.

நடந்து முடிந்த உலகக் கோப்பையில் வருண் சக்ரவர்த்தியின் ஃபார்ம் சரியாக இல்லை. வரும் ஐபிஎல் சீசனில் அவர் எவ்வாறு செயல்பட போகிறார் என்பதைப் பார்க்க ஆவலாக இருக்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### "ஐபிஎல் 2026 சீசனுக்குப் பிறகு தோனி ஓய்வு பெற வாய்ப்பு" - ராபின் உத்தப்பா

**சென்னை, மார்ச் 23:**

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் முன்னாள் வீரரான ராபின் உத்தப்பா கூறியது: "கேப்டன் பொறுப்பை சஞ்சு சாம்சனிடம் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வழங்கும் என நான் கருதவில்லை. அணியின் கேப்டனாக ருதுராஜ் கெய்க்வாட் செட்டிலாக சற்று நேரம் கொடுக்க வேண்டியது அவசியம். கடந்த 2024 சீசன் முதல் அவர் அணியை வழிநடத்தி வருகிறார். அவர் குறித்து யார் என்ன சொன்னாலும் பிரச்சினை இல்லை. தனது பாணியில் அவர் அணியை வழிநடத்த வேண்டும். அப்போதுதான் அதில் அவரது செயல்பாடு நமக்கு தெரியவரும். அந்தப் பணியை அவருக்கு சில ஆண்டுகள் கொடுக்க வேண்டும். அதன் பிறகு அவர் சரியில்லை என்ற எண்ணம் வந்தால் நம் வசம் சஞ்சு சாம்சன் இருக்கிறார். அவரிடம் கேப்டன் பொறுப்பை ஒப்படைக்கலாம்.

சிஎஸ்கே அணியின் மஞ்சள் ஜெர்ஸியில் முன்னாள் கேப்டன் தோனிக்கு ஐபிஎல் 2026-ம் ஆண்டு சீசன் கடைசி சீசனாக அமையலாம். இந்த சீசனில் அவர், வீரராகவும் ஆலோசகராகவும் செயல்படுவார் என நினைக்கிறேன். அவர் பேட்டிங் ஆர்டரில் பின்வரிசையில் பேட் செய்ய வரவே வாய்ப்புள்ளது" என தெரிவித்துள்ளார்.

# தமிழக அரசு மருத்துவமனைகளில் 'ஹீட் ஸ்ட்ரோக்' பாதிப்புக்கு சிகிச்சை அளிக்க சிறப்பு வார்டு: சுகாதாரத் துறை



**சென்னை, மார்ச் 23:**

வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதால் அரசு மருத்துவமனைகளில் 'ஹீட் ஸ்ட்ரோக்' பாதிப்புக்கு சிகிச்சை அளிக்க சிறப்பு வார்டுகளை ஏற்படுத்த வேண்டும் என்று சுகாதாரத் துறை அறிவுறுத்தி உள்ளது.

தமிழகத்தில் ஆண்டுதோறும் வெப்ப அலையால் 500-க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக, உடலில் நீர்ச்சத்து குறைந்து,மயக்கம், வாதம் போன்றவற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டு தேர்தல் காலம் என்பதால், வெயிலில் அரசியல் கட்சியினர் பிரச்சாரம் உள் ளிட்ட பணிகள் மேற்கொள்வ தால், அவர்களுக்கு உடல்நலம் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது.

இதனால், தமிழகம் முழுவதும் 'ஹீட் ஸ்ட் ரோக்' என்ற வெப்பவாத பாதிப்புகளுக்குசிகிச்சை அளிக்கும் வகையில் மருத்துவமனைகளில் அனைத்து வசதிகளையும் தயார் நிலையில் வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழக பொது சுகாதாரத் துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, "வெயில் காலத்தில் வெப்பவாதம், உட லில் நீர்ச்சத்து குறைதல். மயக்கம் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற் படும். அத்தகைய பாதிப்புகள் ஏற்படுபவர்களுக்கு சிகிச்சை அளிக்க, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகா தார நிலையங்களில் 2 படுக்கைகள் ஏற்படுத்த வேண்டும்.

மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், சிறப்பு வார்டுகளை அமைக்க வேண்டும். மருந்துகள், தடுப்பூசிகள் குறைந்த தட்ப வெப்ப நிலையில் சேமிப்பதற்கான குளிர் சாதனக் கட்டமைப்புகள் போன்றவற்றை முறையாகப் பராமரிக்க வேண் டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது" என்றனர்.

# சென்னை மேற்கு மாம்பலத்தில் மூதாட்டியிடம் 9 பவுன் செயின் பறிப்பு - 3 பேர் கைது

**சென்னை, மார்ச் 23:**

மேற்கு மாம்பலம் பகுதியில் பட்டப்பகலில் மூதாட்டியிடம் நகை பறித்த சம்பவத்தில், பழைய குற்றவாளி மற்றும் அவருக்கு உதவிய பெண் உட்பட மூவரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

சென்னை மேற்கு மாம்பலம் போஸ்டல் காலனியைச் சேர்ந் தவர் ராஜேஷ் குமார் (42). தனியார் ஐடி நிறுவன ஊழியரான இவர், தனது தாய் தமிழ்செல்வியுடன் (63) வசித்து வருகிறார். கடந்த 14ம் தேதி, கோயிலுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய தமிழ்செல்வி மாடிப் படிகளில் ஏறிக்கொண்டிருந்தார்.

அப்போது அவரைப் பின் தொடர்ந்து வந்த மர்ம நபர் ஒருவர், தமிழ் செல்வி கழுத்தில் இருந்த 9 பவுன் தங்கச் சங்கிலியைப் பறித்துக் கொண்டு, வெளியே தயாராக இருந்த இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றார்.

இது குறித்து அசோக் நகர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. சம்பவ இடத்திலிருந்த சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்த போலீஸார், நகை பறிப்பில் ஈடுபட்ட ராயபுரம், சாந்தி காலனியைச் சேர்ந்த சீனிவாசன் (49) என்பவரை கைது செய்தனர். அவரிடம் நடத்திய விசாரணையில், பறிக்கப்பட்ட நகையை மயிலாப்பூரைச் சேர்ந்த நண்பர் குமரேசன் (34) மூலமாக ஒரு தனியார் வங்கியில் அடமானம் வைத்து, ரூ.5 லட்சம் பெற்றது தெரியவந்தது.

அந்த பணத்தில், குமரேசனுக்கு கமிஷன் கொடுத்துவிட்டு, மீதமுள்ள தொகையில் ரூ.2 லட்சத்தை கண்ணகி நகரைச் சேர்ந்த அனிதா (34) என்ற பெண்ணிடம் சீனிவாசன் கொடுத்து வைத்திருந்ததும் விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து, தலைமறைவாக இருந்த குமரேசன் மற்றும் அனிதாவையும் போலீஸார் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து ரூ.1.91 லட்சம் ரொக்கப் பணத்தைப் பறிமுதல் செய்த போலீஸார், மூவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

மேலும் கைது செய்யப்பட்ட சீனிவாசன் மீது ஏற்கெனவே ராயபுரம் காவல் நிலையத்தில் 16 திருட்டு வழக்குகள் நிலுவையில் இருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

# 4.1 கோடி சிறார்களுக்கு உடல் பருமன் பாதிப்பு: உலக அளவில் இந்தியாவுக்கு 3-வது இடம்

**புதுடெல்லி, மார்ச் 23:**

உலக அளவில் உடல் பருமனால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அதிகம் உள்ள நாடுகளில் இந்தியா முதல் மூன்று இடங்களுக்குள் இருப்பதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. சுமார் 4.1 கோடி சிறுவர்களுக்கு இந்த பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதுகுறித்து உலக உடல் பருமன் அட்லஸ் 2026 அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாவது:

இந்தியாவில் 5 முதல் 19 வயதுக்குட்பட்ட சுமார் 4.1 கோடி சிறுவர்கள் அதிக உடல் எடையுடன் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.



இதில் 1.4 கோடி பேர் அதீத உடல் பருமன் பாதிப்புடன் இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சீனா மற்றும் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தியாவும் இப்பெரும் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளது. இதன் மூலம், இந்தியா ஒரே நேரத்தில் ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் அதிகரித்து வரும் சிறார் உடல் பருமன் பாதிப்பு ஆகிய இருமுனை சவால்களை எதிர்கொண்டு வருகிறது.

கடந்த 1975-ல் 4% ஆக இருந்த சிறார் உடல் பருமன் பிரச்சினை, தற்போது உலக அளவில் 20 சதவீதத்தை நெருங்கியுள்ளது.

வரலாற்றிலேயே முதல் முறையாக உலகளவில் உடல் எடை குறைந்த சிறுவர்களை விட, உடல் பருமன் கொண்டவர்களின் எண்ணிக்கை பரவலாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பல நாடுகள் இதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தாலும், பாதிப்பின் வேகத்திற்கு ஏற்ப தீர்வுகள் எட்டப்படவில்லை என்பதே நிதர்சனமான உண்மை. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## க்ரைம் கார்னர்

### கர்நாடகாவில் சிபிஐ அதிகாரிகளை போல நடித்து தொழிலதிபரிடம் ரூ.15.45 கோடி மோசடி

**பெங்களூரு, மார்ச் 23:**

கர்நாடக மாநிலம் பெலகாவி மாவட்டம் நேதாஜி நகரை சேர்ந்தவர் அஜித் கோபாலகிருஷ்ண சராஃப் (81). கிரானைட் தொழிலதிபரான இவருக்கு கடந்த பிப்ரவரி 5-ம் தேதி வாட்ஸ் அப் மூலம் அழைப்பு ஒன்று வந்தது. அதில் பேசிய நபர் தன் பெயர் கே.சிவ சுப்ரமணியம் என்றும் டெல்லி சிபிஐ அலுவலகத்தில் இருந்து பேசுவதாகவும் கூறியுள்ளார்.

மேலும் அவர், பண மோசடி வழக்கில் சிக்கியுள்ள தொழிலதிபர் நரேஷ் கோயலுக்கும் உங்களுக்கும் தொடர்பு இருப்பதை சிபிஐ கண்டறிந்துள்ளது. அதனால், உங்கள் மீது அந்நியச் செலாவணி மோசடி வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே உங்களது வெவ்வேறு வங்கிக் கணக்குகளில் உள்ள பணத்தை நாங்கள் கூறும் வங்கி கணக்குக்கு 7 நாட்களுக்குள் அனுப்ப வேண்டும். இந்த தகவலை வெளியே கசிய விட்டால் உங்களையும் உங்கள் மனைவியையும் கைது செய்துவிடுவோம். நீங்கள் அனுப்பிய பணத்தை சரிபார்த்த பின்னர், உங்களது வங்கி கணக்குக்கே திருப்பி அனுப்பி விடுவோம். நாங்கள் உங்களை 24 மணி நேரமும் கண்காணித்து கொண்டே இருப்போம். எங்களிடம் இருந்து தப்ப முயன்றால் உள்ளூர் போலீஸார் மூலம் கைது செய்வோம் என மிரட்டியுள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் தனது வங்கிக் கணக்குகளில் இருந்த ரூ.15.45 கோடியை படிப்படியாக அனுப்பி உள்ளார். ஆனால், 15 நாட்களுக்கு மேலாகியும் பணம் தனது வங்கி கணக்கில் செலுத்தப்படாததால் அதிர்ச்சி அடைந்தார். நேற்று பெலகாவி மாநகர இணைய குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இதையடுத்து போலீஸார் அவர் தெரிவித்த வங்கி கணக்கில் இருந்த ரூ.90 லட்சம் தொகையை முடக்கியுள்ளனர். மேலும் 4 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

### எழும்பூர் ரயில் நிலையத்தில் ஒரு கிலோ கஞ்சா, ரூ.77,000 சிக்கியது

எழும்பூர் ரயில் நிலையத்தில் ஆர்பிஎஃப் காவல் ஆய்வாளர் கே.பி.ஜெபஸ்டியன் தலைமையில், ரயில்வே பாதுகாப்புப் படை, தமிழக தேர்தல் பறக்கும் படையினர் இணைந்து நேற்று காலை கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

ரயில் நிலையத்தின் 8-வது நடைமேடையில் ஒரு நபர் சந்தேகத்துக்கு இடமான முறையில் நின்றுகொண்டிருந்தார். அவரது பையை சோதித்தபோது, அதில் ரூ.77,430 ரொக்கம் இருந்தது. ஆனால் இப்பணத்துக்கான ஆவணம் அவரிடம் இல்லை. அவர் ராஜஸ்தானைச் சேர்ந்த ராஜேஷ்குமார் (36) என்பது தெரியவந்தது. அவரையும், பணத்தையும் தமிழக தேர்தல் பறக்கும் படையினரிடம் ஒப்படைத்தனர்.

### ரூ.30 கோடி கிரிப்டோ மோசடி: சென்னை தனியார் நிதி நிறுவனம் வழக்குப் பதிவு

**சென்னை, மார்ச் 23:**

தமிழகத்தில் சமீபகாலமாக கிரிப்டோ கரன்சியில் முதலீடு செய்தால், அதிக லாபம் கிடைக்கும் என கூறி அதிக எண்ணிக்கையிலான மோசடி சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. அந்த வகையில், சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, திருவள்ளூர், தாம்பரம், திரு.வி.க. நகர் உள்ளிட்ட பகுதியில் இயங்கி வந்த தனியார் நிதி நிறுவனம், கிரிப்டோ கரன்சியில் முதலீடு செய்தால் மாதந்தோறும் 15 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை நிலையான வருமானம் தருவதாக விளம்பரம் செய்துள்ளது. இதை நம்பி ஏராளமானோர் இந்நிறுவனத்தில் முதலீடு செய்துள்ளனர். அந்த வகையில், சுமார் ரூ.20 கோடி முதல் ரூ.30 கோடி வரை பொதுமக்களிடம் வசூலித்துவிட்டு, வட்டியும் தராமல், அசல் தொகையையும் திருப்பித் தராமல் அந்நிறுவனம் ஏமாற்றியதாக புகார் எழுந்துள்ளது. கடந்த 2023ம் ஆண்டே இந்த நிறுவனம் குறித்து இந்தியா ரிசர்வ் வங்கியிடம் புகார் அளிக்கப்பட்டது. இது தொடர்பாக விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்ட நிலையில், நிறுவனத்தின் இயக்குநர்கள் தலைமறைவாகினர். மேலும், கம்பெனிகள் பதிவுத் துறை அந்நிறுவனத்துக்கு அபராதமும் விதித்தது. இந் நிலையில், பாதிக்கப்பட்ட மக்கள் அளித்த புகாரின் பேரில், சென்னை பொருளாதார குற்றப் பிரிவு போலீஸார் அந்நிறுவனம் மற்றும் அதன் இயக்குநர் ஜான் சார்லஸ் ரட்சகன் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

## வணிகச் செய்திகள்

### சென்னையில் 20 லிட்டர் கேன் குடிநீர் விலை ரூ.5 உயர்வு

**சென்னை, மார்ச் 23:**

அமெரிக்கா- ஈரான் போர் நீடித்து வரும் நிலையில் பெட்ரோலிய பொருளான பிளாஸ்டிக் மூலப் பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு, சென்னையில் 20 லிட்டர் கேன் குடிநீர் விலை ரூ.5 உயர்ந்துள்ளது.

அமெரிக்கா - ஈரான் இடையிலான போர் தொடரும் நிலையில் வணிக சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக டீக் கடைகள், ஓட்டல்கள் மூடப்படும் போதும், வீட்டு சமையல் சிலிண்டர் விநியோகத்திலும் சிக்கல் ஏற்பட்டது.

இதன் தொடர்ச்சியாக இப்போது, பெட்ரோலிய உப பொருளான பிளாஸ்டிக் தட்டுப்பாடால் காலி குடிநீர் கேன், பாட்டில்கள் தயாரிப்புக்கு தேவையான பிளாஸ்டிக் மூலப் பொருள் கிடைக்காமல் அதன் விலையும் உயர்ந்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் வரை சென்னையில் உற்பத்தி செய்யப்படும் 20 லிட்டர் கொள்ளளவு கொண்ட தரமான கேன் விலை ரூ.122 ஆக இருந்தது, இப்போது ரூ.155 முதல் ரூ.165 வரை உயர்ந்துள்ளது. இதனால் வீடுகளில் கொண்டு வந்து கொடுக்கும் 20 லிட்டர் கேன் குடிநீரின் விலை ரூ.30-லிருந்து ரூ.35 ஆக உயர்ந்துள்ளது.

இது தொடர்பாக அடைக்கப்பட்ட குடிநீர் உற்பத்தியாளர் சங்கத்தை சேர்ந்த இலங்கேஸ்வரன் செய்தியாளர்களிடம் நேற்று கூறும்போது, ஏற்கெனவே சொத்து வரி உயர்வு, மின் கட்டண உயர்வுகள் வரும் போதெல்லாம் குடிநீர் கேன் விலையை உயர்த்தவில்லை.

# பெங்களூருவில் வீடு புகுந்து சிலிண்டர் திருட்டு - போலீஸ் விசாரணை



**பெங்களூரு, மார்ச் 23:**

நாட்டில் சமையல் எரிவாயு சிலிண்டருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கர்நாடக மாநிலத்தின் தலைநகர் பெங்களூருவில் ஓட்டல்கள், உணவகங்கள், தங்கும் விடுதிகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கான சிலிண்டர் வினியோகம் முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளது.

பெங்களூருவில் சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக சுமார் 25 ஆயிரம் ஓட்டல்கள் மற்றும் உணவகங்கள் மூடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதனால் தினசரி உணவு தேவைக்காக ஓட்டல்களை நம்பியுள்ள மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக ஓட்டல் தொழிலை நம்பி இருப்பவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், பெங்களூருவில் வீடு புகுந்து சிலிண்டர்கள் திருடப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நேற்று உகாதி பண்டிகை கொண்டாடப்பட்ட சூழலில், இந்த திருட்டு சம்பவம் பெங்களூருவில் அரங்கேறியுள்ளது. இது தொடர்பான சி.சி.டி.வி. காட்சிகள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன. அந்த வீடியோவில் ஹெல்மெட் அணிந்த 2 நபர்கள் ஒரே ஸ்கூட்டரில் ஒரு வீட்டின் முன்பு வந்து நிற்கின்றனர். ஒரு நபர் வீட்டிற்கு வெளியே நிற்க, மற்றொரு நபர் ஸ்கூட்டருடன் வீட்டின் கேட்டை தாண்டி உள்ளே செல்கிறார். பின்னர் சிறிது நேரம் கழித்து 2 சிலிண்டர்களுடன் அவர் வெளியே வருகிறார். தொடர்ந்து இருவரும் ஸ்கூட்டரில் ஏறி அங்கிருந்து தப்பிச் செல்கின்றனர்.

இந்த திருட்டு சம்பவம் பெங்களூருவின் பேகூர் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

இது தொடர்பாக வீட்டின் உரிமையாளர் அளித்த புகாரின்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். பெங்களூருவில் சிலிண்டர் தட்டுப்பாடு தீவிரமடைந்து வரும் நிலையில், வீடு புகுந்து சிலிண்டர் திருடப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


## உள்நாட்டு விமானக் கட்டணங்களுக்கான உச்ச வரம்பு இன்று முதல் நீக்கம்

**புதுடெல்லி, மார்ச் 23:**

இண்டிகோவின் பெரிய அளவிலான விமானச் சேவை இடையூறுகளால் ஏற்பட்ட டிக்கெட் விலைகளின் அசாதாரண உயர்வைத் தடுப்பதற்காக, உள்நாட்டு விமானக் கட்டணங்களுக்கு டிசம்பர் 6 அன்று தற்காலிக உச்சவரம்பு விதிக்கப்பட்டது. அது முதல் விமானக் கட்டணப் போக்குகளை அமைச்சகம் நிகழ்நேர அடிப்படையில் கண்காணித்து வருகிறது. இந்த நிலையில் 23-ந்தேதி (இன்று) முதல் விமானக் கட்டண உச்சவரம்பு நீக்கம் செய்யப்படுகிறது.

மேலும் அதிகபட்ச தேவை, இடையூறுகள் அல்லது அவசர காலங்களில், கட்டணங்களில் அதிகப்படியான அல்லது நியாயமற்ற உயர்வு காணப்பட்டால், அது தீவிரமாகப் பார்க்கப்படும் என்றும் அமைச்சகம் வலியுறுத்தி உள்ளது. இந்நிலையில், விமானக் கட்டணங்களுக்கான உச்ச வரம்பு நாளை முதல் நீக்கப்படுவதால் விமான டிக்கெட் கட்டணம் பன்மடங்கு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. எரிபொருள் விலையேற்றத்தைக் காரணம் காட்டி ஏற்கனவே டிக்கெட் விலையை சில விமான நிறுவனங்கள் உயர்த்தியுள்ள சூழலில் தற்போது அது மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

## 'ரெயில் ஒன்' செயலியை 2.57 கோடி பயணிகள் பதிவிறக்கம்




**புதுடெல்லி, மார்ச் 23:**

கடந்த 2025-ம் ஆண்டு ஜூலை 1-ந்தேதி அறிமுகம் செய்யப்பட்ட இந்த செயலி, முன்பு தனித்தனியாக இருந்த பல செயலி களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் ரெயில்வே தொடர் பான அனைத்து சேவைகளையும் ஒரே தளத்தில் பயன்படுத்த முடியும். இதன் மூலம் ஐ.ஆர்.சி.டி.சி. மற்றும் யூ.டி.எஸ். கணக்குகளை பயன்படுத்தி ஒரு முறையில் உள்நுழைந்து அனைத்து சேவைகளையும் பெறலாம். இதற்கிடையே, கடந்த மார்ச் 1-ந்தேதி முதல் யூ.டி.எஸ். செயலி நிறுத்தப் பட்டு, அதன் சேவைகள் முழுமையாக ரெயில் ஒன் செயலிக்குள் மாற்றப் பட்டுள்ளன. இதற்கு மிக முக்கியமான காரணம், வெவ்வேறு ரெயில் செயலிகளை பயன்படுத்தியவர்களை ஒருங்கிணைந்த ரெயில் ஒன் செயலியை பயன்படுத்த வைக்க வேண்டும் என்பதுதான். அதன்படி, தற்போது ரெயில் ஒன் செயலியை பயன்படுத்துவோர் எண்ணிகை வேகமாக அதிகரித்துள்ளது. குறிப்பாக, இந்த செயலியை கடந்த பிப்ரவரி மாதம் வரையில் 2 கோடி பயணிகள் பதிவிறக்கம் செய்திருந்தனர். இந்த நிலையில், இந்த மாதத்தில் (மார்ச் 15-ந்தேதி வரை) 57 லட்சம் பயணிகள் பதிவிறக்கம் செய்து மொத்தம் 2.57 கோடி ரெயில் பயணிகள் ரெயில் ஒன் செயலியை பதிவிறக்கம் செய்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால், பயணிகளுக்கு விரைவான மற்றும் எளிதான பயண அனுபவத்தை வழங்கும் முக்கிய டிஜிட்டல் மாற்றமாக 'ரெயில் ஒன்' செயலி பார்க்கப்படுகிறது.

# ஹார்முஸ் ஜலசந்தியில் சிக்கிய இந்திய கப்பல் கேப்டன் மாரடைப்பால் உயிரிழப்பு



**ராஞ்சி, மார்ச் 23:**

ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியை சேர்ந்தவர் ராகேஷ் ரஞ்சன் (வயது 47) இவருக்கு மனைவி மற்றும் பிரவார் (20) ஓம் (16) 2 மகன்கள் உள்ளனர். ராகேஷ் கடந்த 26-ம் ஆண்டுகளாக வணிக கப்பல் படை அதிகாரியாக பணியாற்றி வந்தார்.

இவர் கடந்த பிப்.2-ம் தேதி அன்று ஒரு தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான ஏ.எஸ்.பி. அவானா என்ற கப்பலில் கேப்டனாக பணியில் சேர்ந்தார். ஹார்முஸ் ஜலசந்தியில் இருந்து ஒரு எண்ணை கப்பலை வெளியே செலுத்தும் பணியில் அவர் ஈடுபட்டு இருந்தார்.

கடந்த 26-ம் தேதி அமெரிக்கா, இஸ்ரேல், ஈரான் இடையே போர் ஏற்பட்டதால் ஹார்முஸ் நீரினை பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. அந்த வழியாக கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. இதையடுத்து கடந்த 20 நாட்களாக ரஞ்சன் அந்த கப்பலில் சிக்கி இருந்தார்.

போர் காரணமாக அந்த கப்பல் கடலில் தனது செயல்பாடுகளை நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கேப்டன் ரஞ்சன் சிங் உட்பட சுமார் 35 பணியாளர்களுடன் அந்த கப்பல் துபாய் கடற்கரையில் இருந்து கிட்டத்தட்ட 60 கி.மீ தொலைவில் சுமார் 20 நாட்கள் வரை நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டிருந்தது.

கடலில் நீண்ட நாட்கள் இருந்தது மற்றும் மன அழுத்தம் காரணமாக கடந்த 18-ம் தேஎதி ரஞ்சன் சிங்கின் உடல்நிலை திடீரென மோசமடைந்தாக கூறப்படுகிறது.

இதனையடுத்து கப்பலில் இருந்த அதிகாரிகள், ஒரு வான்வழி ஆம்புலன்சை கோரி துபாய் விமான போக்குவரத்து அதிகாரிகளை தொடர்பு கொண்டனர். போர் சூழல் காரணமாக தேவையான அனுமதியை உரிய நேரத்தில் பெற முடியவில்லை.

இதை தொடர்ந்து அவர் கப்பலில் இருந்து படகு மூலம் துபாய் கடற்கரைக்கு கொண்டு செல்லப்பட்டார். மருத்துவ சிகிச்சை கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதால் மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பே அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார்.

ரஞ்சன் சிங் உயிரிழந்தது குறித்து அவரது குடும்பத்தினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவரது மரணத்திற்கான சரியான காரணம் எங்களுக்கு இன்னும் தெரியவில்லை என்றும் நேரத்தை வீண்டடிக்கபடாமல் உஅனடியாக அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்று இருந்தால் அவரது உயிரை காப்பாற்றி இருக்கலாம் என்று அவரது குடும்பத்தினர் குற்றம் சாட்டினர்.

# மார்ச் 25ம் தேதி கேரளாவில் தேர்தல் பிரசாரத்தை தொடங்கும் ராகுல் காந்தி



**திருவனந்தபுரம், மார்ச் 23:**

கேரளா (140 தொகுதிகள்) மற்றும் அசாம் (126 தொகுதிகள்) ஆகிய மாநிலங்களுக்கும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கும் (30 தொகுதிகள்) வரும் ஏப்ரல் 9-ந்தேதி ஒரே கட்டத்தில் தேர்தல் நடத்தப்பட உள்ளது. இதற்கானவாக்கு எண்ணிக்கை மே 4-ந்தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கேரள மாநிலத்தில் வேட்பு மனு தாக்கல் தொடங்கி நடைபெற்று வரும் நிலையில், கேரளாவின் தர்மடம் சட்டமன்ற தொகுதியில் அந்த மாநிலத்தின் முதல்-மந்திரி பினராயி விஜயன் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். தர்மடம் தொகுதியில் அவர் 3-வது முறையாக போட்டியிடுகிறார். கடந்த 19-ம் தேதி காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் 92 வேட்பாளர்களின் பட்டியல் வெளியிடப்பட்டிருந்தது. இந்த நிலையில், கேரளா வில் நடைபெறவிருக்கும் சட்டமன்ற தேர்தலுக்கான தனது தேர்தல் பிரச்சாரத்தை, மூத்த காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, மார்ச் 25ம் தேதியன்று கோழிக்கோட்டில் ஒரு மாபெரும் பேரணியுடன் தொடங்குகிறார். ஏப்ரல் 9-ம் தேதி அன்று நடைபெறவிருக்கும் தேர்தலுக்கு முன்னதாக, மாநிலத்தில் தனது பிரச்சார பயணத்தின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில், இந்த பேரணி மாலையில் கோழிக்கோடு கடற்கரையில் நடைபெற உள்ளது என்று மூத்த காங்கிரஸ் தலைவர் ரமேஷ் சென்னிதலா தெரிவித்தார்.

## அதிகாரி தற்கொலை விவகாரம்: பஞ்சாப் மந்திரி திடீர் ராஜினாமா

**புதுடெல்லி, மார்ச் 23:**

பஞ்சாப் மாநிலம் அமிர்தரசில் உள்ள கிடங்கு கழகத்தின் மாவட்ட மேலாளரான ககன் தீப் சிங் ரந்தா நேற்று முன் தினம் இரவு அளவுக்கு அதிகமான மாத்திரைகள் தின்று தற்கொலை செய்துகொண்டார். அவர் தற்கொலைக்கு முன்பாக வெளியிட்ட வீடியோவில் தனது இந்த விபரீத முடிவுக்கு மந்திரி லால்ஜி சிங் புல்லர் காரணம் என்று குற்றம் சாட்டி இருந்தார்.

மனதை உலுக்கும் இந்த 12 வினாடி வீடியோ பஞ்சாப் அரசியலில் பெரும் புயலை கிளப்பியது. அந்த வீடியோவில், தனது மன உளைச்சலுக்கும் மரணத்திற்கும் சில தனிநபர்களே காரணம் என்று குற்றம் சாட்டினார். குறிப்பாக மந்திரி லால்ஜித் சிங் புல்லரின் பெயரை நேரடியாக குறிப்பிட்டார். இந்த வீடியோ பஞ்சாப் அரசியலில் பெரும் புயலை கிளப்பியது. இதற்கு காரணமான மந்திரி லால்ஜித் சிங் புல்லரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கின. இதனை தொடர்ந்து உர்ய விசாரணை நடத்துமாறு முதல்-மந்திரி பகவந்த் மான் தலைமைசெயலாளர் கே.ஏ.பி. சின்ஹாவுக்கு உத்தரவிட்டார். இந்த சூழலில் போக்குவரத்துறை மந்திரி லால்ஜித் சிங் புல்லர் தனது பதவியை ராஜினாமா செய்தார். அவரது ராஜினாமா ஏற்கப்பட்டதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## 12 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை: ஆட்டோ டிரைவர் கைது

**கோழிக்கோடு, மார்ச் 23:**

கேரளம் மாநிலம் கோழிக்கோடு மாவட்டத்தை சேர்ந்தவர் முகமது நூர்(வயது 45). ஆட்டோ டிரைவர். இந்தநிலையில் சேவாயூர் பகுதியை சேர்ந்த தம்பதி, தங்களது 12 வயது மகள் அருகே உள்ள பள்ளிக்கூடத்தில் 6-ம் வகுப்பு படித்து வரும் நிலையில் நேற்றுமுன்தினம் காலை தேர்வு எழுத பள்ளிக்கூடத்திற்கு ஆட்டோவில் அனுப்பி வைக்க முடிவு செய்தனர். அதன்படி அவர்கள் முகமது நூரை அழைத்து, மகளை ஆட்டோவில் பள்ளிக்கூடத்தில் விட கூறினர். இதன்படி முகமது நூரும் சிறுமியை ஆட்டோவில் ஏற்றி பள்ளிக்கூடத்திற்கு அழைத்து சென்றார். அப்போது செல்லும்வழியில் ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில் வைத்து அவர் சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்தார். இதுகுறித்து சேவாயூர் போலீசில் புகார் அளிக்கப்பட்டது. போலீசார் வழக்குப்பதிவு செய்து ஆட்டோ டிரைவர் முகமது நூரை கைது செய்தனர்.

## அமெரிக்காவிலிருந்து இந்தியா வந்தடைந்த எல்பிஜி சரக்குக் கப்பல்!

**மங்களூரு, மார்ச் 23:**

அமெரிக்காவிலிருந்து எல்பிஜி ஏற்றிவந்த சரக்குக் கப்பல் மங்களூரு துறைமுகத்தை வந்தடைந்தது.

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அமெரிக்காவிலிருந்து எல்பிஜி ஏற்றி வந்த சரக்குக் கப்பல், கர்நாடக மாநிலத்தில் உள்ள புதிய மங்களூரு துறைமுகத்தை வந்தடைந்தது. மேலும், மங்களூரு துறைமுகத்துக்கு எல்பிஜி மற்றும் கச்சா எண்ணெய் ஏற்றி வரும் கப்பல்களுக்கு, மார்ச் 31 வரையில் சரக்குக் கட்டணம் தள்ளுபடி செய்யப்படுவதாக மத்திய அமைச்சகம் அறிவித்துள்ளது. ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து தாக்குதல் நடத்தி வரும்நிலையில், ஈரானும் உரிய பதிலடி கொடுத்து வருகிறது. மேலும், உலகளாவிய எண்ணெய் வர்த்தகத்தில் முக்கிய பங்களிக்கும் ஹோர்முஸ் நீரிணையையும் ஈரான் மூடியது. இதனால், சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இந்தியாவிலும் பெட்ரோல், டீசல் மட்டுமின்றி, எல்பிஜி பற்றாக்குறை ஏற்படலாம் என பொதுமக்கள் பீதியடைந்து, முண்டியடித்துக் கொண்டு பெட்ரோல் வாங்குவதும், எல்பிஜி முன்பதிவு செய்வதுமாய் இருந்தனர். இருப்பினும், நாட்டில் எல்பிஜி பற்றாக்குறை இல்லையென மத்திய அரசு தொடர்ந்து அறிவுறுத்தி வருகிறது. இதனிடையே, ஹோர்முஸ் நீரிணையைத் திறப்பதற்கு உலக நாடுகளிடம் அமெரிக்கா உதவியும் கோரி வருகிறது.

## தாராகிரி' போர்க் கப்பல்: ஏப்.3-இல் கடற்படையுடன் இணைப்பு

**புதுடெல்லி, மார்ச் 23:**

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 'தாராகிரி' ஸ்டெல்த் ரக போர்க் கப்பல் இந்திய கடற்படையில் ஏப்.3-ஆம் தேதி இணைக்கப்படுவதாக அதிகாரிகள் சனிக்கிழமை தெரிவித்தனர். இதற்காக ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் கூறுகையில், 'நீலகிரி வகையின் (திட்டம் 17ஏ) நான்காவது போர்க் கப்பலான தாராகிரி (யார்டு 12653) கடந்த ஆண்டு நவம்பர் 28-ஆம் தேதி கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது. மும்பையில் உள்ள மசகான் டாக் கப்பல் கட்டுமான நிறுவனத்தால் (எம்டிஎல்) கட்டமைக்கப்பட்ட மூன்றாவது போர்க் கப்பலான தாராகிரி 6,670 டன் எடையுடையது. நமது நாட்டின் பொறியியல் திறன்களின் முழு வெளிப்பாடாகவும், 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்தின் சிறந்த உதாரணமாகவும் இந்தப் போர்க் கப்பல் திகழ்கிறது. எளிதில் கண்டறிய முடியாத வடிவமைப்பு (ஸ்டெல்த்), தாக்கும் திறன், தாமாக இயங்கும் ஆற்றல் என நவீன தொழில்நுட்பங்களுடன் அதி வேகம், பன்முக கடற்சார் செயல்பாடுகள் என தற்சார்பு இந்தியாவின் சின்னமாக தாராகிரி விளங்கிறது. இந்தப் போர்க் கப்பலில் தரையில் இருந்து தரை இலக்குகளைத் தாக்கும் சூப்பர்சோனிக் ஏவுகணைகள், தரையில் இருந்து வான் இலக்குகளைத் தாக்கும் நடுத்தர ஏவுகணைகள் மற்றும் சிறப்பு நீர்மூழ்கி எதிர்ப்பு அமைப்புகள் இடம்பெற்றுள்ளன.

உலகத் தரத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ள தாராகிரி போர்க் கப்பல் இந்திய கடற்படையில் ஏப்ரல் 3-ஆம் தேதி இணைக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வில் அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்கிறார்' என்றனர்.

# கேரளா: காணாமல் போனதாக தேடப்பட்ட கல்லூரி மாணவி கால்வாயில் பிணமாக மீட்பு



**திருச்சூர், மார்ச் 23:**

கேரளம் மாநிலம் திருச்சூர் மாவட்டம் அவனூர் அருகே பாண்டியாட்டு வீட்டை சேர்ந்தவர் அரவிந்தாக்ஷன். இவரது மகள் அனுப் பிரியா(வயது 25). இவர் லாலூர் பகுதியில் உள்ள கல்லூரியில் எம்.பி.ஏ. 2-ம் ஆண்டு படித்து வந்தார். இதற்கிடையே கடந்த 19-ந்தேதி வீட்டில் இருந்து வழக்கம்போல் கல்லூரிக்கு செல்வதாக கூறி அனுப் பிரியா சென்றார்.

கல்லூரி முடிந்து மாலை நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை. இதனால் அதிர்ச்சி அடைந்த குடும்பத்தினர் கல்லூரி மற்றும் அவரது நண்பர்களிடம் விசாரித்தனர். அப்போது அனுப் பிரியாவுடன் படிக்கும் சக மாணவி, கல்லூரி அரை நாள் மட்டுமே நடந்தது, 12.30 மணிக்கு நானும், அனுப் பிரியாவும் கல்லூரியில் இருந்து வெளியே வந்தபோது அனுப்பிரியா திருச்சூர் வடக்கு பஸ் நிலையத்திற்கு சென்றதாக தெரிவித்தார்.

தொடர்ந்து பஸ் நிலையம் உள்பட சுற்றுவட்டார இடங்களில் தேடியும் அனுப் பிரியா கிடைக்காததால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர்.

இதுகுறித்து உடனே திருச்சூர் மாநகர போலீஸ் கமிஷனர் சசிதரனிம் புகார் அளித்தனர். இதையடுத்து இன்ஸ்பெக்டர் சுஜித் தலைமையில் போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி மாணவியை தேடிவந்தனர்.

அதில் அனுப் பிரியாவும், சேலக்கோட்டுக்கரா பகுதியை சேர்ந்த நீலஜ் நீலங்காவில் என்ற வாலிபரும் காதலித்து வந்ததாக கூறப்பட்டது.

தொடர்ந்து அவர்களது காதலுக்கு நீலஜின் குடும்பத்தினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதையடுத்து அனுப் பிரியாவின் பாடப்புத்தகத்தில் இருந்த ஒரு கடிதம் போலீசார் வசம் கிடைத்தது. அந்த கடிதத்தில் தனக்கு ஏதாவது நடந்தால் அதற்கு நீலஜும், அவரது குடும்பத்தினர் தான் பொறுப்பு என்று மலையாளத்தில் எழுதப்பட்டிருந்தது. இதையடுத்து அந்த கடிதத்தை போலீசார் கைப்பற்றினர்.


இந்தநிலையில் காணாமல் போனதாக தேடப் பட்ட அனுப்பிரியா மணித்தரா பகுதியில் உள்ள அணை கால்வாய் தண்ணீரில் இறந்த நிலையில் உடல் மிதந்து காணப்பட்டது. தகவல் அறிந்த போலீசார் மற்றும் தீயணைப்பு படை வீரர்கள் விரைந்து வந்து கால்வாயில் பிணமாக மிதந்த அனுப் பிரியாவின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருச்சூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அவர் கால்வாயில் குதித்து தற்கொலை செய்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஆனால் அவர் எப்படி இறந்தார்? என்பது சரியாக தெரியவில்லை. இதுகுறித்து போலீசார் மேற்கொண்டு விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# அமெரிக்காவின் எப்-15 போர் விமானத்தை சுட்டு வீழ்த்திய ஈரான்

**தெஹ்ரான், மார்ச் 23:**

அமெரிக்கா, இஸ்ரேல் ஈரான் இடையேயான போர் இன்று 23-வது நாளாக நீடித்துக்கொண்டிருக்கிறது. இதில் நேற்று ஈரானின் அணுசக்தி நிலையம் அருகே வான்வழித்தாக்குதல் நடத்தப்பட்டது.

தலைநகர் தெக்ரானில் இருந்து 220 கி.மீ தொலைவில் உள்ள ஈரானின் முக்கிய செறிவூட்டல் தளமான நடான்ஸ் அணுசக்தி நிலையம் குறி வைக்கப்பட்டது. இதில் அந்த நிலைய வாளகத்தில் உள்ள கட்டமைப்புகள் சேதம் அடைந்தன.





இந்தநிலையில் நடான்ஸ் அணுசக்தி நிலையம் மீதான தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேலின் அணு ஆராய்ச்சி மையம் அருகே இயங்கி வருகிறது. ஷிமோன் பெரெஸ் நெகேவ் என்ற அந்த அணு ஆராய்ச்சி மையம் இஸ்ரேலுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

இதற்கிடையே அணுசக்தி ஆராய்ச்சி மையம் அமைந்துள்ள டிமோனா நகரம் மீது ஈரான் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது. அணுசக்தி ஆராய்ச்சி மையத்தில் இருந்து 13 கி.மீ தொலைவில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டன. ஈரான் ஏவிய ஏவுகணைகளை தடுக்க இஸ்ரேலின் வான்பாதுகாப்பு அமைப்புகள் தீவிரமாக செயல்பட்டன.

ஆனால் ஏவுகணைகள் துல்லியமாக தாக்குதலை நடத்தின. அந்த ஏவுகணைகள் அணுசக்தி ஆராய்ச்சி மையம் அருகே குடியிருப்பு பகுதிகளில் விழுந்து வெடித்தது. இதில் ஏராளமான வீடுகள் சேதம் அடைந்தன. அதேபோல் தெற்உ இஸ்ரேலின் மற்றொரு நகரமான அரத்திலும் ஈரான் சரமாரியாக ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது. இதில் பல வீடுகள் சேதம் அடைந்தன. டிமோனா மற்றும் அரத் நகரங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் குழந்தைகள் உள்பட 100க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். இந்த தாக்குதல்களால் இஸ்ரேலில் கடும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. இந்தநிலையில், ஹார்முஸ் ஜலசந்தியை திறக்க 48 மணி நேரம் டிரம்ப் விடுத்துள்ள கெடுவை ஈரான் நிராகரித்து உள்ளது. ஹார்முஸ் தீவு அருகே அமெரிக்காவின் எப்-15 போர் விமானத்தை தங்களது வான் பாதுகாப்பு அமைப்பு சுட்டு வீழ்த்தியதாக ஈரான் அறிவித்துள்ளது.

ஹார்முஸ் நீரிணையை திறக்க 48 மணி நேரம் ட்ரம்ப் கெடு விதித்துள்ள நிலையில், அமெரிக்க விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக தெரிவித்து ஈரான் வீடியோ வெளியிட்டுள்ளது.

## ஆப்கானிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தான் ராணுவ தளபதி எச்சரிக்கை

**இஸ்லாமாபாத், மார்ச் 23:**

சமீபத்தில் பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் இடையே சண்டை நடந்த நிலையில், பாகிஸ்தான் ராணுவ தளபதி ஆசிம் முனீர், ராணுவ வீரர்களுடன் ரம்ஜான் பண்டிகையை கொண்டாடுவதற்காக ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டியுள்ள குர்ரம் பகுதிக்கு சென்றார். அங்கு சிறப்பு தொழுகையில் ஈடுபட்டார். ராணுவ வீரர்களுடன் உரையாடினார். ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதிகளின் கட்டமைப்புகளை அழிக்கும் நடவடிக்கையில் அவர்களின் சாதனைகளை பாராட்டினார்.

ராணுவ வீரர்களிடம் அவர் கூறியதாவது: ஆப்கானிஸ்தானில் இருந்து செயல்படும் பயங்கரவாதிகள் பாகிஸ்தானின் அமைதியை குலைப்பதை பாகிஸ்தான் அனுமதிக்காது. அதுபோல், பாகிஸ்தானுக்கு எதிரான காரியங்களுக்கு ஆப்கானிஸ்தான் மண்ணை பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது. இந்த பிராந்தியத்தில் அமைதி மற்றும் நிலைத்தன்மைக்கு பாகிஸ்தான் உறுதி பூண்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## ஸ்பெயினை தாக்கிய 'தெரிஸ்' புயல்.. கடும்பனிப்பொழிவால் விமான போக்குவரத்து ரத்து

**மாட்ரிட், மார்ச் 23:**

ஸ்பெயின் நாட்டின் கேனரி தீவுகளை 'தெரிஸ்' என்ற சக்திவாய்ந்த புயல் தாக்கி வருகிறது. இதனால் அங்குள்ள டெனெரிப் மற்றும் லா பால்மா தீவு களில் கடும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. தெரிஸ் புயல் இப்பகுதி முழுவதும் வீசுவதால், ஸ்பெயின் நாட்டின் வானிலை ஆய்வு மையம் (AEMET), கனமழை, இடியுடன் கூடிய மழை மற்றும் உயரமான பகுதிகளில் அரிதாக ஏற்படக்கூடிய பனிப்பொழிவு குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளது. டெனெரிப் மற்றும் பிற தீவுகளுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள், மாறிவரும் வானிலை நிலவரங்கள் மற்றும் தங்களது பயணத் திட்டங்களில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அங்கு தெரிஸ் புயல் காரணமாக மணிக்கு 100 கி.மீ. வேகத்தில் சூறாவளி காற்று வீசி வருகிறது. கனமழையுடன் சில இடங்களில் பனிப்பொழிவும் காணப்படுகிறது. கடலில் 5 மீட்டர் உயரத்திற்கு ராட்சத அலைகள் எழும்புவதால் கடற்கரை பகுதிகளுக்கு மக்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டதோடு, 60-க்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. பல இடங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்தன. இதுவரை உயிரிழப்புகள் ஏதும் ஏற்படவில்லை என்றாலும், பலத்த காற்றால் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது. அங்கு 'ஆரஞ்சு' எச்சரிக்கை விடுக்கப்பட்டு மீட்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இந்த மோசமான வானிலை தொடர்ந்து நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜெருசலேம் மீது தொடர் தாக்குதல்களை நடத்தும் ஈரான்!

**ஜெருசலேம், மார்ச் 23:**

ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தவிருப்பதாக இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில் இஸ்ரேல் தலைநகரான ஜெருசலேமில் தொடர்ந்து தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன.

இஸ்ரேல் நிலப்பரப்பை நோக்கி ஈரான் ஏவுகணைகளை செலுத்தியதாக இஸ்ரேல் ராணுவம் பல்வேறு எச்சரிக்கைகளை விடுத்த நிலையில் இந்தத் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளது. முதல் எச்சரிக்கைக்குப் பிறகு எந்தவித உயிரிழப்புகளும் ஏற்படவில்லை என அவசர மருத்துவ உதவிக் குழுக்கள் தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ராணுவப் படைகள் விரைவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. முன்னதாக, நேற்று (மார்ச் 21) ஜெருசலேமில் உள்ள புகழ்பெற்ற மசூதியான அல் - அக்ஸா மசூதி அருகே ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதல் வான்வழியில் மறிக்கப்பட்ட போதும் ஏவுகணையின் பாகங்கள் மசூதிக்கு மிக அருகே விழுந்து சேதங்களை ஏற்படுத்தியுள்ளது.

ஜெருசலேம் மற்றும் தெற்கு இஸ்ரேலில் உள்ள டிமோனா மற்றும் அராத் நகரங்களின் மீது நேற்று ( மார்ச் 21) ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து இஸ்ரேலில் அவசரநிலை எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன. தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்களில் 175 பேருக்கு சிகிச்சை அளித்ததாகவும் ஒரு குழந்தை உள்பட 10 பேர் தீவிர சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் சொரோகா மருத்துவ மையம் தெரிவித்தது.

## ஸ்பெயினை தாக்கிய 'தெரிஸ்' புயல்.. கடும்பனிப்பொழிவால் விமான போக்குவரத்து ரத்து

**மாட்ரிட், மார்ச் 23:**

ஸ்பெயின் நாட்டின் கேனரி தீவுகளை 'தெரிஸ்' என்ற சக்திவாய்ந்த புயல் தாக்கி வருகிறது. இதனால் அங்குள்ள டெனெரிப் மற்றும் லா பால்மா தீவு களில் கடும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

தெரிஸ் புயல் இப்பகுதி முழுவதும் வீசுவதால், ஸ்பெயின் நாட்டின் வானிலை ஆய்வு மையம் (AEMET), கனமழை, இடியுடன் கூடிய மழை மற்றும் உயரமான பகுதிகளில் அரிதாக ஏற்படக்கூடிய பனிப்பொழிவு குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளது. டெனெரிப் மற்றும் பிற தீவுகளுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள், மாறிவரும் வானிலை நிலவரங்கள் மற்றும் தங்களது பயணத் திட்டங்களில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



அங்கு தெரிஸ் புயல் காரணமாக மணிக்கு 100 கி.மீ. வேகத்தில் சூறாவளி காற்று வீசி வருகிறது. கனமழையுடன் சில இடங்களில் பனிப்பொழிவும் காணப்படுகிறது. கடலில் 5 மீட்டர் உயரத்திற்கு ராட்சத அலைகள் எழும்புவதால் கடற்கரை பகுதிகளுக்கு மக்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டதோடு, 60-க்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

பல இடங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்தன. இதுவரை உயிரிழப்புகள் ஏதும் ஏற்படவில்லை என்றாலும், பலத்த காற்றால் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது. அங்கு 'ஆரஞ்சு' எச்சரிக்கை விடுக்கப்பட்டு மீட்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இந்த மோசமான வானிலை தொடர்ந்து நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஈரானிய தூதரக அதிகாரிகள் நாட்டை விட்டு வெளியேற சவுதி அரேபியா உத்தரவு

**ரியாத், மார்ச் 23:**

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்த தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். இதற்கு பதிலடியாக அரபு நாடுகளில் உள்ள அமெரிக்காவின் ராணுவ நிலைகள் மீது ஈரான் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது.





இந்த நிலையில், ஈரானின் தாக்குதலுக்கு சவுதி அரேபியா வெளியுறவுத்துறை அமைச்சகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. ஈரானின் தாக்குதல் 'அப்பட்டமான சர்வதேச விதிமீறல்' என குறிப்பிட்டுள்ள சவுதி அரசு, அண்டை நாடுகளுக்கான கொள்கைகள் மற்றும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானத்தை ஈரான் மீறியுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளது. மேலும், ஈரானின் தாக்குதல் 'இஸ்லாமிய சகோதரத்துவம்' மற்றும் இஸ்லாமிய மதத்தின் அடிப்படைக் கொள்கைகளை மீறுவதாக இருக்கிறது என்றும் சவுதி அரேபியா பகிரங்கமாக குற்றம்சாட்டியுள்ளது.

இந்த நிலையில், ஈரான் ராணுவ அதிகாரி மற்றும் 4 தூதரக அதிகாரிகள் 24 மணி நேரத்திற்குள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என சவுதி அரேபியா உத்தரவிட்டுள்ளது.

## ஹவாய் வெள்ளப்பெருக்கு: 5,500-க்கும் மேற்பட்ட மக்கள் பாதிப்பு!

**வாஷிங்டன், மார்ச் 23:**

ஹவாய் தீவில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 5,500-க்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கவின் ஹவாய் தீவுக் கூட்டங்களில் புயல் காரணமாக கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவு மிக மோசமான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

புயல் காரணமாக ஹவாயில் சில நாள்களாக பெய்து வரும் தொடர் கனமழையால் அங்குள்ள ஓஹூ மற்றும் மாய் பகுதிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், 5,500-க்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வசிப்பிடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதுபற்றி ஹவாய் ஆளுநர் ஜோஷ் க்ரீன் வெளியிட்டுள்ள விடியோ பதிவில், "புயல் காரணமாக இந்த வாரத்தில் ஓஹூ பகுதியில் 4 முதல் 6 இன்ச்-க்கு மேல் மழை பதிவாகியுள்ளது. இது மேலும் அதிகரிக்கும். ஆனால், தற்போது மாய் பகுதியை நோக்கி புயல் நகர்கிறது. இதனால், அதிகபட்சமாக 10 முதல் 12 இன்ச் வரை கனமழை பெய்யக்கூடும்.

இதுவரை உயிர்ச்சேதம் எதுவுமில்லை. ஆனால், சிலர் படுகாயமடைந்துள்ளனர். இந்தப் புயலை சாதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது" என்று தெரிவித்தார்.

நிலம் ஏற்கனவே ஈரப்பதமாக இருப்பதால் மேற்கொண்டு மழையை அவை ஏற்றுக்கொள்ளாது. இதனால், மிக மோசமான சூழல் உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

மேலும் பேசிய அவர், "புயலால் கிட்டத்தட்ட ரூ. 9,000 கோடி அளவில் பொது மற்றும் தனியார் சொத்துக்கள் சேதமடைந்துள்ளன. இதுவரை 230 பேர் வெள்ள பாதிப்பில் சிக்கி மீட்கப்பட்டனர். 120 ஆண்டுகள் பழமையான அணை ஒன்று உடையக்கூடும் என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

200க்கும் மேற்பட்ட தேசிய பாதுகாப்புப் படையினர் வெள்ளப் பாதிப்பு தொடர்பான பணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும், மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## ஹோர்முஸ் நீரிணை அருகே 1,600 கி.மீ. தாக்கி அழிக்கும் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்!

**வாஷிங்டன், மார்ச் 23:**

கடற்பரப்பில் 1600 கி.மீ. தூரம் வரை தாக்கி அழிக்கும் வகையிலான ஏவுகணையுடன் கூடிய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலை ஹோர்முஸ் நீரிணை அருகே பிரிட்டன் நிலைநிறுத்தியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பிரிட்டனின் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலான எச்.எம்.எஸ். ஆன்சன், தற்போது அரபிக் கடலில் உள்ளதாக அல்ஜஸீரா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஹோர்முஸ் நீரிணை வழியே அமெரிக்கா, ஈரான் மற்றும் இவற்றின் நட்பு நாடுகளின் கப்பல்களுக்கு அனுமதி அளிக்க மறுப்பு தெரிவித்து, ஈரான் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டு வரும் நிலையில், அமெரிக்காவுக்கு ஆதரவாக நிலைநிறுத்தப்பட்டுள்ள இந்த எச்.எம்.எஸ். ஆன்சன் நீர்மூழ்கிக் கப்பல் அப்பகுதியில் கூடுதல் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரிட்டனுக்குச் சொந்தமான இந்த எச்.எம்.எஸ். ஆன்சன் எனப்படும் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலானது 1,600 கி.மீ. தூரம் வரை இலக்கு நிர்ணயித்து அழிக்கக் கூடிய திறன் வாய்ந்த டோமாஹாக் பிளாக் 4 என்ற ஏவுகணையைக் கொண்டுள்ளது.

அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தி வருவதால் மேற்கு ஆசியாவில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. அமெரிக்கா, இஸ்ரேல் ஆதரவு பெற்ற நாடுகளுக்குச் சொந்தமான அமெரிக்க நிலைகள் மீது ஈரான் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இதனிடையே ஈரானுக்கு எதிராக அமெரிக்காவுக்கு ஆதரவளிக்கும் வகையில் லண்டன் தளவாடங்களையும் ராணுவப் படைகளையும் பயன்படுத்திக்கொள்ள பிரிட்டன் அனுமதி அளித்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக ஹோர்முஸ் நீரிணை அருகே அரபிக் கடலில் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலை பிரிட்டன் நிலைநிறுத்தியுள்ளது.

# ஹோர்முஸ் நீரிணை விவகாரம்: ஈரானை கண்டித்து 22 நாடுகள் கூட்டறிக்கை

**தெஹ்ரான், மார்ச் 23:**

வளைகுடா பிராந்தியத்தில் கடந்த 28-ந்தேதி முதல் நடந்து வரும் போர், 4-வது வாரத்தில் அடியெடுத்து வைத்திருக்கிறது. ஈரான் மீது திடீரென போர் தொடுத்து அந்த நாட்டு உச்சபட்ச தலைவர் அயதுல்லா அலி காமேனியை படுகொலை செய்த அமெரிக்காவும், இஸ்ரேலும், தொடர்ந்து அந்த நாட்டை தாக்கி வருகின்றன. இதனால் தலைநகர் டெஹ்ரான் உள்ளிட்ட பகுதிகள் நிர்மூலமாக்கப்பட்டு உள்ளன.



இந்தபோரில் தங்கள் உச்சபட்ச தலைவரை முதல் நாளிலும், அடுத்தடுத்த நாட்களில் மேலும் பல தலைவர்களையும் பறிகொடுத்த ஈரான், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு கடுமையான பதிலடி கொடுத்து வருகிறது. 3 வாரங்களுக்கு மேலாக நடந்து வரும் இந்த போரில் ஈரான் முற்றிலும் சீரழிந்து விட்டதாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தெரிவித்தார். குறிப்பாக ஈரானின் கடற்படைகள், விமானப்படைகள் அனைத்தும் நிர்மூலமாக்கப்பட்டு இருப்பதாக அமெரிக்கா அறிவித்தது.

இப்படி வெற்றிக்களிப்பில் அமெரிக்கா இருந்து கொண்டிருக்கும்போது தான் ஈரான் தனது அடுத்த ஆயுதத்தை இறக்கி விட்டது. அதாவது 4,000 கி.மீ. வரை சென்று தாக்கும் ஏவுகணையை யாரும் எதிர்பாராத வகையில் களத்தில் இறக்கி அமெரிக்காவை மட்டுமின்றி ஒட்டு மொத்த உலக நாடுகளையும் அதிர்ச்சியில் ஆழ்த்தி இருந்தது. இதன்படி இந்தியப்பெருங்கடலின் ஆழ்கடல் பகுதியில் அமைந்துள்ள சிறிய தீவான டியாகோ கார்சியாவில் இருக்கும் அமெரிக்கா-இங்கிலாந்து நாடுகளுக்கு சொந்தமான படைத்தளத்தை நோக்கி 2 ஏவுகணைகளை நேற்று வீசியது.

ஈரான் வீசிய இந்த நீண்ட தூர ஏவுகணை 'கொரம்சாகர்-4' வகையை சார்ந்தது ஆகும். நேற்று வீசப்பட்ட 2 ஏவுகணைகளாலும் சேதம் ஏற்படவில்லை என்றாலும், இந்த தாக்குதல் முயற்சியே அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளுக்கு பெரும் அதிர்ச்சியை கொடுத்து இருந்தது.

இந்நிலையில் ஹோர்முஸ் நீரிணையில் கப்பல் போக்குவரத்துக்கு விதித்த தடையை நீக்க ஈரானுக்கு 22 நாடுகள் சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் 20-க்கும் மேற்பட்ட பிற நாடுகள், ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக செல்லும் கப்பல்கள் மீதான தாக்குதல்களை ஈரான் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளன. பாதுகாப்பான பயணம் சர்வதேச சட்டத்தில் பொறிக்கப்பட்டுள்ளது என்றும் அவை கூறியுள்ளன.

இதன்படி ஐக்கிய அரபு அமீரகம், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, ஜப்பான், கனடா, தென் கொரியா, நியூசிலாந்து, டென்மார்க், லாட்வியா, சுலோவீனியா, எஸ்டோனியா, நார்வே, ஸ்வீடன், பின்லாந்து, செக் குடியரசு, ருமேனியா, பஹ்ரைன், லிதுவேனியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் தலைவர்களுடன் இணைந்து, தாக்குதல்களை நிறுத்தக் கோரி ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

அதில், "வளைகுடாவில் ஆயுதமற்ற வர்த்தகக் கப்பல்கள் மீதான ஈரானின் சமீபத்திய தாக்குதல்களையும், எண்ணெய் மற்றும் எரிவாயு ஆலைகள் உள்ளிட்ட பொதுமக்களின் உள்கட்டமைப்புகள் மீதான தாக்குதல்களையும், ஈரானியப் படைகளால் ஹோர்முஸ் ஜலசந்தி நடைமுறையில் மூடப்பட்டிருப்பதையும் நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம், தீவிரமடைந்து வரும் மோதல் குறித்து நாங்கள் எங்கள் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகிறோம். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மேற்காசிய மோதல், பதற்றம்: பிரதமர் மோடி தலைமையில் உயர்மட்ட ஆலோசனை கூட்டம்

# 8,931 நாட்கள்: இந்திய அரசாங்கத்தில் நீண்ட காலம் பதவி

# ‘எதிரிகளை தவிர மற்ற அனைவருக்கும் ஹார்முஸ் நீரிணை திறப்பு’

# 7,712 விடியல் பேருந்துகள்; 897.82 கோடி விடியல் பயணங்கள்



# தேர்தலில் வாக்களிக்க 13 வாக்காளர் அடையாள சான்று: தேர்தல் ஆணையம் அறிவிப்பு

# ஏப்.1 முதல் வங்கிகள், ஏ.டி.எம். பரிவர்த்தனைகளுக்கு புதிய கட்டணங்கள்


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com Tamilnaduepaper

சென்னை 23.03.2026 திங்கட்கிழமை இலவச இ-பேப்பர்